## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு | ரூ 1—0—0 |
| | பினங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—1—0 |
| | மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது | 0—2—0 |

**மாதிரி சஞ்சிகை இனம்.**

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வோரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.

---

## விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| உட்பக்கம் | ஒன்றுக்கு | 1-மாதத்திற்கு | ரூ. 15—0—0 |
| ,, | அரைப் பக்கத்திற்கு | ,, | 8—0—0 |
| ,, | கால் பக்கத்திற்கு | ,, | 5—0—0 |
| கவர் | 3-வது பக்கத்திற்கு | ,, | 20—0—0 |
| ,, | 4 ,, | ,, | 25—0—0 |

**இதர விவரங்களுக்கு எழுதவும்.**

மானேஜர்,

'தமிழரசு' ஆபீஸ்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

---


வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடகநூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இதன் முன் பாகத்தைச் சென்ற வருட 'தமிழரசு' இதழ்களில் தொடர்ச்சியாகப் படித்த நேயர்கள் நாள்தோறும் இப் புத்தகத்திற்கு ஆடர் செய்துகொண்டே இருக்கிறார்கள். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும் படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

**எட்டணா தான்**

சொற்பப் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநா[illegible] முதலிவீதி சென்னை.

ள்!                                                    முந்துங்கள்!!

..ர் மே. மாசிலாமணி முதலியார் எழுதிய

## அனுபவ வைத்திய நூல்

(இரண்டாம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க ..ண்டியது இன்றியமையாத தாகும். இந் நூல் வீட்டில் ..பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் ..யிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் .. இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து ..லாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், .. உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், ..ளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய .. மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலை வைத்துக்கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்தியராகலாமென்பது திண்ணம்.

முன் பதிப்பைவிட இப்பதிப்பில் அநேக விஷயங்கள் சேர்க்கப்பட்டு உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டுள்ளது. சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. முந்துங்கள்.

இதன் விலை ரூபா 2.

பழய 2-ஆம் பாகம் விலை அணா 8. தபால் சார்ஜ் வேறு.

---

உங்கள் கைரேகைப் பலன்களை நீங்களே பார்த்துக் கொள்ளலாம்.

## திரிகால ரேகை சாஸ்திரம்

(மூன்றாம் பதிப்பு)

இப்புத்தகம் தூய்மையான தமிழில் எளிய நடையில் படங்களுடன் விளக்கமாய் அனுபவ ஹஸ்த ரேகை சாஸ்திர ஆசிரியரான சக்தி தாஸரால் எழுதப்பட்டிருக்கிறது. இதைப் படித்தும், இதில் படங்கள் மூலம் விளக்கப்பட்டிருக்கும் கை ரேகைகளின் குணகுணங்களைப் பார்த்தும், ஒவ்வொருவரும் அவரவர்களின் ஆயுள், விவாகம், சந்தானம், பக்தி, அதிர்ஷ்டம், கண்டம், காரியசித்தி, இல்லற சுகம் முதலியவைகளை எல்லாம் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். இப்புத்தகம் வேண்டுவோர் பன்னிரண்டு அணா ஸ்டாம்புகள் அனுப்பி அன்ரிஜிஸ்டர் பார்சலாகப் பெற்றுக் கொள்ளலாம். வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது.

'தமிழரசு' புக்டிபோ,

31, வைத்தியநாத முதலி தெரு, ஜி. டி. சென்னை

அன்பே ஆண்டவன்

# தமிழரசி

ஒரு செந்தமிழ் மாத வெளியீ

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலி

| மலர் | ஈஸ்வரஞு ஐப்பசிமீ | இத |
|---|---|---|
| 8 | 1937ஞு அக்டோபர்மீ 15உ | 10 |

## பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| ஆசிரியர் குறிப்புகள் | ... | 571 |
| இறவனின் வீரம் | ... | 576 |
| கொச்சி சுற்றுப் பிரயாணம் | ... | 580 |
| கனம் பிரதம மந்திரி கவனிப்பாரா? | ... | 581 |
| 'கருடனும் திருடனும்' | ... | 583 |
| பத்தினி பக்தி | ... | 585 |
| ஹிந்திமொழிப் பயிற்சி ஏற்புடைத்தாகுமா? | ... | 589 |
| மதனகாந்தா | ... | 594 |
| சக்தி | ... | 599 |
| வேலையில்லாத் திண்டாட்டம் | ... | 601 |
| வாலிப உலகு வலிமை இழந்ததேன்? | ... | 605 |
| அவனும் அவளும் | ... | 612 |
| ஜைனர்களும் அவர்களது வாழ்க்கையும் | ... | 617 |
| காலத்துக் கேற்ற கோலம் | ... | 621 |
| கானகத்தில் மறைந்த காதலர்கள் | ... | 626 |



குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப
ர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும்
ர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

ம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை
துதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.




## சர்க்கரை உடன்படிக்கை

இந்திய சர்க்கார் மிக முக்கியமான விவகாரங்களில் பொது மக்கள் அபிப்பிராயத்தைத் தழுவிக் காரியம் செய்வது அரிது. அதிலும் வியாபார சம்பந்தமான ஒப்பந்தங்கள் விவகாரங்களில் பொதுஜன அபிப்பிராயத்தையும் வியாபாரிகளின் அபிப்பிராயத்தையும் அறிந்து அதன்படி நடத்தல் அரிதினும் அரிது. வியாபார விவகாரங்கள் சம்பந்தமாயும் வியாபார ஒப்பந்தங்கள் சம்பந்தமும் வியாபாரிகளின் அபிப்பிராயத்தை சிற்சில சமயங்களில் கலக்கின்றனர். அப்படிக் கலந்த காலத்தும் அவர்களின் கருத்தை பொட்டி காரியம் செய்வது என்பது இந்திய அரசாங்கத்தார் ஏட்டில் கிடையவே கிடையாது. இப்பொழுது இந்திய அரசாங்கத்தார் சர்க்கரை வியாபாரம் சம்பந்தமாய் இவ்வாண்டில் நடந்த மே மாதம் 6-ந் தேதி ஓர் அகிலதேச உடன்படிக்கை செய்துள்ளனர். அதன்படி இனி ஐந்தாண்டுகட்கு இந்தியா பர்மா நாடொன்று தவிர மற்றைய நாடுகட்கு கப்பல் மூலம் சர்க்கரை ஏற்றுமதி செய்யக்கூடாது. 'இந்த உடன்படிக்கையை உறுதிசெய்யும்படி இந்தியச் சட்டசபை கவர்னர்-ஜெனரலுக்கு சிபார்சு செய்கிறது' என்ற தீர்மானத்தை சென்ற மாதம் நடந்த இந்தியச் சட்டசபைக் கூட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் வியாபார மெம்பர் கொண்டு வந்தார். ஆனால் இந்தியச் சட்டசபையோ அத்தீர்மானத்தை மறுத்து அதை தோற்கடித்துவிட்டது. அத்தீர்மானத்திற்கு ஆதரவாய் 52 ஓட்டுக்களும் எதிரிடையாய் 66 ஓட்டுக்களும் கிடைத்தன. சர்க்கரை வியாபாரம் சம்பந்தமாய் இந்திய அரசாங்கத்தாரின் இந்தச் செய்கை மிக விபரீதமானதாகவே இருக்கின்றது. இந்திய அரசாங்கத்தாரின் இத்தகைய மனப்போக்கை நாம் அறிய முடியவில்லை. ஐந்தாண்டுகட்கு இந்தியா சர்க்கரை ஏற்றுமதி செய்யக்கூடாதென உடன்படிக்கை செய்துகொண்டதற்கு முக்கியமாய் இரண்டு காரணங்கள் கூறுகின்றனர். முதலாவது உலக மார்க்கெட்டில் ஏனையநாட்டுச் சர்க்கரைகள் மலிவாக விற்கப்படுகிறதென்றும், இந்தியச் சர்க்கரையின் விலை அதிகமாய் இருப்பதால் அது உலக மார்க்கெட்டில் ஏனைய நாடுகளுடன் போட்டி போட முடியாதென்றும் கூறுகின்றனர். இரண்டாவது விலைவாசி ஒரு மட்டான நிலையில் நிற்பதற்கு அகில தேசங்களுடன் ஒத்துழைக்க

வேண்டுவது அவசியம் என்கின்றனர். முதலாவது கூறப்படும் காரணத்தை, இந்திய அரசாங்கத்தாரின் வரவு செலவு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் சர்க்கரைக்கு விதித்து வந்த சர்ஜார்ஜ் வரியை நீக்கி அந்தருக்கு ரூ. 1—5—0 ஆக இருந்த எதிர்வரியை இரண்டு ரூபாய்களாக உயர்த்தியதற்கு கூறிய காரணங்களோடு ஒத்திட்டுப் பார்ப்பபோமானால், இது நமக்கு விடா நகைப்பையே தரும். சர்க்கரைக்கு பாதுகாப்பு வரி விதித்து பாதுகாப்பு அளித்த பின் கேளாதே பூக்கும் ஆம்பிகள் (காளான்கள்) போன்று சர்க்கரை ஆலைகள் தோன்றிவிட்டனவென்றும், அதனால் சர்க்கரை விலை இறங்கிவிட்டதென்றும், இனியும் இந்த நிலைமையிலேயே வைத்திருந்தால், அதன் விலை மிகவும் இறங்கி சர்க்கரை வியாபாரத்தை லாபமில்லாத வியாபாரமாக்கி விடும் என்றும் கூறினர். ஆனால் இப்பொழுதோ இந்திய சர்க்கரையின் விலை உலக மார்க்கெட்டில் சர்க்கரை விற்கும் விலையைவிட அதிகமாய் இருப்பதால், அது அயல்நாட்டுச் சர்க்கரைகளுடன் போட்டி போட முடியாதென்றும் கூறுகின்றனர். முன்னர் [illegible] மலிவாகும்போது, அவ்விதமான விலை கட்டுபடியாகாத வியாபா[illegible]மாகிவிடும், அதனால் எதிர்வரியை உயர்த்தி விலையை நிதானம்படுத்த வேண்டுமென்றனர். பின்னர் இப்பொழுதோ இந்திய சர்க்கரையின் விலை மிக அதிகம், அதனால் அது உலக மார்க்கெட்டில் போட்டி போட முடியாது, ஆதலால் அதை ஏற்றுமதி செய்வதை நிறுத்த வேண்டுமென்கின்றனர். இந்த தர்க்க சாஸ்திரத்தை நாம் அறிய முடியவில்லை. உலக மார்க்கெட்டில் இந்திய சர்க்கரையைவிட மற்றையநாட்டுச் சர்க்கரைகள் மலிவாக விற்கப்படுகின்றன என்பதும் பொருந்தாத வாதமாகவே இருக்கிறது. இந்திய அரசாங்கத்தாரின் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய அங்கத்தினர்கள் எல்லாம் ஜாவா நாட்டுச் சர்க்கரை ஒன்று தவிர ஏனைய நாடுகளின் சர்க்கரையின் விலை மிகவும் அதிகமாகவே இருக்கிறதென்று எடுத்துக் காட்டினர். எனவே விலை வாசியை முன்னிட்டு ஏற்றுமதி செய்யக் கூடாதென்னும் கூற்று பொருத்தமுடையதல்ல பல நாடுகளில் உதாரணமாக போலந்து, பெரு, ஜெர்மெனி செக்கோசிலாவாக்கியா முதலிய நாடுகளில் அந்நாட்டு அரசாங்கங்கள் சர்க்கரை இறக்குமதிக்கு பெரும் வரிகள் விதித்திருப்பதுடன் சர்க்கரை உற்பத்தித் தொழிலுக்கு பண உதவிசெய்தும் வருகின்றன. அப்படியிருந்தும் அந்நாடுகளின் சர்க்கரையின் விலை அதிகமாகவே இருக்கின்றது. இந்திய சர்க்கரைத் தொழிலுக்கோ இந்திய அரசாங்கத்தார் அவ்விதமான ஆதரவு எதுவும் காட்டவில்லை. அந்த நிலையிலே இந்திய சர்க்கரையின் விலை அந்நாடுகளின் சர்க்கரையின் விலைக்குச் சற்றேறக்குறைய சமமாக இருக்கிறது. இந்திய சர்க்கார் இந்திய சர்க்கரைத் தொழிலுக்கு அந்நாட்டு அரசாங்கங்கள் அளிப்பதுபோன்ற ஆதரவு அளித்தால் இந்திய

சர்க்கரை வியாபாரம், உலக மார்க்கெட்டில் பெருகும் என்பதற்கு ஐயமே இடையாது. ஆனால் இந்திய அரசாங்கத்தார் அவ்விதம் செய்வார்களா?

இரண்டாவதாக கூறப்படும் அகில தேசங்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதை ஆராய்ந்து பார்ப்போம். உலக மார்க்கெட்டில் விலைவாசியை ஒரு நிலையுள்ளதாக்க அகில தேசங்களுடன் ஒத்துழைக்க வேண்டுவது அவசியந்தான். ஆனால் அதற்காக இந்தியா சர்க்கரை ஏற்றுமதி செய்யவே கூடாது, அதுவும் ஐந்தாண்டுகட்கு ஏற்றுமதி செய்யவே கூடாது என்று நிபந்தனைகளை ஏன் ஏற்படுத்த வேண்டும்? வேண்டுமென்றால் இவ்வளவுக்குமேல் இந்தியா ஏற்றுமதி செய்யக் கூடாது என்று நிபந்தனை செய்யலாம். அதைவிட்டு அறவே ஏற்றுமதி செய்யக் கூடாதென்று ஏன் நிபந்தனை யிடவேண்டும்? இன்னும் இந்தியா ஏற்றுமதி செய்யக்கூடாதென நிபந்தனை வாங்க முற்பட்டவர்கள், அதற்கு வேறு ஒருவகையிலாவது நியாயம் வழங்கி இருக்கவேண்டும். அதாவது அந்த ஐந்தாண்டுகட்கு ஏனைய நாடுகள் இந்தியாவுக்கு சர்க்கரை ஏற்றுமதி செய்யக்கூடாதென்றாவது ஒரு சலுகை காட்டி இருக்க வேண்டும். அவ்விதமும் செய்ய வில்லை. இப்படிப்பட்ட உடன்படிக்கையை இந்தியா எங்ஙனம் ஒப்புக் கொள்ளும்? இந்தியாவுக்கு நியாயமே வழங்காத, ஒருவித நன்மை யுமே நல்காத உடன்படிக்கையை இந்தியச் சட்டசபை உறுதிப் படுத்த மறுத்துவிட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால் அரசாங்க சபையோ இதற்கு நேர்மாறாக ஓட்டுச் செய்துள்ளது. உத்தியோக அங்கத்தினர்களும் நியமன அங்கத்தினர்களும் அதிகமாய் இருக்கும் அச்சபையினிடம் இதைத் தவிர வேறொன்றையும் நாம் எதிர் பார்க்க முடியாது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் பெரும்பாலோர் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிரிடையாக ஓட்டுச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. இனி அரசாங்கம் இந்தியச் சட்டசபையின் தீர்மானத்தின்படி நடக்கப் போகிறதா அல்லது அரசாங்க சபையின் தீர்மானத்தின்படி நடக்கப் போகிறதா என்பதே கேள்வியாம். இந்தியச் சட்டசபையின் முடிவே பொதுஜன முடிவாகும் என்பதை அரசாங்கம் நன்கு உணரும். எனவே அரசாங்கம் அதன்படி நடக்குமா?

## வாழ்க சேலம்

சேலம் ஜில்லாவில் கள்ளரக்கன்மீது படையெடுத்தாகிவிட்டது. அங்கு அக்டோபர் முதல் தேதி முதல் மதுவிலக்கு அமுலுக்கு வந்துவிட்டது. அரசாங்கத்தார் அது வெற்றி பெறுதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்துள்ளார்கள். ஆனால் ஐரோப்பியர் களைமட்டும் அயல்நாட்டு மதுபானம் வாங்கிப் பருக, அதாவது

புட்டிகளில் அடைத்து விற்கப்படும் மதுபானங்களை வாங்கிவைத்துக் கொண்டு உபயோகிக்க அனுமதிக்கப்படும். போலீஸ்காரர்களில் குடிப்பழக்கமுடைய சுமார் ஐம்பது தாணுக்காரர்களை வேறு ஜில்லாகட்கு மாற்றிவிட்டனர் அதற்குப் பதில் குடிப் பழக்கமில்லாத தாணுக்காரர்களை அந்த ஜில்லாவிற்கு மாற்றிவிட்டனர். மற்றும் ஏதோ சிற்சில சமயங்களில் குடிக்கும் பழக்கமுடைய போலீஸ் ஆபீசர்களிடமிருந்து, இனி அவர்கள் குடிப்பதில்லை என்ற பிரமாணம் வாங்கப்பட்டிருக்கிறது போலீஸ் அதிகாரிகளும் ஜில்லா அதிகாரிகளும் இந்தப் படையெடுப்பை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்ற ஊக்கத்துடனே வேலை செய்வதாகத் தெரிகிறது. ஆனால் இம்மாதிரியான காரியம் வெற்றி பெறுவதற்கு எல்லாவற்றையும்விட பொது மக்களின் ஆதரவே மிகுதியும் வேண்டும். அந்த ஆதரவு வேண்டுமளவுக்கு இருக்கிறது. மதுவிலக்குப் பிரசாரத்துக்காக பொதுமக்கள் ஜாத்தா ஒன்றும் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறது. எல்லாவற்றையும்விட பெண் மக்கள் இதில் மகிழ்ச்சியுடன் பேருக்[...] காட்டுகிறார்கள். எனவே இந்தப் படையெடுப்பில் கள்ளரக்கன் வீழ்ந்துபடுவான் என்று திண்ணமாய் நம்புகிறோம். இவ்விதம் கள்ளரக்கனை வென்று சேலம் ஜில்லா இம்மாகாணத்திலுள்ள மற்றைய ஜில்லாகட்கு மட்டுமேயன்றி ஏனைய மாகாணங்கட்கும் வழிகாட்டியாய் விளங்குவதாக. வாழ்க சேலம். வீழ்க கள்ளரக்கன்.

## ஒரு யோசனை

கடந்த சிலவாண்டுகளாக நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுவதை யொழிக்கவேண்டும் என்ற கிளர்ச்சி இருப்பது எல்லோர்க்கும் நன்கு தெரிந்ததே. இந்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் அதை ஒப்புக்கொண்டு, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஏதோ சொற்ப சகாயங்கள் செய்தனரே அன்றி அந்தத் திண்டாட்டத்தைப் போக்க தீவிர முயற்சி ஒன்றும் செய்திலர். நமது சர்க்காரோ அந்த சொற்ப சகாயங்கள் கூட அளிக்கவில்லை. ஆனால் இருதடவை வேலையில்லாதாரின் புள்ளி விபரம் எடுக்க முற்பட்டனர். அதில் அவர்கள் வெற்றிபெறவில்லை. அதில் அவர்கள் வெற்றி பெறாமைக்குக் காரணம் அரசாங்கம் ஏதாவது செய்யும் என்ற நம்பிக்கை பொதுமக்கட்கு இல்லாது போனதே யாகும். இப்பொழுது காங்கிரஸ் மந்திரி சபை அதே வேலையைச்செய்ய முன்வந்துள்ளது. முதற்கண் அது மலையாளம், திருநெல்வேலி, வடஆற்காடு, அனந்தபூர், சித்தூர், விசாகப்பட்டணம் முதலிய ஆறுஜில்லாக்களில் வேலையில்லாதாரின் புள்ளி விபரங்களைச் சேகரிக்க உத்திரவிட்டுள்ளது. காங்கிரஸ் மந்திரி சபை

பிடம் பொதுமக்கட்கு நம்பிக்கை இருப்பதால் இம்முயற்சியில் அது வெற்றிபெறும் என்றும், புள்ளிவிபரங்களைச் சேகரித்த பின்பு, அது அதற்காவன செய்யும் என்றும் நம்புகிறோம். ஆனால் நாம் இங்கு ஒன்று குறிப்பிட விரும்புகிறோம். வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குவதற்கு படித்தவர்களும் கிராமங்கட்குச் சென்று உழுது பயிரிடல் வேண்டும் என்றும், புதிய கைத்தொழிற்சாலைகள் காணவேண்டும் என்றும், கிராமப்புனருத்தாரண சேவையில் வீடுபடல் வேண்டும் என்றும், இன்னும் பற்பல விதமான யோசனைகள் கூறப்படுகின்றன. ஆனால் நமது நாட்டில் வளமுள்ள காடுகள் இருக்கின்றன. அதை இவ்வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க பயன்படுத்திக் கொள்ள முடியுமாவென்று கிஞ்சிற்றும் யோசிக்கப்படவில்லை. காட்டிலுள்ள வளத்தை நாம் நன்றாக கையாள முயன்றால் அதனால் அரசாங்கத்தாருக்கு வருவாய் கிடைப்பதுடன் மிகப் பெரும்பாலர்க்கு வேலையும் கிடைக்கும். தற்பொழுது காட்டில் வளரும் சந்தன மரங்களிலிருந்து சந்தன எண்ணெய் எடுக்கக்கூட நமது அரசாங்கத்தார் தகுந்த சாலை ஒன்று ஏற்படுத்தவில்லை. அதற்கு சாலை ஒன்று ஏற்படுத்தின் அதில் பலருக்கு வேலை கிடைப்பதுடன் எண்ணெயை விற்பதால் அரசாங்கத்தாருக்கும் நல்ல ஊதியம் கிடைக்குமன்றோ! இப்படியே காட்டில் காணும் பொருள்களை எப்படி உபயோகித்தால் அதில் அரசாங்கத்திற்கு ஊதியம் கிடைக்கும் என்று ஆராய்ந்து பார்த்து, அந்த முறையைக் கையாண்டால் அதில் பலருக்கு வேலை கொடுக்க முடியுமன்றோ? இவ்விதமாக காட்டு வளப்பத்தை பயன்படுத்திக் கொள்ள கானடா தேசம் முற்பட்டது. அதனால் அந்நாட்டு அரசாங்கத்திற்கு சென்ற ஆண்டில் 26½ கோடி டாலர்கள் வருமானம் கிடைத்திருக்கின்றனவாம். இதற்குமுன் அதாவது உலகெங்கும் வியாபாரபந்தம் ஏற்படுமுன் சுமார் 40 கோடி டாலர்கட்குமேல் கிடைத்திருக்கின்றனவாம். இப்பொழுது இங்கிலாந்திலும் இம்மாதிரியாக காட்டுவளப்பத்தை பயன்படுத்திக்கொள்ள முற்பட்டுள்ளனர். அங்கு 1400. ஏக்கர் காட்டு நிலங்களில் புதிதாய் மரம் வளர்த்து அதன்மூலம் வருவாய்க்கு வழிசெய்துள்ளனர். அதில் வெற்றியுமடைந்துள்ளனர். நமது அரசாங்கத்தாரும் ஏன் அவ்விதம் செய்யக்கூடாது? அவ்விதம்செய்ய முற்படுவதால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்க வழிஏற்படுவதுடன், அதனால் வரும் ஊதியத்தினால், அரசாங்கத்திற்கு வருவாய் குறைந்து போவதால் மதுவிலக்குச்செய்ய முடியாதிருக்கிறது என்னும் குறையையும் நீக்கிக்கொள்ள சாத்தியப்படுமன்றோ?

# 'சிறுவனின் வீரம்'

[கா. தி. ஸ்ரீ.]

இத்தாலியா தேசத்தின் வடபாகத்திலே 'லாம்பர்டி' என்று ஓர் மாகாணம் உள்ளது. இது 'ஆல்ப்ஸ்' என்ற மலையடிவாரத்தில், செழிப்பும் அழகும் மிக்கு விளங்குவதால் 'ஐரோப்பியத் தோட்டம்' (Garden Europe) என்று பெருமையாகச் சொல்லப்படுகின்றது. ஆல்ப்ஸில் ஆங்காங்கே அநேக பள்ளத்தாக்குகளும், நீர்ச்சுனைகளும், உஷ்ண நீர் ஊற்றுக்களும், மலையருவிகளும், சிகரங்களில் வெள்ளிக்கட்டிகளென விளங்கும் பனிக்கட்டிகளும் காணப்படுகின்றன. அவைகளோடு 'ஹோல்ம்', 'ஓக்', 'ஹோலி', 'மிர்ட்டில்' என்ற பலவித மரங்கள் அதிக உன்னதமாய் சர்வகாலமும் பச்சையாயிருக்கின்ற கனத்த சிறிய இலைகளை யுடையதாய் கும்பல்கும்பலாக வளர்ந்திருக்கின்றன. மலைமீதுள்ள பனிக்கட்டிகள் இளகி பாறைபாறைகளாகப் பெயர்ந்து மரஞ் செடிகொடிகளை முறித்து முன் தள்ளிக் கொண்டு வேகமாய் இறங்குகின்றன. மலை ஏரிகள் சிற்சில இடங்களில் நீலநிறத்துடன் அழகுபெற்று கண்களுக்கினிய காட்சியைத் தருகின்றன. இவைகளில் 'போ' என்ற நதியும் 'கோமோ' என்ற அழகிய ஏரியும் லாம்பர்டியை அழகு படுத்துவனவாகும்.

ஆல்ப்ஸைச் சுற்றிலும் கிழக்கே 'ஆஸ்டிரியா' மேற்கே 'பிரான்ஸ்' வடக்கே 'சுவிட்ஸர்லந்து' 'ஜர்மெனி'யுமாகிய தேசங்கள் இருக்கின்றன. லாம்பர்டிக்குக் கிழக்கே 'வெனீஷியா' மேற்கே 'பிட்மாண்ட்.' தெற்கே 'எமிலியா' 'டியூஸ்கனி' 'மார்ஷஸ்' முதலிய மாகாணங்கள் இருக்கின்றன. பிட்மாண்டில் 'ஜினிவா'யென்ற அழகிய நகரத்தில்தான், அமெரிக்காவைக் கண்டுபிடித்த 'கொலம்பஸ்' பிறந்ததாகக் கூறப்படுகிறது. வெனிஷியாவில் அழகிய, வியாபாரத்தில் சிறந்த வெனீஸ் பட்டணமிருந்ததாகச் சொல்லப்படுகிறது. டியூஸ்கனியில் 'பைசா' நகரத்திலுள்ள சாய்ந்த கோபுரத்தைக் கண்டுதான் 'கலிலேயோ' என்ற மகான் கடிகாரயந்திரத்தைக் கண்டுபிடித்த

நாகத் தெரிகிறது. இவைகள் தவிர ஆங்காங்கே சிற்சில கிராமங்களும் மரங்களடர்ந்த-கும்பல்களினிடையே தோன்றியிருந்தன.

சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன்பு இவ்வித ஒப்புயர்வற்ற மாகாணங்களை ஆஸ்டிரியர்கைப்பற்றி தெற்குநோக்கிக் கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறி தம் சுவாதீனத்திலாக்கிக்கொண்டு வந்தனர். அவர்கள் மரங்களடர்ந்த புதர்களில் பதுங்கியிருந்து துப்பாக்கி வெடிகளைப் பிரயோகித்து ஜனங்களை இம்சித்து வந்ததால் குடிகள் தத்தம் வீடுவாசல், பெண்டுபிள்ளை, சொத்து சுகம் முதலியவைகளை விட்டு விட்டு தப்பித்துக்கொள்ள தென்திசை நோக்கி ஓடினர். இதனால் அநேகங் கிராமங்கள் பாழ்பட்டுப் போயின.

இத்தகைய துன்பங்களைப் பொறுது, சில இத்தாலியப்படைகள் காலாபக்கமும் பாவி பகைவர்களைத்தேடித் தாக்கிவந்தனர். அதில் ஒருபடை எமிலியாவைச் சேர்ந்த 'சான்மாரினோ' என்ற ஊருக்கு வந்தது. ஓர் கிராமத்தை அணுகியதும் எதிரிகளின் ஒளிவு கண்டறியவேண்டி உட்புகுந்து பார்க்கையில் ஜனசஞ்சாரமற்ற ஒரு குடிசையில் தேசியக்கொடி பறந்துகொண்டிருப்பதைக் கண்டனர். அதனால் அதுவரை அப்பக்கம் ஆஸ்டிரிய எதிரிகள் வரவில்லையென்று யூகித்து, படைத்தலைவன், ஓர் உன்னத கட்டடத்தின் மேலேறி நான்கு பக்கமும் நோக்கினான். மரங்களால் மறைக்கப்பட்டு ஒன்றும் தோன்றாததினால் கீழிறங்கி மனவாட்டத்துடனிருக்கையில் சுமார் பன்னிரண்டு வயதுள்ள ஓரிளம் பையன் முன்தோன்றினான்.

அவன் முகத்தில் வீரலக்ஷ்மி தாண்டவமாடினாள். கையில் ஏந்திய சிறுகத்தியால் ஒரு கழியை ஈட்டிபோல் சீவிக்கொண்டே நின்றான். அப்பொழுது வீரன், 'சிறுவனே; நீயார், இங்கு தனித்து நிற்கக் காரணமென்ன?' என்று வினவ 'தலைவ, நான் லாயபர்டியைச் சேர்ந்தவன். எதிரிகள் இவ்வழியாக வந்தால் எதிர்த்து என் வீரத்தைக் காட்டக் காத்திருக்கிறேன். உங்களுக்கு ஆகவேண்டியது என்ன! என்றான் சிறுவன்.

'அப்பா, நீ மிகவும் புத்திசாலி; மகாதீரன்; உனக்கு மரமேறத் தெரியுமா? தூரத்திலுள்ள பொருள்களை நன்றாய் காணமுடியுமா?' என்று வினவினான் தலைவன். 'ஆம்' எனவே, அருகிலுள்ள உயர்ந்தோர் மரத்தைக்காட்டி; அதன்மேலேறி பகைவரிருக்கும் நிலைமையை அறிந்து சொல்லச் சொன்னான் வீரன். பையன் தனது கச்சையை இறுகக்கட்டி, தன் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு, உற்சாகத்துடன் மரமீதேறி ஒரு நிமிஷநேரத்தில் உச்சியை அடைந்தான். அப்பொழுது காற்று பலமாய் வீசியதால் தலைவன் சிறுவனை விளித்து, 'அன்பனே, ஜாக்கிரதை. கொப்பைப் பிடித்துக்கொள்.

கீழேவிழுந்து விடாதே' என்று எச்சரிக்கைசெய்து தன் குதிரையின் மேலே சாய்ந்த வண்ணமாய் உயரே நோக்கிக்கொண்டிருந்தான்.

பையன் வடதிசையில் கூர்ந்துநோக்கி, 'தலைவ, இரண்டு குதிரை வீரர்கள் துப்பாக்கிகளுடன் அரைமைல் தூரத்திலிருக்கிறார்கள்' என்றான். 'மேற்கே பார்' என்றான் தலைவன். அப்பொழுது எதிர்பாராதவிதமாக ஒருகுண்டு மரத்தின் உச்சியில் உராய்ந்து பாய்ந்தோடியது. தலைவன் பயந்தவனாய், 'அப்பா கீழிறங்கு, எதிரிகள் பார்த்து விட்டார்கள் போலும்; பதறாமல் இறங்கு சீக்கிரம்' என்றான். 'அதற்கென்ன, பாவாயில்லை; மேற்கே சமீபத்திலே எதிர்ப்படைகள் வெண்ணிற வுடையுடுத்தி கத்திகள் சொருகிய துப்பாக்கிகளுடன் சூழ்ந்திருக்கின்றனர்' எனவே, சிறுவனின் தலைக்கு மேலாக மற்றுமோர் குண்டு பறந்துசென்றது. 'அப்பா, போதும் போதும் ஆபத்து வந்துவிட்டது. இறங்கு, இறங்கு' என்று துடிதுடித்தான் படைத்தலைவன்.

'ஐயா, பயமில்லை மரம் என்னைக் காக்கும்; இன்னும் அறிய வேண்டுவது என்ன? விரைவில் சொல்லுங்கள், பார்க்கிறேன்' எனவே 'இடதுபக்கம் பார்' என்றான். 'இடதுபக்கம் ஒன்றும் தெரியவில்லை. மேல்திசையில் படைகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன' என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, விண்ணில் வேறொரு குண்டு விர்ரென்று பறந்துவந்தது. அவ்வளவுதான், உச்சியிலிருந்த பையன் கொப்புகளில்தட்டி தரையில் தடாலென வீழ்ந்தான். இரத்தம் பீரிட்டது. அவனது அறிவுமயங்கியது. தலைவனும் மற்றவீரர்களும் மனம் பிரமித்து நின்றனர். அப்பொழுது தலைவன், பையனை அணுகி சட்டையைக் கழற்றிப் பார்க்கையில் மார்பில் குண்டு பாய்ந்திருப்பதைக் கண்டான். 'ஐயோ உனது தைரியமே தைரியம்; வீரஇளஞ்சிங்கமே, உன்கடமையை முடித்து விட்டாயோ' என்று பலவாறு பிதற்றி, அவனைத் தனது மடிமேல் சார்த்தி, 'அப்பா, கவலையுறாதே; நீயே உத்தம தியாகி, உன்மனம் சாந்தியடைகுக' என்று தேறுதல்கூறி அவனது முகத்தைத் தடவிக் கொண்டிருந்தான். அப்பொழுது சிறுவன் மலர்ந்த முகத்துடன் தலைவனை ஒருதரம் உற்றுநோக்கியபின் கண்களை மூடியபடியே சுவர்க்கம் எய்தினான்.

அருகில் நின்ற வீரர்களின் கண்களில் நீர்ததும்பியது. பையனின் திடநெஞ்சத்தைக்கண்டு ஊக்கமெய்தினர். அவர்களின் மனதில் புதியதோர் உணர்ச்சி குடிகொண்டது. அப்பால் பையனை— பசும் புல்தரையின்மேல் கிடத்தி அவனுடைய சாமான்களை அருகில் வைத்து வீரமாலைசாத்தி இராணுவ மரியாதைகளைச்செய்து அப்

பால் ஏகினர். அத்தடவை உண்டான பெரும்போரில் அவர்கள் ஜயம்பெற்று தங்கள் தேசத்தை எதிரிகளிடமிருந்து விடுதலைசெய்து, மேன்மையடைந்தனர். வீரச்சிறுவனின் ஞாபகார்த்தமாக ஒரு கற்சிலைகட்டு அதனை இன்றும் வணங்கி வருகின்றனர் இத்தாலியர்.

தாய்நாட்டின் அடிமை விலங்கை நிவர்த்திக்கும் பொருட்டு தனது உயிரையும் தியாகம்செய்த சிறுவனின் வீரத்தைப் பார்த்தீர்களா! என்னே! அவனது தேசபக்தி!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

முத்துவிநாயகர் ஸ்டோர்,
கல்லல் S. I. R. (இராமநாதபுரம் ஜில்லா)

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொழும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

A. N. லெட்சுமணன் செட்டியார்,
வலம்புரி. வலையபட்டி
பொன்னமராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

A. V. A. R. ADYCAPPA CHETYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

# கொச்சி சுற்றுப் பிரயாணம்

[டாக்டர் மே. மா.]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

எர்ணுகுளம் என்ற ஊரின் கடலோரத்திலே புதிய ரோடுகள் அமைக்கப்படுகின்றது. கொச்சி என்பது ஒரு தீவு. கொச்சிக்கும் எர்ணுகுளத்திற்கும் மத்தியில் செயற்கைத் தீவு உண்டு பண்ணி ஊர்பர் ஒன்றுட்டப்பட்டு வருகிறது. 1940-ம் ஆண்டிற்குமேல் கொச்சி துறைமுகம் ஒரு பெரிய துறைமுகமாகவும், எர்ணுகுளம் பெரிய வியாபார ஸ்தலமாகவும் மாறும். இதனை யுத்தேசித்தே ரயில்வே அதிகாரிகளும் கொச்சி மெயில் என்ற ஒரு மெயில் புகைவ[illegible] இம்மாதத்திலிருந்து விட்டுவருகிறார்கள். லண்டன் நகருக்குச் செல[illegible] பிராணிகள் இனி கொச்சியிலிருந்து கப்பலேறுவார்கள். ஸ்பென்சர் கம்பெனியாரால் அங்கு ஓட்டல் கட்டப்பட்டிருக்கிறது.

மலையாள ராஜ்ஜியத்தில் பிராமண வகுப்பிற்கு அதிக செல்வாக்கிருக்கின்றது. ஒவ்வொரு பெரிய ஆலயங்களிலும் ஷை யார்களுக்கு சாப்பாடு கிடைக்கிறது. தவிரவும் மனைவிகளும் அகப்படுகின்றனர். பிராமணன் பிரசாதிப் பெண்ணை ஆசரிப்பானேயானால் அவன் இஷ்டத்தை பூர்த்தி செய்வது புண்ணியம் என்று நினைக்கின்றனர். ஆதலால் ஒரு ஜாதியினரை பொலி காளைகளைப்போல் அத்தேசம் போற்றுகிறது.

கொச்சி அரண்மனையில் நம்பூதரி பார்ப்பனர்கள் அதிகம் காணப்படுகின்றனர். விசாரித்ததில் அரசகுடும்பப் பெண்கள் நம்பூதரிமார்களைத்தான் மணம் செய்துகொள்ளவேண்டுமாம். அவர்களுக்கு பிறக்கும் பிள்ளைகள்தான் பட்டத்திற்கு வரமுடியும் என்றும், ராஜகுமாரிகட்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகள் வெளியில் பெண் தேடிக்கொள்ளவேண்டும் என்றும், பெண் பிள்ளைகளுக்கு மாத்திரம் நம்பூதரிமார்தான் புத்திரதானம் செய்விக்கவேண்டும் என்றும் சொன்னார்கள். இதுகொண்டு ஒரு வகுப்பார் நிலையை சொல்லாமலேயே அறிந்துகொள்ளலாம். இந்நூற்றாண்டிலும் இப்படியிருக்குமானால் முன்னூற்றாண்டுகளில் எப்படி இருந்திருக்கும் என்பதை யூகித்து உணரவேண்டியவர்களாயிருக்கின்றோம்.

மலையாள தேசத்தில் கிருஸ்தவ மதஸ்தர்கள் பெரிய வேலையை செய்திருக்கின்றனர். அதை ஒருவரும் மறக்க முடியாதபடி ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் கிரிஸ்துவ பாடசாலைகளை ஏற்படுத்தி கல்வித்துறையில் முன்னேற்றமடையச் செய்துவிட்டார்கள். அநேகர் கிருஸ்தவமதத்தைத் தழுவி இருக்கின்றனர். என்னைக் கேட்டால் எல்லாரும் கிருஸ்துமதத்தைச் சார்ந்தாலும் அந்நாட்டுக்கு நலமென்றே சொல்லுவேன். ஏனெனில்

# கனம் பிரதம மந்திரி கவனிப்பாரா?



விவசாயிகளின் நிலக்கடன் மசோதாவை சில ஏழை விவசாயிகள் (கடன்பட்டவர்கள்) நன்மை என்று எண்ணலாம், சிலர் தீமை என நினைக்கலாம். யார் எப்படி நினைத்தாலும் அறிவுடைய மக்கள் இந்த மசோதாவை சீர்தூக்கிப் பார்க்கவேண்டியது அவசிய மாகும்.

கடன்வாங்கிய விவசாயிகளுக்கு வாரண்டில்லை, ஜப்தி இல்லை, கடனை வசூலிப்பதற்கு ஒருவருடம் வாய்தா தரவேண்டும் (இதற்குள் அரசாங்கம் கடன் கொடுக்கும்) என்ற மசோதா தீர்மானத்துக்குவந்தால் குடிகள் க்ஷேம மடைவார்களா என்பதை முதலில் யோசிக்கவேண்டும். அப்படி யோசிக்கும் போது கடனை நான்தவணை சாத்தியமேயொழிய கடனைத்தீர்க்க மார்க்கமில்லை. மேலும் இம்மசோதா பாசாய்விட்டால் விவசாயிகளின் நிலைமை மிகமோசமாய் விடும்.

---

விவசாயிக்கு ஒருவரும் கடன் கொடுக்கமாட்டார்கள். ஒரு ரூபாய் கடன் வேண்டுமானாலும் எவரும் கொடுக்க முன்வரமாட்டார்கள். ஆதலால் கடன்வாங்கி இன்திகட்டும் தற்கால வழக்கத்திற்கு பாதகம் உண்டாகும். கவர்ன்மெண்ட் கிஸ்தி ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு, எப்ரலில் முடிவடைய

---

அன்னாட்டில் ஒரு வகுப்பார் செய்துவரும் காரியங்களைப் பார்த்த எவரும் நான் நினைப்பது சரி என்றே நினைப்பர்.

மலையாள தேசத்தில் பெண் பிள்ளைகள் அதிகமாய் படித்திருக்கின்றனர். அப்படியிருந்தும் அவர்களின் முன்பழக்கம், அடிமை வாழ்க்கையை கையாளச் செய்கின்றது. அனேகர் கூலிவேலைசெய்து பிழைக்கின்றனர். ஆதலால் மலையாள தேசத்தில் கூலியாட்கள் நயமாய் கிடைக்கின்றனர். அவர்களின் வாழ்க்கையும் எளிய முறையாகவே காணப்படுகின்றது. மலையாள தேசத்திய வழக்கத்தைப் பார்த்தால் அன்னாட்டில் விதவைப் பெண்களோ அல்லது புருஷனுக்காக தேடித்திரியும் பெண்களோ அதிகம் இல்லை. மணச்சடங்கும் வெகு சுலபம், மணமாற்றமும் வெகு சீக்கிரம். ஆதலால் விதவைப்பெண்கள் இல்லை. மேல்வகுப்பார் எனப்பட்டவர்கள் செய்து இருக்கும் லீலாவினோதமான சட்டதிட்டமானது அன்னாட்டுப் பெண்கள் புருடனோடு அன்னியோன்னியமாய், சர்வ சுதந்திரமாய் வாழ இடமாமல் இச்சையை பூர்த்திசெய்வதற்காகவே தற்காலிக நாயகனாக புருடனைப் பாவித்து வாழ்க்கையை நடத்தச்செய்கின்றது. சொத்துரிமை பெண்ணுக்கு ஏற்பட்ட நாடானதால் தங்கள் வீட்டிலேயே வாழ்ந்து வருகின்றனர். (தொடரும்)

வேண்டியிருக்கிறது. கிராம முனிசீபும் கலெக்டரும் வரிவசூலுக்க பிப்ரவரியி லேயே நிர்பந்தப்படுத்த ஆரம்பித்து விடுகின்றனர். தானிய அறுவடை மார்ச்சு, எப்ரல் மாதங்களுக்குப் பிறகு ஏற்படுகின்றது. அறுவடையானதும் நெல் விற்க முடிவதில்லை. அப்படி விற்றால் அனியாய விலைக்கு ஈரநெல் விற்க ஏற்படும். கடன் வாங்காமல் ஜனவரியில் கிஸ்திகட்ட சாத்தியமில்லை. இந்த நிலையில் விவசாயி என்ன செய்யமுடியும்? கடனோ கிடைக்காது. கொடுப்பவர் மசோதாவால் கொடுக்கமாட்டார், என் செய்வது?

இத்தகைய நெருக்கடி கட்டாயம் உண்டாகிவிடும். அதுசமயம் நிலங்களை விவசாயிகள் இக்கொடிய மசோதாவால் ஒன்றுக்குக் காலாக விற்க வேண்டிய தாகும்.

எனவே இம்மசோதாவானது விவசாயிகளது கஷ்டத்தை நிவர்த்திக்க மாட்டாது.

விவசாயிகள் தற்கால நிலைமையில் பகலில் கூழும் இரவில் தண்ணீரும் சோறும் சாப்பிட்டுக்கொண்டு 4 முழ வேட்டியுடன் வாழ்க்கையை நடத்தி வந்தும், நிலவரிகட்ட சாத்தியப்படாமல் கடன் வாங்கிக்கொண்டே வருகிறார் கள். எனவே, அவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்ய வேண்டுமா[னால்] குறித்த அளவுக்கு வரியைத் தள்ள மசோதா கொண்டுவருவதே நலமாகும்.

வியாபாரியோ, உத்தியோகஸ்தரோ, வட்டிக்காரரோ, பாங்கரோ, இதர தொழிலாளியோ வருடம் ஒன்றுக்கு 2000 ரூபாய்க்குக் குறைவாய் சம்பாதித் தால் அவருக்கு யாதொரு வரியும் விதிக்காதிருந்தால் அவர்கள் சுகமாக வாழலாம்.

விவசாயி, தானும் தன் மனைவியும் ஒரு ஜதைமாடும் கஷ்டப்பட்டு வருடம் 100 ரூபாய் சம்பாதிக்கிறான். இப்படிப்பட்ட நிலையில் அவன் 36 ரூபாய் தீர்வை கட்டவேண்டும் என்று ஏற்பட்டுள்ள முறை இருக்கும்வரையில், அவன் எப்படி கடனில்லாமல் வாழ முடியும்?

ஆதலால் குறைந்தபக்ஷம் 5 ஏக்கர் நிலம்வைத்திருப்பவர்களுக்கு சர்க்கார் தீர்வையை நீக்கவேண்டுமாய் மசோதா கொண்டுவந்து நிறைவேற்றினால் விவசாயிகளுக்கு நன்மை செய்ததாகும்.

இதைவிடுத்து பேருக்கு நலம்செய்ததாக புகழ்கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தால் ஜனங்களை ஏமாற்றும் முறையில் மசோதாக்களை கொண்டு வந்து சட்டசபையில் புகுத்துவதில் பயனில்லை.

தீர்வைக் குறைவால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்ய தற்போதுள்ள ஆங்கில சோல்ஜர்களை நீக்கி ராணுவத் துருப்புகளில் பாதிப் பாகத்தை இந்தியர் மயமாக்க ஏற்பாடு செய்தால், இராணுவ எண்ணிக்கையைக் குறைக் காமலேயே மூன்றில் ஒரு பாகம் செலவு குறைந்துவிடும். அப்பணத்தைக் கொண்டு மற்ற வேலைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

ஆகவே இராணுவத்தில் பாதிப் பாகத்தை இந்திய மயமாக்கவேண்டும் என்று கனம் பிரதம மந்திரி போராட முன் வருவாரா?

---

# 'கருடனும் திருடனும்'

['செங்கரி சேன்']



குற்றவாளி:—தருமதுரையே! லோகத்திலே வரவர அக்கிரமம் அதிகரித்துவிட்டது. அதிலும் இந்தப் போலீஸார் செய்யும் அக்கிரமங்களுக்கு எல்லையே கிடையாது. மகாப்பிரபுவே! என்மேல் இந்த போலீஸார் அநியாயமாய் குற்றத்தைச் சாற்றி விட்டனர். நான் என் காரியத்தை கவனித்துக் கொண்டிருக்கையில் என்னை (அரஸ்ட்) கைது செய்துவிட்டார்கள். என் காரியத்தால் அந்நியர்கட்கு ஏதாவது தொந்தரவு ஏற்பட்டிருந்தால் அது நியாயந்தான். நான் செய்தகாரியத்தால் அந்நியற்கு ஒருவித இடைஞ்சலுமே கிடையாது. நியாயம் வழங்கவேண்டும்! தருமப் பிரபுவே!

நியாயாதிபதி:—பிறருக்கு இடைஞ்சலின்றி உன் காரியத்தையே கவனித்துக் கொண்டிருந்தாய் என்று நீ சொல்லுகிறாய். நிச்சயமாக அப்படிச் செய்தாயா?

குற்றவாளி:—நிச்சயமாகத்தான் பிரபுவே. இந்த போலீசாருக்கும் எனக்கும் கொஞ்சம் கொடுக்கல் வாங்கல் உண்டு. அதிலேற்பட்ட தகாறுதான் காரணம். அதை முன்னிட்டுத்தான் என் காரியத்தையே கவனித்துக் கொண்டிருந்த என்னை அரஸ்டு செய்து கெட்ட பெயரையும் வாங்கிக்கொடுக்க முயல்கிறார்கள். தரும துரைமுன் எனக்கு எப்படியும் நியாயம் கிடைக்குமென்று கருதியே நான் வக்கீல்கூட வைக்கவில்லை. மெய்யை பொய்யாக்க நான் விரும்பவில்லை. தருமதுரை மனதுவைத்து இந்த போலீசாரின் அக்கிரமத்தை அடியோடு ஒழிக்கவேண்டும். பிறருக்கு ஒருவித தொந்தரவின்றி ஒருவன் நடத்தும் காரியத்தில் போலீஸார் தலையிடப் படாதென்ற உத்திரவைப் பிறப்பிக்கவேண்டும். ஒவ்வொருவனுக்கும் அவனவன் தொழிலைச்செய்ய, அது எத்தகையதா யிருப்பினும், சுதந்திரம் வேண்டும். இல்லையேல் என்னைப்போன்ற தொழிலாளரின் பாடு அதோ கதிதான். என்னை அன்று இந்த போலீஸார் அரஸ்டு செய்தார்களே! அது நியாயமாகுமா? என்னால் யாருக்குக்காவது தொந்தரவு ஏற்பட்டதென்று அவர்கள் ரூபிக்கட்டும் பார்க்கலாம்.

எவ்வளவோ நிசப்தமின்றி நிதானமாக அல்லவோ என் காரியத்தைச் செய்தேன்.

நியாயாதிபதி:—நிசப்தமாயும் நிதானமாகவும் ஒரு காரியத்தை செய்வதென்றால் நம்பமுடியாது.

குற்றவாளி:—தருமப்பிரபுவே! நான் எல்லோரும் நன்றாக உறங்கிக் கொண்டிருக்கையில்தான் என் காரியத்தைச் செய்தேன்.

நியாயாதிபதி:—அப்படியானால் உன் தொழிலென்ன?

குற்றவாளி:—முதலில்லா வியாபாரம். கருடனும் காலும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்.

நியாயாதிபதி:—அப்படியானால் 'கருடனும் திருடனும்' ஒன்றுதான். உனக்கு இரண்டு வருஷம் கூண்டுவாசம் தெரிந்ததா?

---

ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஓர் ஆற்றங்கரையில் நின்றுகொண்டு அதற்குமேல் வழி தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தார். அவ்வழி வந்த ஒரு குடியானவனைப் 'பார்த்து கருவூருக்கெந்த வழி' என்று கேட்டார்.

(போன வருஷம் தன் வீட்டை ஜப்தி செய்யச் சொன்ன ஆசாமி என்று தெரிந்ததும்)

குடியானவன்:—இந்த ஆத்தோட போங்க சாமி.

ரெ-இ:—எந்த மட்டும்?

குடியானவன்:—தலை முழுவி, மூணுவாத் தண்ணி குடிக்கற மட்டும்.

—எஸ். மஹபூப்கான்.

எஜமானன்:—அடேய் இரண்டணாவுக்கு தலை வாங்கியா?

ஆள்:—இரண்டணாவுக்கு மூளையில்லாமல்தான் கொடுப்பான்.

எஜமானன்:—ஆட்டு தலையில்லை. தபால் தலை (ஸ்டாம்பு)

* * *

மணி:—சார், குண்டூசியை விழுங்கிவிட்டேன்.

டாக்டர்:—அப்படியானால் இந்த காந்ததுண்டை (Magnet) விழுங்கிவிடு இழுத்துக்கொண்டு வந்துவிடும்.

—புதுவை எஸ். எ. சஞ்சீவி.

மருமகன் 10 மைல் தூரம் கால்நடையாக வந்தாரேயென்று மாமியார் வீட்டார் மாப்பிள்ளைக்கு ஒரு பாயையும் தலையணையையும் கொடுத்து இளைப்பாறச் சொன்னார்கள்

மருமகன் தலையணையைத் தூக்கி காலுக்கு போட்டுக்கொண்டு வெறுந் தலையோடு படுத்திருந்தான். மாமியார் வீட்டார் இதைக் கண்டு என்ன இப்படி படுத்திருக்கிறீர்கள் என்றனர்.

மருமகன்:—தலையா பத்து மைல் நடந்து வந்தது. கால்தானே நடந்து வந்தது. அதற்குத்தானே நாம் சௌக்கியம் கொடுக்க வேண்டும் என்றான்.

—வலம்புரி S. சீனிவாசன்.

தொடர்கதை

# பத்தினி பக்தி

[தேவகோட்டை ஸ்ரீ V. இராமநாதன்]

(All rights reserved with the author)

## முன்னுரை.

சகோதரிகளே! சகோதரர்களே!

முற்போந்த நமது 'காலக்கதிரவன் அல்லது அடிமைகள் வெற்றி' என்ற நவீனத்திற்கு மதிப்புரைநீட்டிய தண் தமிழ்ப் பத்திரிகையொன்று. 'குழந்தைகளுக்குச் சர்க்கரையொடு சேர்த்து மருந்தை யூட்டுவதையொக்கும் கதையோடு சீர்திருத்தக் கோட்பாடுகளைப் புகுத்துவது' என்று கூறிற்று. அதுவேதான் எமது ஆதிக்கருத்தென்பதை அறிவீர்களாக.

இந்நவீனத்தின்கண் முதற்படியாகப் பெண்ணின் பெருமையும், அடுத்தபடியாகக் காதலின் மகிமையும், அஃதோடு தேசநலனும், மற்றும் இன்னவையன்ன பலவும் இனிதுறவிளக்கப் பெற்றிருக்கிறதென்பது எமது துணிவாகும்.

அபிப்பிராயம் அபேத முடையதன்று. இந்நாளில் கருத்து வேற்றுமைகளுக்குக் கணக்கேயில்லை. ஒன்றில் ஒருவர்கூறும் குற்றத்தை மற்றொருவர் குணமெனக் கொள்வர். ஆகவே முன்னவர் தூற்றுதலும் பின்னர் போற்றுதலும் கண்கூடு. எனவே தமக்குத் திருப்தி அளிக்கா ஒன்றை எல்லார் மாட்டும் அவ்வாறென்னுதல் பேதமையின் பாற்படும். அதனை உணர்ந்தோர்ந்து இச்சிறு நவீனத்தின்கண் ஏதேனும் நலன் காணுவீர்களாயின் அவரவர் கருத்துப்படி பேணுவீர்களாக.

வந்தனம்.

அன்புள்ள,

V. இராமநாதன்,

தேவகோட்டை.

## முதல் அத்தியாயம்.

அசத்தியமும், அதர்மமும், அநீதியும், அதமும், இன்னவை பலவும் மலிந்த ஒருகாலத்தில் வெற்றிபுரியைத் தலைநகராகக்கொண்ட வீரபுர சாம்ராஜ்யமக்கள் சத்தியத்திற்கும், தர்மத்திற்கும், நீதிக்கும்,

இதத்திற்கும் கட்டுப்பட்டு இம்மியளவும் பிசகாமல் தங்கள் தேசத்தின் பெருமை என்றென்றும் குன்றின்மேலிட்ட தீபம்போல் பிரகாசிக்க வேண்டுமென்னும் பேராவாவினால், அரசகுடும்பத்தில் ஆண் சந்ததியற்ற காலத்திலும் தங்களுக்குள் சச்சரவுசெய்து பிளவுற்று அந்நியாதிக்கத்திற்கு ஆட்பட்டு அல்லலுறாமல், அரச வழிவழிவந்த ஒரு அணங்குக்கு ராஜ்யபாரம் கொடுத்தார்களென்றால் அதனினும் பெருமை வேறதானுளதோ!

அவ்வாறு அரசுரிமைபெற்ற அணங்கு தனது ஆழ்ந்த நன்றியைக் குடிஜனங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளும்பொருட்டு ஒரு மகாசபை கூட்டினாள். அதற்கான மண்டபம் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சாம்ராஜ்யத்தின் பற்பல பாகங்களிலிருந்தும் ஆண்பெண் இருபாலாரும் திரளாக வந்திருந்தனர். எல்லோரும் எவ்வித பேதமுமின்றி சரிசமானமாக மண்டபத்தின் உள்ளும் புறமும் எள்விழவும் இடமின்றிக் கூடலாயினர். மண்டபத்தின் உட்புறத்தில் தேஜோன்மயமாக அலங்கரிக்கப் பெற்றிருந்த உயர்ந்த மேடைமீது ஆஸ்தான உத்தியோகஸ்தர்கள் அமர்ந்திருந்தனர். நல்லமுறையில் ஆடை ஆபரணங்களணிந்து, பல நங்கையர்சூழ நமது ராணி அச்சபைக்குள் பிரவேசித்தாள். இவள் வந்ததும் மகா ஜனங்கள் எழுந்து வணக்கஞ்செய்து, 'இராணி பத்மாவதிதேவிக்கு ஜே!.... இராணி பத்மாவதிதேவிக்கு ஜே!!....இராணி பத்மாவதிதேவிக்கு ஜே!!!' எனப் பன்முறை கோஷம் செய்தனர். பேராரவாரத்தால் பெருமைப் படுத்தப்பட்ட ராணி, புன்னகைபொலிய, ஜனங்களை அமரும்படி சமிக்கைசெய்து, தானும் தனக்காக அமைக்கப்பட்டிருந்த உயர்ந்த ஆசனத்திலமர்ந்தாள்.

எங்கும் நிசப்தம் நிலவியது ராணி பத்மாவதிதேவி எழுந்தாள். எங்கும் கரகோஷ ஆரவாரம் வானையும் பிளக்கும்வண்ணம் எழுந்தது. 'பிரஜைகளே! உங்களின் பழுத்த தேசப்பற்றும், அதனால் என்னிடம் காட்டிய பேரன்பும் என்றென்றும் மறக்கற்பாலதன்று. பன்னெடுங் காலமாக இந்த வீரபுர சாம்ராஜ்யத்தை அறத்தினின்றும் இம்மியளவும் பிசகாமல் செங்கோல் செலுத்திய எனது முன்னோர்கள் இந்நாளில் ஆண்சந்ததியில்லாதுபோன பொழுதும் உங்களுக்குள் அபிப்பிராயபேதப்பட்டு பிளவுற்று அந்நியருக்கு இடங்கொடாமல், பெண்ணென்றும் பாராமல் எனக்கு ராஜ்யபாரமளித்த உங்களின் சுதேச ராஜபக்தி பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பெறும் அத்துணைப் பெருமைவாய்ந்ததென்பதில் எத்துணையும் ஐயமில்லை! பிரியமான குடிஜனங்களே! நான் உங்கள் எல்லோருடைய ஏகோபித்த மனப்பான்மையால் அரசியாக்கப்பட்டேன்; உங்களின் நன்மையைக்கோரிய எந்தக் காரியத்திலும் உற்றகாலத்தில் உரிய தொண்டாற்றப் பின்வாங்கேன்; குடியோங்கக் கோனுயருமாதலின்

உங்களின் உயர்ச்சியின் வளர்ச்சியிலேயே கண்ணுங்கருத்துமாக விருப்பேன்; துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்வேன்; பதவியால் மமதைகொள்ளும் பல அரசுகளைப் போலல்லாது நான் என்றும் மாறுபாடற்றிருப்பேன்; உங்களின் நன்மைக்காக நான் கன்னியாகவே யிருக்க உறுதிகொண்டுள்ளேன்; ஏனெனில் மணம் புரிந்தபின் மணாளனைத் திருப்திப் படுத்தவேண்டி நான் செய்யும் எக்காரியமேனும் குடிகளின் நன்மையைப் பாதிக்கினும் பாதிக்கலாம்; அவ்வாறு நீங்கள் பாதிக்கப்படுவதை நான் விரும்பமாட்டேன்; எல்லாவழியாலும் செங்கோலைச் செழுமையுறச்செய்ய உங்களின் போதாவு பெரிதும் வேண்டப்படுகிறது அன்பார்ந்த குடிஜனங்களே! முக்கியமாக ஒன்றைக்கூற மறந்துவிட்டேன். பெண்ணின் பெருமையென்ன! அவர்களின் தற்கால நிலையென்ன! சிந்தித்துப் பாருங்கள்! அடக்கத்திற்கு இருப்பிடமான பெண்களை,—பொறுமைக்கு இருப்பிடமான பெண்களை,—தியாகத்திற்கு இருப்பிடமான பெண்களை,—பாசலத்திற்கு இருப்பிடமான பெண்களை,—இரக்கத்திற்கு இருப்பிடமான எனது சகோதரிகளை,—வீரத்திற்கு இருப்பிடமான பெண் தெய்வங்களை சுயநலங்கருதிய ஆண்பிள்ளைகள் கேவலம் மிருகத்திற்கும் கீழாக எண்ணி பிரசவிக்கும் இயந்திரங்களாகவும், அடுப்பூதும் அணங்குகளாகவும் நடத்தும் இக்கொடிய காலத்தில், அவர்கள் குழாமைச்சேர்ந்த பெண்பாலாகிய என்னை நீங்கள் அரசியாக்கியதை ஆழ்ந்து யோசித்தால் பெண்களின் முன்னேற்றத்திற்கான ஒரு நற்காலம் விரைந்தோடி வருவதாகத் தோற்றுகிறது. அதுவருக! வரவேற்போம்!

மற்றும், எந்நாட்டில் பெண்களின் பெருமை போற்றப்படவில்லையோ,—எந்த நாட்டில் பெண்களின் அருமை கொண்டாடப்படவில்லையோ,—எந்த நாட்டில் பெண் தெய்வங்களின் முதன்மை துலங்கப்படவில்லையோ, அந்த நாடு இன்றில்லாவிட்டாலும் என்றேனு மொருநாள் பாழும் நரகத்திற்கும் கீழாவதுதிண்ணம்! திண்ணம்!! திண்ணம்!!!

ஆகவே, சுயமதிப்புள்ள இந்நாட்டு மக்களே! எனது ஆட்சியில் பெண்கள் முன்னேற்றம் முதன்மையாகக் கவனிக்கப்படும். நிலைபற்ற பணஆசையால் நெறியிழந்து கனகபூஷணமான தங்கள் கற்பைப் பாழ்படச்செய்த,—செய்துவருகின்ற சகோதரிகளை சீர்திருத்தவேண்டிய சட்டதிட்டங்களை உண்டாக்குவோம். அவர்களை உதாசீனமாக எண்ணி கைவிட்டுவிடாமல், ஒருவனுக்கு ஒருவளாகச் செய்து இல்லற தர்மத்தை ஏற்று நடாத்தச் செய்வோம். இன்னும் பெண்மக்களுக்கு அறிவுப்பயிரை வளர்க்கவல்ல கல்வித் தண்ணீரைப் பாய்ச்சுவோம். அக்கல்வியையும் வாழ்க்கைக்குப் பயன்படத் தக்க முறையில் போதிப்போம். புத்தகங்களைமட்டும் படித்துவிட்டு அழுத

பிள்ளையைக்கூட அமர்த்தத் தெரியாத அலமலர்ந்த பிரயோஜனமற்ற படிப்புவேண்டாம். பெண் கல்வியில் முக்கியமாக, 'குழந்தை வளர்ப்பு' அறிவின் ஆற்றலாலும், அனுபவத்தின் விசாலத்தாலும் போதிக்கப் படல்வேண்டும். ஏனெனில் நல்ல வளர்ப்புடைய குழந்தைகள்தான் திடகாத்திரர்களாகவும், திறமைமிக்கவர்களாகவும், வீரப்பொலிவுடையவர்களாகவும் விளங்க முடியும். அவர்களால் நமக்கும் நம்நாட்டிற்கும் பெருமையுண்டு. க்ஷேமமுண்டு. அப்படியான வீரக்குழந்தைகளை எனது ஆட்சியில் திடமாகக் காணுவீர்கள். அதற்கான மகளிர் குருகுலமொன்றை விரைவில் தோற்றுவிப்போம். ஆனால் அக்குருகுலத்தை மேற்பார்வையிடப்போதிய அனுபவமுள்ள ஒரு பெண்மணி வேண்டுமே என்னும் ஐயம் எழுகின்றது. ஆம்! ஏன் இல்லாமல்? இருக்கின்றாள். இராஜபக்தியும் தேசபக்தியும் மிக்கவரான ஜெயசேகர் அவர்களின் குமாரி ஸ்ரீமதி இந்துபாலா முற்றிலும் தகுதிவாய்ந்தவள். நாங்கள் கல்விபயின்ற காலத்தில் அவள் மகளிர் குருகுலத்தின் அவசியத்தைப்பற்றியும் அது நடாத்தப்பட வேண்டிய முறைகளைப்பற்றியும் எம்மிடம் அடிக்கடி பேசுவதுண்டு. ஆகையால் அவளை நியமிப்பதே சாலச் சிறந்ததாகும். எனவே அவ்வாறே செய்வோம்.

மற்றொரு முக்கியமான விஷயத்தை இப்பொழுது நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன். அயல்தேயங்களில், வியாபார முறையில் சென்றுள்ள, நம் நாட்டுமக்கள் படும் அல்லல்கள் சொல்லிமுடியா. அவைகளுக்குப் பரிகாரம்தேடி அவர்களுக்கு சாந்தி அளிக்கவேண்டுவது நமது கடமைகளுள் மிகவும் முக்கியமான தொன்றாகும். இக்காரியத்தைக் கவனித்துச்செய்ய நமது சேனாதிபதி ஜெயபாலர் அவர்களின் குமாரர் சுரேந்திரநாதரை நியமிப்பது பொருந்தும். இப்பாரத சாம்ராஜ்யத்தில் எவ்வளவோ பெரியார்களிருக்க நான் அவ்வாலிபரை இக்காரியத்திற்கு நியமித்தமைக்குக் காரணம் இல்லாமலில்லை. அயல்நாட்டிலுள்ள நம்நாட்டவரின் நிலைமையைப் பற்றிப் பத்திரிகையொன்றில் அவ்வாலிபரால் எழுதப்பெற்ற வியாசமொன்றைக் காணநேர்ந்தது. அவரின் வீரம் செறிந்தவார்த்தைகளே இன்று என்னை இக்காரியத்தி லீடுபடச் செய்தனவென்றால், அதில் மிகையொன்றுமில்லை.

இவைபோன்ற பல நற்காரியங்களில் ஈடுபட்டு நமது நாட்டைச் சிறப்புறச்செய்ய நான் என்றும் தயார். ஆகவே, உங்களின் மன எழுச்சிகளை அவ்வப்பொழுது எடுத்துக்காட்டி அவைகளில் சித்திபெற என்றென்றும் உறுதுணையாய் நிற்பீர்களெனத் திடமாய் நம்புகிறேன். நமது சேனாதிபதி ஜெயபாலரைப்பற்றியும், மந்திரி சபா நாயகரைப்பற்றியும் என்னினும் நன்றாக நீங்கள் அறிவீர்களாதலின் அவர்களின் திறமையைப்பற்றி நான் எடுத்துக்காட்ட வேண்டுவ

# ஹிந்திமொழிப் பயிற்சி ஏற்புடைத்தாகுமா?

[பல்லாவரம் - மறைத்திரு. மறைமலையடிகள்]

'குடி அரசு' பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:—



இவ்விந்திய நாட்டின் வடக்கே பல ஊர்களிற் பலவகை மாறுதல்களுடன் பேசப்படும் 'ஹிந்தி' மொழியை, இவ்விந்திய நாடு முழுதுமுள்ள மக்கள் எல்லாரும் பயின்று அதனையே பொது மொழியாக வழங்கிவரல் வேண்டுமென்று, இந் நாட்டின் நன்மைக்காக உழைக்கும் வடநாட்டு அறிஞர் பலருந் தென்னாட்டறிஞர் சிலரும் பேசியும் எழுதியும் வருவதுடன் ஆங்காங்கு ஹிந்திமொழிப் பள்ளிக்கூடங்களுந் திறப்பித்து நடத்தி வருகின்றார்கள். ஆகையால் ஹிந்திமொழி நம் நாட்டவர்க்கு நன்மை செய்யத்தக்க நலனும் ஆற்றலும் உடையதுதானா என்பதை முதற்கண் ஆராய்வோம்.

இப்போது, ஆங்கிலக் கல்விக் கழகங்களிற் கல்விபயின்று வெளிவரும் நம் இந்திய மக்களிற் பெரும்பாலார் பொருள் வருவாய்க்கு வேண்டுமளவு சிறிது ஆங்கிலம் பயின்றவராயும், அதனோடு சேர்த்துச் சிறிதே கற்பிக்கப் பட்ட தமிழ் முதலான மொழிகளைத் தப்புந்தவறுமாய்ப் பேச எழுதத் தெரிந்தவராயும், வெறும் போலி வாழ்க்கையிற் சில்லாண்டுகளே உயிர் வாழ்க் தொழிதலால், இந்நாட்டின்கட் பெருந்தொகையினராய் வெற்றுயிர் வாழ்க்கை செலுத்துங் கல்லா மாந்தர்க்குந், தமிழ் முதலான நாட்டு மொழிகளை வருந்திக்

---

தில்லை. அவர்கள் எவ்வழியிலும் நம்முடன் ஒத்துழைத்து நாட்டை மென்மேலும் நலம் பெற்றோங்கச்செய்ய எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவாராகுக. என்னை மிகமிகச் சிறப்பாகக் கௌரவித்த உங்கள் அனைவருக்கும் எனது வந்தனம்' என்று தனது வந்தனோபசாரத்தைத் தெரிவித்துக் கொண்டாள் ராணி பத்மாவதிதேவி.

பொதுவாக அங்கு குழுமியிருந்தோரனைவரும் சிறப்பாகப் பெண்மக்களும் சந்தோஷ சாகரத்திலாழ்ந்தவர்களாய் ராணியின் குணவிசேஷத்தைப்பற்றியும் பேச்சுச் சாதுரியத்தைப்பற்றியும் தங்களுக்குள் வெகுவாகச் சிலாகித்துப்பேசி, அவளை ராணியாக அடைந்தது தங்களின் நற்பாக்கியமே என வாய்விட்டுக்கூறி, மீண்டும் மீண்டும், 'ராணி பத்மாவதிதேவிக்கு ஜே! ஜே!! ஜே!!!' என்று ஜெயகோஷமிட அன்று நிகழ்ச்சி அத்துடன் முடிந்தது.

கற்றும் வறியராய்க் கார்த்திகைப் பிறைபோல் ஆங்காங்குச் சிதறிச் சிற்சிலராய்க் காலங்கழிக்குந் தாய்மொழி கற்றமாந்தர்க்கும் ஆங்கிலங் கற்றவரால் மிகுதியான பயன் ஏதும் விளைகின்றிலது. இப்படியிருக்க, இத்தமிழ் நாட்டிலும், பிறமொழி பேசும் பிற நாடுகளிலும் அயல்மொழியான ஹிந்தி மொழிப் பயிற்சியை நுழைத்தால் அதனாற் பயன் விளையுமோ என்பதனை அறிஞர்கள் ஆழ்ந்தாராய்ந்து பார்த்தல் வேண்டும்.

இவ்விந்திய தேயத்தின் பற்பல நாடுகளிலும் உயிர்வாழும் மாந்தர்கள் பற்பல மொழிகளைப் பேசுவாராய் இருத்தலின், இந்நாட்டவரெல்லாரும் ஒரு பொது நன்மையின் பொருட்டு ஒருங்கு கூடிப் பேசவேண்டிய காலங்களில் ஹிந்தியை அவரெல்லாரும் பொதுமொழியாய்க் கையாளுதலே நன்று என்று தேயத்தொண்டர் சிலர் கூறுகின்றனர். இவரது கூற்றுப் பொருந்தாதென்பது காட்டுவாம்.

ஹிந்தி மொழியானது வடக்கே பற்பல நாடுகளிற் பற்பல மாறுதல்களோடு பேசப்படுகின்றதேயல்லாமல் அஃதெங்கும் ஒரே வகையாகப் பேசப்படவில்லை. இங்ஙனம் பலவகை மாறுதல்களுடன் பேசப்படும் ஹிந்தி மொழியை ஆராய்ச்சி செய்த ஆசிரியர்கள் அதனை மேல் நாட்டு ஹிந்தி 'கீழ் நாட்டு 'ஹிந்தி, 'பிகாரி' என்னும் மூன்று பெரும் பிரிவுகளாகவும், அப்பெரும் பிரிவுகளினுள்ளே முறையே 'பாங்காரு' பிரஜ்பாஷா, 'கனோஜ்' 'பந்தேலி' 'உருது' 'அவதி' 'பகேலி' 'சத்தீஸ்கரி' 'மைதிலி' 'போஜ்புரி' 'மகதி' என்னும் பல சிறு பிரிவுகளாகவும் பகுத்திருக்கின்றனர். இனனும் ஹிந்தி மொழியின் பிரிவுகளாகப் பேசப்படுஞ் சிறுசிறு மொழிகள் மேலும் பற்பல உள. இவ்வாறு ஹிந்தி மொழியின் பல பிரிவுகளாக வழங்கும் பற்பல மொழிகளைப் பேசும் பற்பல நாடுகளில் உள்ளாரும், ஒரு நாட்டவர் மொழியை மற்ற நாட்டவர் அறியாராய் உயிர் வாழ்ந்து வருதலின், ஹிந்தி அவரெல்லார்க்கும் தெரிந்த பொதுமொழி என்றுரைப்பாருரை எங்ஙனம் பொருந்தும்? இங்ஙனம் பற்பல நாடுகளில் பற்பல மாறுதல்களுடன் வழங்கும் பல்வேறு ஹிந்தி மொழிகளில் எதனை இத்தென்னாட்டவர் கற்றுத்தேர்வது? எதனை இவர் கற்றாலும், அதனுதவிகொண்டு இவர் வடநாட்டவரெல்லாரோடும் பேசுதல் இயலுமா? இயலாதே. மேற்குறித்த ஹிந்திமொழிகளேயன்றிச் 'சிந்தி' 'லந்தி' 'பஞ்சாபி' குஜராத்தி' 'ராஜபுதானி' 'குமோனி' 'கடுவாலி' 'நேபாலி' 'உரியா' 'பங்காளி' 'மராட்டி' 'சிணு' 'காஸ்மீரி' 'கோகிஸ்தானி' 'சித்ராலி' 'திராகி' 'பஷை' 'கலாஷா' 'கவர்பாவ' முதலான இன்னும் எத்தனையோ பல மொழிகளும் வடக்கே பற்பல நாட்டின்கண்ணுள்ள பற்பல மாந்தர்களாலும் பேசப்பட்டு வருகின்றன. இம்மக்கட் பெருங் கூட்டத்துடனெல்லாம், ஹிந்தி மொழியில் ஒன்றைமட்டுந் தெரிந்த தென்னாட்டவர் உரையாடி அளவளாவுதல் கூடுமோ? சிறிதுங்கூடாதே. வடநாட்டவரிலேயே ஹிந்தி மொழியை அறியாமல் பலதிறப்பட்ட பன்மொழிகளை வழங்கும் மக்கட்கூட்டம் பலவாயிருக்க இத்தென்னாட்டவர்மட்டும் ஹிந்தி மொழியைக் கற்றுப் பேசுதலால் யாது பயன் விளைந்திடக்கூடும்? இவ்வியல்புகளையெல்லாம் நடுநின்று எண்ணிப் பார்க்கவல்ல அறிஞர்க்கு இத்தென்னாட்டவர்கள் தமக்கு எவ்வகையிலும் பயன்படாததுந் தெரியாததுமான ஹிந்தி மொழிகளில் ஒன்றைப் பொது மொழியென வருந்திக் கற்றலால் வீண் காலக்

கழிவும் வீண் உழைப்பும் வீண் செலவும் உண்டாகுமேயல்லாமல் வேறேதொரு நன்மையும் பயனும் உண்டாகாதென்பது நன்கு விளங்கும்.

இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னே தொட்டுத் தமிழ் மொழியை நன்குகற்ற ஆசிரியர்கள் முதுகுருகு, முதுநாரை, களரியாவிரை, பெரும்பரிபாடல், தொல்காப்பியம், பெருங்கலித்தொகை, குருகு, வெண்டாளி, வியாழமாலை, முத்தொள்ளாயிரம், நற்றிணை, நெடுந்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, சிற்றிசை, பேரிசை, பதிற்றுப்பத்து, எழுபது பரிபாடல், குறுங்கலி, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம், திருக்கோவையார், சீவகசிந்தாமணி, திருத்தொண்டர் புராணம், சிவஞானபோதம் முதலான அரும்பெரும் தமிழ் இலக்கண இலக்கிய வீட்டு நூல்களும், அவை தமக்குச் சொற்பொருள் நுட்பமுஞ் சுவையும் மலிந்த சிற்றுரை பேருரைகளும் இயற்றித் தமிழைமாசுறாத நாகரிக இளமை வளத்தில் இன்றுகாறும் இனிது வழங்கச்செய்து வருதலால், அதனை வழங்குந் தமிழ் மக்களெல்லாரும் ஒருவர் ஒருவர்க்கு நெடுந்தொலைவில் இருப்பினும் அதனாற் பேசியும் எழுதியும் அளவளாவி ஓரிடத்திலுள்ள ஒரே மக்களினம்போல் உயிர்வாழ்ந்து வருகின்றனர்.

மற்று, ஹிந்தி, உருது முதலான வடநாட்டு மொழிகளோ தமிழைப் போற் பழமையானவைகள் அல்ல; மகம்மதிய மதத்தவரான மொகலாய அரசர்கள் வடநாட்டின்மேற் படையெடுத்துப் போந்து, தில்லிப் பட்டினத்தைத் தலைநகராய்க் கைக்கொண்டு அதன்கண் அரசு வீற்றிருக்கத் துவங்கிய பின்னரே அம்மொழிகள் தோன்றியனவாகும். அக்காலத்தில் தில்லி நகரிலும் அதனைச் சூழ்ந்த இடங்களிலும் பிராகிருதச் சிதைவான ஒருமொழி வழங்கிக் கொண்டிருந்தது. தில்லியில் துலுக்கராசு நிலைபெற்றபின், அவர் கொணர்ந்த அராபிமொழி பாரசீக மொழிச் சொற்கள் அம்மொழியின்கண் ஏராளமாய்க் கலக்கப்பெற்று அவரால் அஃது உருது எனவும் பெயர் பெறலாயிற்று.

இதன்பின் நூல் வழக்குடையதாய் இஞ்ஞான்று வழங்கும் ஹிந்தி மொழியானது 'லல்லுஜிலால்' என்பவரால் உருது மொழியினின்றும் பிரித்துச் சீர்திருத்தஞ் செய்யப்பட்டதொன்றாகும். இதற்குமுன் உள்ளதான பிராகிருதச் சிதைவுமொழியிற் கலந்த பாரசீக அராபிச் சொற்களை அறவே யொழித்துச் சமஸ்கிருத மொழிச் சொற்களை மிகுதியாய் எடுத்துச் சேர்த்து அவர் ஹிந்திமொழியைப் புதிதாய் உண்டாக்கினர். ஆகவே வடசொற்கலப்பினால் ஆக்கப்பட்டுச் சிறிது காலமாக இப்போது நூல் வழக்கிற் கொணரப்பட்டிருக்கும் ஹிந்தி மொழியை நம் தென்னாட்டவர் கற்றுத் தெரிந்து கொள்வதனால் இவர் வடநாட்டவரெல்லாருடனும் பேசி அளவளாவி விடக்கூடும் என்று சிலர் மடிகட்டி நின்று கூறுவது நம்மனோரை ஏமாற்றும் பொய்யுரையேயாம்.

கி. பி. 1400-ஆம் ஆண்டு முதல் 1470-ஆம் ஆண்டு வரையில், அதாவது இற்றைக்கு 467 ஆண்டுகளுக்கு முன்னிருந்த, 'இராமானந்தர்' எனப் பெயரிய துறவி இராமனையே முழுமுதற் கடவுளாக வைத்து வழிபடல் வேண்டுமென்ற கொள்கையை வடநாட்டிற் பல இடங்களிலும் பரவச்

செய்து வந்தார். இவர் இராமன்மேற் பாடிய பாடல்கள்தாம் முதன்முதல் ஹிந்திமொழியில் உண்டானவை. அதனால் இவருடைய பாடல்கள் அடங்கிய ஹிந்திமொழி நூல் 'ஆதி கிரந்தம்' என வழங்கப்படுகின்றது.

இனி, இராமானந்தர்க்குப் பின் அவர் தம் மாணாக்கருள் ஒருவரான கபீர்தாசர் என்பவர் கடவுள் பல பிறவிகள் எடுத்தார் எனக் கூறுவது அடாதென்றும், இறைவனைக் கல், செம்பு, கட்டை வடிவில் வைத்து வணங்குதல் பெருங்குற்றமாமென்றும், இந்து சமயக் கிரியைகளுஞ் சடங்குகளும் பொருளற்ற புன்செயல்களென்றும், ஹிந்தி மொழியின் ஒரு பிரிவான 'அவதி' மொழியிற் பாடல்களைப் பாடியிருக்கின்றார்.

இனிக் கபீர்தாசருக்குப் பின் அவர்தம் மாணாக்கரான 'நானக்' என்பவர் தம் பாடல்களைப் பஞ்சாபியும் ஹிந்தியுங் கலந்த கலப்பு மொழியில் அமைத்துச் 'சீக்கிய' மதத்தைப் பரப்பினார்.

இனி, இற்றைக்கு 480 ஆண்டுகளுக்கு முன், தர்பங்கா மாகாணத்தின் கண்ணதான 'பிசபி' என்னும் ஊரில் 'வித்தியாபதி தாகூர்' என்ற வைணவர் ஒருவர் ஹிந்தி மொழியின் மற்றொரு பிரிவான 'மைதிலி' மொழியிற் கண்ணனுக்கும் அவன் காதலி இராதைக்கும் இடையே நிகழ்ந்த காதல் நிகழ்ச்சிகளை விரித்துப் பல பாடல்களைப் பாடியிருக்கின்றார். இப்பாடல்களையே பின்னர்ப் 'பங்காளி' மொழியில் 'சைதன்யர்' என்பார் மொழி பெயர்த்து, அவற்றை வங்காள தேயமெங்கும் பரவ வைத்தனர். இது கொண்டு ஹிந்திமொழி வங்காள தேயத்திலுள்ளார்க்குள் வழங்காமை அறியப்படுகின்றதன்றோ? வட நாட்டிற் பெரும் பரப்பினதான வங்காள தேயத்தார்க்கே தெரியாததான இந்திமொழியைத் தென்னாட்டிலுள்ளவர்கள் பயின்றாலும் இவர்கள் வங்காள மக்களுடன் அதிற்பேசி உறவாட முடியாதன்றோ?

ஆதலால், இதுவரையிற் கூறியதுகொண்டு இந்தி மொழியானது 500 ஆண்டுகளுக்குமுன் நூல் வழக்கில்லாமற் கல்வி யறிவில்லா வடநாட்டு மக்களால் அந்நாட்டின் பல பகுதிகளிலும் பலவாறு திரித்துப் பேசப்பட்டு, ஒரு பாலார் பேசும் மொழி மற்றொரு பாலார்க்குத் தெரியாதவண்ணம் வழங்கினமையால் அஃது இஞ்ஞான்றுங் கூடப் பற்பல மொழிகளாகவே பிரிந்து வழங்குகின்றதென்பதும், அதனால் இந்தியை வடநாட்டவர் எல்லார்க்கும் பொதுமொழியெனக் கூறுவாருரை மெய்யாகாதென்பதும், ஆகவே தென்னாட்டவர் இந்தியைப் பயிலுதலால் அதனுதவிகொண்டு வடநாட்டவரெல்லாரோடும் உரையாடி உறவாடல் இயலாதென்பதும் நன்குவிளங்கா நிற்கும்.

இனி, ஹிந்தி மொழிகள் நாலுகோடி மக்களாற் பேசப்படுதலாகிய தொகை மிகுதியை வற்புறுத்திக் காட்டுவோர்க்கு, வங்காள மொழி ஐந்து கோடி மக்களாலும், தமிழுந் தமிழோடினமான மொழிகளும் ஆறுகோடி மக்களாலும் பேசப்படும் பெருந்தொகை எடுத்துக்காட்டப்படும். இந்தியைப் பொதுமொழியாக்க வேண்டுமென்று ஒரு சாரார் கூறுவரேல், அதனினும் பெருந் தொகையினரான மக்களாற் பேசப்படும் 'வங்காள மொழியைப் பொது மொழியாக்க வேண்டுமென்று வங்காளரும், இவ்விந்திய நாட்டின் நால் எல்லைவரையிலும் பரவியிருக்குந் திராவிட மக்கள் எல்லார்க்கும் முதன் மொழியாவதும், இந்தியாவின் மட்டுமேயன்றி இலங்கை, பர்மா, மலாய்நாடு, தென் ஆப்பிரிக்கா முதலான நாடுகளிற் குடியேறி, வாணிக வாழ்க்கையிற்

சிறந்தாராயிருக்குந் தமிழ் மக்கள் அனைவராலும் வழங்கப்படுவதும் ஆன தமிழையே பொதுமொழியாகப் பயிலல் வேண்டுமென நந்தமிழ் மக்களும் வலியுறுத்துவரல்லரோ? மேலும், வடநாட்டு இந்தி முதலான மொழிகளின் பாடல்களிற் பெரும்பாலன, நம்போற் பல பிறவிகள் எடுத்துழன்று இறந்து போன சிற்றரசர்களான இராமன், கிருஷ்ணன், பலராமன், வாசுதேவன் முதலானவர்களைக் கடவுளாக வைத்து உயர்த்துப் பாடியிருத்தலால், அவை பிறப்பு இறப்பு இல்லா முழுமுதற் கடவுளாகிய எல்லாம்வல்ல சிவத்தை மக்கள் அறிந்து வழிபட்டுத் தமது பிறவியைத் தூய்மைசெய்து உய்தற்குதவி செய்யாமையோடு, அவை உண்மைச் சிவவழிபாட்டை அவர் அடையவொட்டாமலுந் தடைசெய்து மக்கட்பிறவியைப் பாழாக்குகின்றன. மற்று கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம், திருக்கோவையார், தேவாரம், பெரிய புராணம், சிவஞானபோதம் முதலான தமிழ் நூல்களோ மெய்யான ஒரு தெய்வம் சிவமேயாதலை விளங்கத் தெருட்டி மக்களுக்கு மெய்யறிவையும் மெய்யன்பையும் ஊட்டி, அவர் இம்மையிலும் மறுமையிலும் அழியாப் பேரின்பத்திற்றிளைத் திருக்குமாறுசெய்து அவரது பிறவியைப் புனிதமாக்குந்திறத்தன. அதுவல்லாமலும், இந்தி முதலான வடநாட்டு மொழிகள், தமிழைப்போற் பழையன அல்லாமையாலும், அவற்றை வழங்கும் மக்கள் பழமை தொட்டு நாகரிக வாழ்க்கையில் வாய்ந்த தமிழ் மக்களைப்போல் நாகரிக வாழ்வு வாயாதவர்களா கையாலும் சென்ற 400 அல்லது 500 ஆண்டுகளாகத் தோன்றிய வடநாட்டுப் புலவர்கள் பலரும் பண்டுதொட்டுத் தனித்த பேரறிவு வாய்ந்த தமிழ்ப் பெரும்புலவர்போலாது சமஸ்கிருத புராணப் பொய்க் கதைகளை நம்பி அவற்றின் வழிச்சென்ற மயக்க வறிவினராகையாலும், உயிர்க்கொலை, ஊனுணவு, கட்குடி, பல சிறு தெய்வ வணக்கம், பலசாதி வேற்றுமை முதலான பொல்லா ஒழுக்கங்களை அகத்தடக்கிய ஆரிய நூல்நெறிகளைத் தழுவிய வடவர், அவற்றை விலக்கி அருளொழுக்கத்தையும் முழுமுதற் கடவுள் வணக்கத்தையும் வற்புறுத்தும் அருந்தமிழ் நூல்நெறிகளைத் தழுவாமையாலும்; அவருடைய மொழிகளையும், அவற்றின்கட் புதிதுதோன்றிய நூல்களையும் நந்தமிழ் மக்கள் பயிலுதலால், இவர்கள் எதொரு நலனும் பயனும் எய்தார் என்பது இனிது பெறப்படும்.

இங்ஙனம் எல்லா வகையாலுஞ் சிறந்த தமிழ்மொழி இவ்விந்திய நாடு முழுமைக்கும் பொது மொழியாதற்குரிய நலங்கள் எல்லாம் வாய்ந்ததாயிருந்தும், அதனைப் பொதுமொழியாக்க முயலாமல், நானூறு ஐந்நூறு ஆண்டுகளாகவே தோன்றிப் பழைய சிறந்த நூற் செல்வமின்றி வறியனவாய்ப் பலவகைக் குறைபாடுகள் உடையனவாய்ப் பெரும்பாலும் நாகரிகமில்லா வடவர்களாற் பேசப்படும் இந்தி முதலான சிதைவுக் கலப்புமொழிகளை இத்தேயத்திற்குப் பொதுமொழியாக்க வேண்டுமென்று கூக்குரலிட்டு முயல்வோர் உண்மையான தொண்டர்களாவரா வென்பதனை அறிவுடையோர் ஆழ்ந்து நினைத்துப் பார்த்தல் வேண்டும். இதுகாறுங் காட்டிய உண்மைகளால் இந்தி மொழிப்பயிற்சி நந்தமிழ் நாட்டிற்கு ஒரு சிறிதும் பயன்படாமையினை யறிந்து, அதன் பயிற்சியினைத் தடைசெய்து, நம் தனித் தமிழ்ப் பயிற்சியினையே எங்குப் பரவச்செய்து நந்தமிழ் மக்களைத் தம் தாய்மொழியறிவில் விளங்கச் செய்வார்களாக!

# மதன காந்தா

[கோ. கே. மோகனசுந்தரம்.]



'இந்தியர்களே இந்தியர்களைத் தின்று ஜீவித்தால் இந்தியா கடைத்தேறும் விதம்தான் எப்படி! ஆறுமாத ஆக்டிங் வேலை கொடுப்பதற்கு 100 ரூபாய் அழுதாகிவிட்டது இன்னும் அரைநோட்டுக் கொடுத்தால்தான் மற்றுமொரு மூன்று மாதத்திற்கு ஓட்டுவார்களாமே. இல்லாவிட்டால் வேலை போய்விடுமாம். எலக்ஷனிலிருந்தே கெடுபிடி அதிகமாக இருக்கிறது. தாய் தந்தையர் வாய்—கைகட்டி எவ்வளவோ கஷ்டப்பட்டு என்னைப் பி. ஏ. வரைக்கும் படிக்கவைத்தனர். தங்களைத் தாங்கப்போகிறான் என்று ஆசை கொண்டிருந்தனர். கடைசியில் ஏமாற்றம் அடைந்து இறந்தனர். காலில் கட்டிக்கொண்டாற்போல் மனைவி ஒன்று. தாயகத்தில் சுகமில்லை என்று என்னிடம் வா அவளையும் கொடுமைக்கு ஆளாக்கியாகி விட்டது. அவர்களைச் சொல்லிப் பயனென்ன? அவர்களால்தானே எனக்கு வேலை கிடைத்தது? இப்போதும் அவர்களைத்தான் கேட்கவேண்டும்' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு பூபாலன் விசனக்கடலில் மூழ்கினான், இரவெல்லாம் யோசித்தான். காலையில் எழுந்ததும் ரயில்வே ஸ்டேஷனுக்குவந்து மாமனார் ஊருக்கு டிக்கட் வாங்கினான்.

'ஏன்டாப்பா நீ பெரிய மனுஷனாயிட்டயோ, சம்பாதிக்கிற சம்பாதிப்புக்கு பெண்டாட்டியை வேறே அழைச்சிண்டுட்டயா?'

'என்ன மாமி, நானு.....................என் மனைவியையா? எங்கே அவள்?'

'உனக்கு கடுதாசி வரவில்லையோ?'

'இல்லையே'

'அவள் எங்கே போயிருப்பா............சரி, நான் அப்பவே நினைச்சேன் அந்தக் காங்கிரஸ் பயல் நம்ப சுந்தரந்தான் அவளை இழுத்துண்டு போயிருப்பான், அப்பப்பா என்ன குசுகுசென்று பேச்சு. கதர்ப்புடவை ஒன்று அவன் கொடுத்தான்; அதைக் கட்டிண்டா. வேணும்னேன்....'

பூபாலனுக்கு இச்செய்தி இடிவிழுந்தாற்போன்று இருந்தது. சுந்தரம் மதனாவுக்கு சகோதரன் உறவு வேண்டும். பூரண கர்ப்பிணியாயிருந்த தனது மனைவியின் களங்கமற்ற உருவம் அவன் மனக்கண்முன் நின்றது. மீனாக்ஷி அம்மாளுக்கும் திகில் உண்டாயிற்று. மீனாக்ஷி அம்மாள் பூபாலனின் மாமியார். சொந்த மாமியார் இல்லை. மாமனாருக்கு இரண்டாந்தாரம். மகா அட்டகாசக்காரி. பூபாலனின் மனைவியைப் படாதபாடு படுத்துவாள். இப்போது பூபாலனைக் கண்டதும் பரிவுகாட்டிப் பேசுகிறாள். ஆனால் உள்ளுக்குள் மகிழ்ச்சி. கிருஷ்ணசாமி ஐயர்தான் பூபாலனின் மாமனார், பழைய வக்கீல். அப்பாவி மனிதர். இவரை மீனாக்ஷி ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறாள். அவளது வார்த்தையை பூபாலன் அவ்வளவாக நம்பாவிட்டாலும் ஆத்திரம் பொங்கியது உண்மை. சுந்தரம் நெருங்கிய சொந்தக்காரனே. எனினும் அவன் செய்தது விகாரம் என்று தீர்மானித்தான். 'சீ, பெண்களே இவ்விதந்தான். அன்னியனோடு பேச இடங்கொடுத்தால் போதுமே............அடே! சுந்தரம் இருக்கட்டும்—'. இச்சமயம் அவன் சிரித்த பிசாசுச் சிரிப்பு கட்டடத்தையே ஆட்டிற்று.

* * *

இதற்கு இரண்டு நாள்கட்கு முன் நடுநிசியில் காரிருள் நிறைந்த தெருவில் இருட்டுக்கும் பயப்படாமல் ஓர் ஆரணங்கு தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தாள். சற்றுமுற்றும் பார்த்துவிட்டுப் பாழும் கிணற்றண்டை நின்றாள். 'ஈசா என்னை ஏன் இப்படித் துன்புறுத்துகின்றாய்? தாலிகட்டிய புருஷனுக்கு என் மூலம் துன்பமே கொடுக்கின்றாய். ஆனால் அடுத்த கணத்திலிருந்து என்னைத் துன்புறுத்தமாட்டாய்' என்று அரற்றினாள். சமீபத்தில் காலடி சப்தம்கேட்டது. தான் வாய்விட்டுக் கூறியது அங்கு செல்பவருக்குக் கேட்டிருந்தால் அவர் தன்னைத் தெரிந்துதடுப்பார் என்று பயந்து பாவம் நிறைந்த இவ்வுலகத்தை ஒருமுறை சுற்றிப்பார்த்து குதித்தாள். அவளுக்கு ஸ்மரணை தப்பியது.

* * *

கண்களைத் திறந்ததும் தன் பக்கத்தில் சுந்தரம் நிற்பதையும், தான் ஒரு அழகான அறையில் கட்டிலில் படுத்திருப்பதையும் அறிந்தாள்.

'சுந்தரம்'

'மதனா காந்தா! இது என்ன அசட்டுக்காரியம் செய்யத் துணிந்துவிட்டாய்? எல்லாம் நான் கொடுத்த கதர்புடவையினால் வந்தது போலிருக்கிறது.'

'அதை ஏன் கேட்கிறாய்? அவளுடைய வசவுகளை என்னால் பொறுக்க முடியவில்லை. அவளுக்கும் அப்பாவுக்குங்கூட என்னால்

என் தொல்லை என்று ஒரே முடிவு செய்துவிட்டேன். நான் இங்கு எப்படி வந்தேன்? நீ ஏன் என்னைக் காப்பாற்றினாய்? நான் ஒரு பாவி! நீ அங்கு எப்படி வந்தாய்?

'அந்தக் கதையெல்லாம் இப்பொழுது வேண்டாம். நீ நிம்மதியாய் இரு. அம்மாவிடம் எல்லாம் சொல்லியிருக்கிறேன். நான் அவசரமாகப் போகவேணும்'

'ஆனால் என் கணவருக்கு ஒன்றையும் சொல்லாதே. அவருடைய பொருளாகிய இக்குழவியை—என் வயிற்றிலிருப்பதை—அவருக்களித்த பின் என் உயிர்போகட்டும்'

* * *

'அடேய் சுந்தரம்' என்ற அதட்டலுடன் பூபாலன் தெருவில் கதர் துணிகள் விற்கும் சுந்தரத்தின் தோளைப்பிடித்து நிறுத்தினான். அவன் முகத்தில் கோபம் ஜ்வலித்தது.

'என்னடா பூபாலா...........'

'குசலப்பிரசனம் அப்புறம் ஆகட்டும்—எங்கே அவள்!'

சுந்தரம் யோசித்தவண்ணம், 'யார்?'

'உனக்குத் தெரியாதோ........பாவம்! அடேய், மதனகாந்தா எங்கே?'

'எனக்குத் தெரியாது'

'அப்படிப் புளுகினால் இதுதான்' என்று பூபாலன் ஒன்றையும் யோசிக்காமல் தன் கையிலிருந்த குடையினால் சுந்தரத்தின் முகத்தில் அறைந்தான். ஆனால் அவன் முகத்தில் சாந்தம் பொலிந்தது. பூபாலனுக்குக் கோபம் பொங்கியது.

'ஏன் வீணாய் ஆத்திரப்படுகின்றாய்.......................மீதியை முடிப்பதற்குள் அறையின்மேல் அறை விழவே கீழே சாய்ந்தான்.

'ஒன்று முடிந்தது................' என்று மனநிம்மதியாய் கிளம்பினான் பூபாலன்.

* * *

இந்த உலகமுழுவதும் சுற்றுவதாக இருந்தாலும் அவனைக் கொல்லாமல் விடுவதில்லை' என்ற வஞ்சின மனத்தினனாய் நடந்தான் பூபாலன். சுந்தரத்திற்கு அதுபோதும் என்று மனத்திருப்தி யடைந்தான். ஆஸ்பத்திரியில் அபாய நிலைமையிலிருந்தான் சுந்தரம்.

சுந்தரம் நற்குலத்தில் பிறந்தவன். அவன் தகப்பனார் மிகுந்த செல்வர். அவர் இறந்த பிறகு சுந்தரம் தன் தாயை ஒரு கிராமத்தில் சிறந்த பங்களா கட்டி இருக்க வைத்துவிட்டு உடல் பொருள் ஆவி மூன்றையும் தேசசேவைக்கு தத்தம்செய்து பாடுபட்டுக் கொண்டிருந்தான். தாயை எப்போதாவது பார்க்கச் செல்வான். ஆஸ்பத்

திரியில் படுத்தவண்ணம் மதன காந்தாவிற்கு ஏதாவது பூபாலனால் தீங்கு நேர்ந்துவிடப் போகின்றதோ என்று பயந்தான்.

உல்லாசமான சாயங்கால வேளை. சூரியனது கிரணங்கள் மஞ்சள் வெயிலைப் பரப்பி மனமகிழச் செய்தன. நிர்மலமான ஆகாயத்தில் பறவைகள் கவலையற்றுத் தங்கள் கூடுகளுக்குச்சென்று கொண்டிருந்தன. பூபாலன் இங்கும் அங்கும் ஆவேசத்தோடு அலைந்தான். இருளும் சமயம் வந்தது. இரவு தங்குவதற்கு எந்த இடம் பார்ப்பது என்று சுற்றிநோக்கினான். அந்த நிசப்தமான இடத்தில் 'கர்கர்' என்று ராட்டினை நூற்கும் சப்தம் கேட்கவே சப்தம்வந்த திக்கே சென்றான். அக்கிராமாந்தரத்தில் அவன் கண்டதைப்போன்ற மாளிகை இருப்பது அபூர்வமாகத் தோன்றியது. சடக்கென சப்தமெல்லாம் நின்றது.

'சாந்த நிலையம்' என்ற பெயரையுடைய அப்பங்களா சகலவிதத்திலும் அதன் பெயருக்குத் தக்கதாக அமைந்து இருந்தது. அதன் வாயிலண்டை சென்று நின்று பார்த்தான். ராட்டைகளில் நூல்நூற்று விட்டுக் குடியானவர்கள் தங்கன் தங்கள் கூலியைப் பெற்றுக் கொண்டு கிளம்பினார்கள். அவர்களுடைய முகத்தைப் பார்க்க அவன் கண்கள் கூசின. 'என்ன சந்தோஷம்! என்ன தெளிவு!! என்ன காந்தம்!!!' என்ன பிரகாசம்? எல்லோருக்கும் கூலிகொடுக்கும் பெண்ணைப் பார்த்தான். அவன் முகத்தில் குப் என்று ரத்தம் ஏறியது. கைகால் பதறின. கால்கள் ஒன்றோடொன்று இடித்துக் கொண்டன. மெதுவாக இவ்விகாரங்களை அடக்கியவண்ணம், 'அம்மா, இன்றிரவு இங்குத் தங்க அனுமதியளிப்பீர்களோ?' என்றான்.

'வீட்டுக்காரரைக் கேட்டுச் சொல்லுகிறேன்'

மதனகாந்தா—பூபாலனின் மனைவி—தன் கணவன் எதிரில் நிற்பதை அறியாமல் உள்சென்றாள். பூபாலன் திடீரென்று அவள் பின்சென்றான். 'உனக்கு எத்தனை வீட்டுக்காரர்கள்' என்று சொல்லியவண்ணம் தன் பைக்குள்ளிருந்த கத்தியை எடுத்து 'இரண்டு ..........' என்று குத்தினான். மதன காந்தாவின் நல்ல காலத்தினால் அவன் கை தழுதழுத்ததினால் இரண்டு சரிவுக்காயங்களே ஏற்பட்டன. 'என்னடியம்மா' என்று ஒருமாது மதன காந்தாவின் கூச்சலைக் கேட்டு ஓடிவந்தாள். பூபாலன் திகைத்தான்.

'அடேய் பூபாலா! அம்மா இதென்ன! மதனகாந்தா இறந்து விட்டாளா! அடபாவி! ஆத்திரக்காரா! எனக்கு அப்பவே தெரியும்! நான் நினைத்தபடியே நீ வெறியனாகிவிட்டாய்.'

சந்தேகப்பட்டுக் கொண்டிருந்த சுந்தரனும் அங்கு வந்து சேர்ந்தான்.

'என்டா, இது என்னடா சுந்தரம் கட்டு?'

'எல்லாம் பூபாலன் கொடுத்த பிரசாதங்கள்'

மதன காந்தா கண்விழித்தாள்.

பூபாலன் ஒரு நாற்காலியில் விழுந்து முகத்தை மூடிக்கொண்டான். சுந்தரம் நடந்ததைத் தன் தாயாரிடமும் மதனகாந்தாவிடமும் உரைத்தான்.

பின்னர் சுந்தரத்தின் தாயார் பூபாலனுக்கு உண்மையைக் கூறி ஆத்திரப்பட்டு அவன் செய்த காரியங்கட்காக அவனைக் கடிந்தாள்.

'அம்மா போதும், அவர் மனதைப் புண்படுத்தாதே' என்றான் சுந்தரம்.

மதன காந்தா வலியையும் பொருட்படுத்தாமல் தன் நாதனிடம் சென்று அவன் கையைத் தொட்டு, 'போனது போகட்டும். இவ்வளவெல்லாம் செய்த தங்களுக்கு பரிசு கொடுக்கிறேன் வாருங்கள்' என்றாள்.

பூபாலன் தன் ஆண்குழவியை மாறிமாறி முத்தமிட்டு, மன்னிப்புப் பெற்றான்.

இப்போது பூபாலன் வேலைக்கு விண்ணப்பம் போடாமல் தேசிய மகாசபைக்கு சலியாமனதுடன் வேலைசெய்து வருகின்றான்.


வெளி வந்து விட்டது! வெளி வந்து விட்டது!!

## தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இந் நூலைச் சிலபக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை எட்டணு தான்.

தபால் செலவு அணு 2. 10 அணு ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# சக்தி

[பழனி K. G. சுப்பிரமணியன்]



'வெற்றி! வெற்றி!! எடுத்த காரியம் யாவினும் வெற்றி!!!' என்று செந்தமிழ் நாட்டுச்சிரிய கவிச்சிங்கம் ஸ்ரீ சுப்ரமணிய பாரதியார் எழுதி வைத்தது போலவே மனிதனது எம்முயற்சியும் விரயமாகாதென்பது உண்மையிலும் உண்மையாகும். பரந்த இந்நில உலகின்கண் மானிடர் தத்தம் கருத்திற்கிசைந்தவாறு பல்வேறு துறைகளில் தங்கள் சிந்தனை சென்றவாறும், மனங் கட்டளையிடுமாறும் ஓர்வகை முன்னேற்றத்தைக் கருதி சுயநலமற்ற சூட்சுமபுத்தியால் தூண்டப்பட்டவர்களாய்ப் பிரயத்தனம் எடுத்துக்கொண்டு 'கருமமே கண்ணாயினார்' என்ற ஆன்றோர் அமுதமொழியை மெய்ப்பிக்கும்வண்ணம் தம் காரியத்தில் கண்ணாயிருந்து கடனாற்ற முற்படுகின்றனர். அப்படித் தங்கடனாற்ற மூற்படுகின்றவர் மலைவந்து முன்விழினும் மனோநிலை கலங்காதவராய் அஞ்சா நெஞ்சினராய் இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள்; இனியும் இருப்பார்கள். இதற்கு சரித்திரமும், சாஸ்திரமுமே போதியசான்றாகும். எத்தகைய எளிய ஆரோக்கியத்தையும், மெலிந்த தேகத்தையும், கிழப்பருவத்தையும் உடையவர்களாய் இருக்க நேரினும் தளராத ஊக்கத்தினால் அவர்கள் தங்கள் தொழிலை ஆக்கக் கிளம்புகின்றனர். ஒருவகை உற்சாகம் அவர்களுள்ளிருந்து பரிணமிக்கிறது. ஓர் மகத்தான சக்தி அவர்களது பணியாள்போன்று வேலை செய்துவருகின்றது. ஆகா! என்னே அச்சக்தியின்வேகம்! அநியாயத்திற்கு பயப்படாததும், அதர்மத்திற்கு அஞ்சாததும், உண்மைக்கு மாறுபடாததுமாகிய அச்சக்தியின் வல்லமை என் போன்ற சிறியவர்களால் வருணிக்கப்பாலதன்று. அச்சக்தியே ஆத்ம சக்தியாகும்.

மானிடராய்ப் பிறந்தோர் யாவரும் அத்தகையவொரு சக்தியை உடைத்தாயிருக்கின்றனர். அதை அவர்கள் உபயோகப்படுத்தாமலும் உபயோகிக்கத்தக்க பருவத்தை உண்டாக்கிக் கொள்ளாமலும் அதன் உண்மையான மகத்துவகுணத்தை அறியாமலும் வாளாயிருந்து விடுகின்றனர். எவன் ஒருவன் தன்னை யறிகின்றானோ, எவன் தன் குறைகளைத் தெரிந்து தன்னை உயர்த்திக்கொள்ள எண்ணுகின்றானோ எவன் தன் வலிமாற்றான்வலி இவற்றை நன்குணர்கின்றானோ அவன்,

ஆத்மசக்தியின் கிருபை பாலிக்கப் பெற்றவனாகவே இருப்பானென்பது நிச்சயம். அவன் எத்தகைய கருமத்தை முடிக்க எண்ணியபோதிலும், தன் உயிர் தன் உடலினின்று நீங்கும்வரை தன் எண்ணத்தை மாற்றிக்கொள்ளவோ, அன்றி முயற்சியைச் சிதறவோ, விடமாட்டானென்பது சத்தியம்.

நம் நாட்டில் எத்தனையோ மகரிஷிகள், ஆத்ம சக்தியில் வல்லவர்களாய் வாழ்ந்திருக்கிறார்கள். நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும் ஆத்மசக்தி மிகுதியும் படைத்தவர்களே. நம்மவர் 'பிரகலாதனின் 'சரிதையை அறிந்தேயிருப்பார்கள். அத்தகையதொரு ஊக்கத்தைக் காட்டவும், அவன் பெயர் இன்னும் இந்நில உலகின்கண் புகழ்படவும் காரணமாயிருப்பது எது? அவனிடமிருந்த அத்தகையதொரு சிறந்த தெய்வீக சக்தியேயன்றி வேறென்ன?

புதிய உண்மைகளை எடுத்தோதி அரிய இயக்கங்களை ஆரம்பித்துப் பின்னர் உயிர்துறந்த மேதாவிகள் அநேகர் இருக்கின்றனர். அவர்களது பொய்யுடல் அழிந்ததெனினும் அவர்களது ஆத்மசக்தியின் வாய்ப்பட்டு நின்ற புகழும், உண்மையும் நிலைத்தேயிருக்கின்றது. மேனாட்டார் ஆத்மசக்திக்கு மாறுபட்ட மிருக சக்தியில் நம்பிக்கை உள்ளவர்களாய் இருந்தபோதிலும் அவர்களிலும் அநேகர் இத்தகையதொரு சக்தியடைந்தும் இருக்கின்றனர். டால்ஸ்டாய், மெக்ஸ்வினி, ஜோசப்மெஸ்ஸினி இவர்களே அதற்குப் போதிய சான்றாகும்.

காற்றும் நுழையாத இடங்களில்கூட இதுகாலை காந்தி அடிகளின் பேச்சும் கொள்கையும் மலிந்து கிடக்கின்றன. அவரது நாமம் உச்சரிக்கப்படாத இடமும், அவரது கொள்கையை உணராத கிராமமும் நம் நாட்டின் இதுகாலை இல்லையென்பதே எமது உண்மையான துணிபு. ஆகையால் அத்தகைய நிலைமையை அருளியுள்ள அன்னாரின் ஆத்மசக்தி பொன்னேபோல் போற்றத் தக்கதாகும். உலகத்திற்கே வழிகாட்டியாய், உலகம் போற்ற விளங்கும் காந்தி அடிகளின் ஆத்ம சக்தியின் வல்லமையை உலகமெங்கும் புகழ்ந்து கொண்டாடட்டும்.

---

தாய்:—ஏண்டா கிட்டு, தாத்தா காதில் பேனா குச்சியால் குத்திவிட்டாய்!

கிட்டு:—அம்மா, தாத்தா நான் புத்தகம் வைக்கும் இடத்துக் கருகில் படுத்து கிடந்தால் மறதியாக மைக்குப்பி யென்று குத்தி விட்டேன்.

—என். எம். சுபைர்.

# வேலையில்லாத் திண்டாட்டம்

[எஸ். வி. எஸ்.]



'வீட்டில் இப்படி சும்மா உட்கார்ந்துகொண்டு இருந்தால் எப்படி உத்தியோகம் வரும். பத்தாக் குறைக்கு ஒரு குழந்தையையும் எனக்கு கொடுத்துவிட்டீர்கள்; குழந்தை பிறந்து 6 மாதமாகிறது. அதற்கு ஒரு நகை, காப்பு, கொலுசு முதலியவைகள் போட ண்டாமா?' என்று ஒரு அதட்டு அதட்டினுள் என் மனைவி கதம்.

அவள் சொல்லும்படி நான் முதலில் வைத்துக்கொள்ளவில்லை. ஆனால் அவன் பன்முறை சொல்லும்படி நேரிவிட்டது. அதைக் கேட்குமாறு எனக்கும் நேரிட்டது. நேயர்களே! உங்களிடம் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் உண்மையை யறிந்து என்னை அன்போடு நோக்குவீர்கள்.

நான் இருப்பது நாகலாபுரம் என்னும் கிராமம். எனக்கு நஞ்செய்யும் புஞ்சையும் ஆக 10 எக்கர்கள் இருந்தன. அதில் 5 எக்கர்களை விற்று சென்னை பச்சையப்பன் காலேஜில் பி. ஏ. வரை படித்து பரீட்சையில் இரண்டாவது வகுப்பில் ஜெயம் அடைந்தேன். எனக்கு தகப்பனர் இல்லை. அவர் இறந்து சுமார் 7 வருடங்களாய்விட்டது. என் தாயார்தான் இதுவரைக்கும் என்னைக் காப்பாற்றி படிக்கும்படிச் செய்து கலியாணமும் நடத்திவைத்தாள். காலேஜில் நான் படிக்கும் போது நான் பார்க்காத சினிமா இல்லை; கேட்காத சங்கீதக் கச்சேரி இல்லை! பிரதிதினமும் நன்ருக முகக்ஷவரம் செய்துகொண்டு மடிப்பு கெடாத நிஜாரும் சட்டையும் அணிந்து செல்வேன். பரீட்சை தேறினதும் என் கிராமத்திற்கு வந்து சேர்ந்தேன். உடனே முதல் வேலையாக 1 டஜன் 1½ அணு ஸ்டாம்புகளையும் 1 டஜன் கவர்களையும் வாங்கித் தயாராய் வைத்துக்கொண்டேன். பேப்பர்களையும் வரவழைத்துக்கொண்டேன். முதல்நாள் விளம்பரங்களைப் படித்துக் கொண்டிருந்தேன். 'ஒரு உபாத்தியாயர் தேவை' என்பதைக் கண்டு

அந்த விலாசத்திற்கு எழுதினேன். மூன்றும்நாள் பதில்கிடைத்தது. வேலை மற்றொருவருக்குக் கொடுக்கப்பட்டதாக அறிந்தேன். சில தினங்களுக்குப் பின் பல கம்பெனிகளுக்கும், சர்க்கார் ஆபீஸ் களுக்கும் பல அப்ளிகேஷன்கள் அனுப்பினேன். ஆனால் சுகம் இல்லை. ஒரு பதில்மட்டும் எனக்கு சிரிப்பைக் கொடுத்தது. 'சுங்க இலாகாவில் இருக்கும் வேலைக்கு உமது அப்ளிகேஷன் கிடைத்தது. ஆனால் நீர் மிகவும் குள்ளமாக இருக்கிறீர்' என்று சர்க்கார் பதில் ஒன்றிருந்தது.

நான் எவ்வளவோ பிரயத்தனம்செய்தும் அந்த வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் கொடிய பிசாசு என்னை விட்டபாடில்லை.

தத்துவ ஆராய்ச்சிக்கு படித்து எம். ஏ. பட்டத்தைப் பெறலாம் என்று எண்ணினேன். தாயாரும் மனைவியும் அதை ஆமோதித்தார் கள். ஆனால் தத்துவ சாஸ்திரத்தைப் படித்து என்ன செய்வது? எந்தக் காலேஜிலாவது தத்துவ உபாத்தியாயாக இருக்கவேண்டும். இக்காலத்தில் தத்துவ சாஸ்திரப்படிப்புக்குச் செல்லும் மாணவர்கள் கொஞ்சம். பல காலேஜில் தத்துவ சாஸ்திர கல்வி இலாகாவை மூடி வருகின்றனர். அப்படியிருக்கையில் எனது எம். ஏ. தத்துவப் பட்டம் வயிற்றுப் பிழைப்புக்கு வழியைச் செய்யுமா? அதனால் அதைத் தள்ளிவிட்டேன்.

தற்காலத்தில் பத்திரிகைகளுக்கு சித்திரம் எழுதப் போகலாம் என்று முடிவு செய்தேன். மெட்ரிகுலேஷன் வகுப்பில் நான் சித்திரம் எழுதுவதிற் சிறந்தவன் என்று உபாத்தியாயர் சொன்னது ஞாபகத் திற்கு வந்தது கன்றுக்குட்டி ஒன்று எழுதினேன். அது கழுதை போல் இருந்தது. அதனால் அதையும் விட்டுவிட்டேன்.

வக்கீல் வேலைக்குப் போனால் நலமாயிருக்குமென்றெண்ணி னேன். மூன்று வருஷங்கள் சென்னையில் இருக்கவேண்டுமே, அதற்கு பெருத்த பணமுடிப்பு வேண்டுமே என்ற வினாக்கள் பல எழும்பின. தற்காலத்தில் எனது வக்கீல் நண்பர்களைப் பார்க்கும் பொழுது என்னை யறியாமலே கண்ணீர் வந்துவிடும். நான் வக்கீல் பரீட்சைக்குப் படித்துத் தேறினாலும் என்னிடம் கேஸ் கொடுப்பவர் கள் யார்? அதனால் அந்தத் தொழிலுக்காக 'லாகாலேஜ்' போவ தில்லை என்று தீர்மானித்துவிட்டேன்.

அடுத்த யோசனை உபாத்தியாயாகப் போகலாம் என்று நினைத் தேன். பள்ளிக்கூடங்களில் பையன்களுடன் சேர்ந்து நன்றாக அவர் களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தால் நல்ல பெயரும் மதிப்பும் ஏற்படும் என்று நினைத்தேன். வருஷ முடிவில் மெட்ரிகுலேஷன் பரீட்சைக் காகிதங்கள் எனக்குக் கிடைக்கும், அவற்றைப் படித்து மாணவர்களுக்கு 'பாஸ்' கொடுக்கலாம். சர்க்காரும் நல்ல சம்பளம்

கொடுப்பார்கள். மேலும் நான் சில பெரிய மனிதர்களைப்போல் சமூக விஷயங்களில் தலையிட்டு ஜனங்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்தால், 'ராஜா' பட்டமும் கிடைக்கும் என்று எண்ணினேன். சைதாப்பேட்டையில் இருக்கும் உபாத்தியாயர்கள் காலேஜுக்கு 'அப்ளிகேஷன்' அனுப்பினேன். சிபார்சு கடிதங்கள் கொடுப்பவர்களே இல்லை. கடைசியில் எனது அப்ளிகேஷன் சைதாப்பேட்டை குப்பைத் தொட்டியில் போய் விழுந்தது. நான் ஒரு பள்ளிக்கூடத்தில் 3 வருஷம் உபாத்தியாயராக இருக்கவேண்டுமென்றும், அப்பொழுதுதான் கமிட்டியார் எனது மனுவைப் பார்க்கக் கூடுமென்றும் அறிந்தேன். எல். டி. பட்டம் இல்லாமல் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயராக இருக்க முடியாதென்று பின்பு அறிந்தேன். பள்ளிக்கூடங்களுக்குப் போனால் எல். டி. பட்டம் பெற்றிருக்கிறீரா? என்று கேட்கிறார்கள். எல். டி. வகுப்பிற் சேரலாமென்றால் பள்ளிக்கூட அனுபோகம் இருக்கிறதா? என்று கேட்கிறார்கள். கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக்கண்டால் கல்லைக் காணோம் என்னும் செய்தியாக இருக்கிறது. இந்தத் தர்ம சங்கடத்துக்கு என்ன செய்வது? நான் திரிசங்கு சுவர்க்கத்தில் இருப்பதாக உணர்ந்தேன். எல். எம். பி. படித்து வைத்தியராகப் போகலாமென்றால் பிணங்களைத் தொடவேண்டும், அதை அறுக்கவேண்டும். நான் அதைப்பற்றி கவலை கொள்ளாவிட்டாலும் என்னருகில் நின்ற என் அருமைக் காதலி மரகதம் 'அந்தப் படிப்பு கூடாது' என்று சொல்லிவிட்டாள். பெண்ஜாதி முடிவுசெய்த பின் நான் அப்பீல் செய்து கொள்ள முடியுமா?

ஒரு சினிமாக் கம்பெனியில் சேர்ந்து மேனாட்டு ஆக்டர்களைப் போல் பிரசித்தி பெறலாம் என்று நினைத்தேன். அதிலும் என் மனைவி குறுக்கிட்டாள். நான் வேறு மங்கையர்மீது காதல்கொண்டு விடக்கூடும் என்றும், நடத்தை கெட்டுவிடுமென்றும் சொன்னாள். மேலும் என் முகம் ஹனுமந்தராயனைப்போல் இருப்பதாகக் குறிப்பாக உணர்த்தினாள். அதைக்கேட்டதும் ஸினிமா எண்ணத்தை விட்டுவிட்டேன். ஏன்? உண்மையில் டார்வின் (Darwin) கனவான் சொல்லியபடி எனக்கு வால்மட்டும் இல்லை; முகமட்டும் செங்குரங்கின் முகத்தைப்போல் ஜ்வலித்துக்கொண்டிருந்தது. நான் என்ன செய்யட்டும்? என்னைப் படைத்த பரமனை நொந்துகொள்வதா?

இவ்வாறு பலவாறாக நான் எண்ணமிட்டேன். ஒருநாள் என் மனைவி என்னையடைந்து 'நாதா! நேற்றைய பேப்பரில் சர்க்கார் தொழில் இலாகாவில் ஐம்பது ரூபாய் வேலைகாலியாக இருப்பதாக விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தீர்களா? நீங்கள் அதற்கு அப்ளிகேஷன் போடுங்களேன்' என்று சொன்னாள்.

'ஆனால் சர்க்கார் வேலை எளிதாகக் கிடைக்கிறதா? வேலை கிடைக்கிறது குதிரைக் கொம்புபோல் இருக்கிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முன்பு ஆஜராக வேண்டும். ஆஜரானால் வேலை கிடைக்குமா? பகீரதப்பிரயத்தனம் செய்தாலுங்கூட வேலை கிடைப்பது அரிது' என்று என் மனைவிக்குச் சொன்னேன்.

மறுநாள் நான் ஒரு யூனிவர்சிட்டி கான்வகேஷன் பிரசங்கத்தை படித்து அதன் சாராம்சத்தை என் மனைவிக்குச் சொன்னேன்.

பூமியை பி. ஏ. பட்டதாரிகள் உழுவதற்கு எடுத்துக்கொண்டால் பிழைப்புக்கு வழியேற்படும்' என்று நான் படித்துக் காண்பித்தேன்.

'நீங்கள் பூமியை ஏன் உழுது பயிரிடலாகாது?' என்று கேட்டாள் என் மனைவி.

'எனக்கு எதைப் பயிரிடுவது என்பது கூடத் தெரியாதே!' என்று நான் சொன்னேன்.

இனி என்ன செய்வது? நானும் இன்னும் யோசனை செய்வண்ணமிருக்கிறேன். உங்களுடைய ஆலோசனையை எனக்குத் தெரிவியுங்கள்.

---

## சமயோசித புத்தி

(பாடகர் நந்தனார் சரித்திரம் நடத்தினார். அதில், சிவலோக நாதனைக்கண்டு சேவித்திடுவோம் வாரீர் என்ற, பாட்டை மிகவும் உருக்கமாய் பாடினார். கதை முடிந்தது. யாவரும் சென்றுவிட்டனர். பாடகர் மகன் மிக்க சேஷ்டை செய்தான்.)

பாடகர்:—(கோபமாக) அடே பயலே 'ஏனடா துஷ்டத்தனம் செய்கிறாய். வெளுத்து வாங்கிவிடுவேன்' என்று கூறிக்கொண்டே அடிக்க கையை ஓங்கினார்.

மகன்:—அப்பா நான் ஒன்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பாடகர்:—என்ன பிரமாதமாய் தெரிவிக்கப் போகிறாய்.

மகன்:—இப்போதுதான் தாங்கள் சிவலோகநாதனைக் கண்டு சேவித்திடுவோம் வாரீர் என்று பாடினீர்கள். அதில் தாங்கள் 'தன்னை வணங்க காங்களளித்தார்' என்று பாடினீர்களே, தங்களுக்கு கடவுள் கைகொடுத்தது அவரை வணங்கத்தானே. அப்படியிருக்க ஏன் என்னை அடிக்க வரவேண்டும். அடிக்காதேயுங்கள்.

M. G. S. மணி.

# வாலிப உலகு வலிமை இழந்ததேன்?

[திருவாளர் ஆர். எம். எஸ். எம். கதிரேசன் அவர்களின் ஒலி கருவி உபந்நியாசம்]



இலங்கை இளைஞர் சங்கத் தலைவரும், சீர் திருத்த நெறி இயக்கத்தில் பெருவேட்கை கொண்ட வாலிபருமான ஸ்ரீமான் R. M. S. M. கதிரேசன் அவர்கள் அடிக்கடி கொழும்பு ஒலிபரப்பு நிலையத்தில் சிறந்த பிரசங்கம் புரிந்து வருகிறார். 'தமிழரசு' ஆவணி இதழில் அன்பர் கதிரேசனாரின் 'காதல் உலகு' பிரசங்கம் வெளியானது நேயர்கட்குத் தெரியும். ஸ்ரீ. ஆர். எம். எஸ். எம். கதிரேசன் அவர்கள் சென்ற ஆகஸ்டு 25ௌ யன்று கொழும்பு ஆகாய வசனி நிலையத்தில் 'வாலிப உலகம்' என்னும் பொருளுரை குறித்துச் சிறந்த சொற்பெருக்கு ஒன்று நிகழ்த்தினார். ஸ்ரீமான் கதிரேசனின் மேற்படி பிரசங்கம் உணர்ச்சி பொலிவதாக, இந்நாள் வாலிப உலகுக்குப் பயன்தரும் பல உதாரணங்களுடன் விளக்கி, மனித சமூகத்தின் வளர்ச்சிக்கு வழி துலக்குவதாயிருந்தது. மேற்படி சொற்பொழிவின் சில பகுதிகளை மட்டும் நம் 'தமிழரசி'ல் வெளியிட்டிருக்கிறோம்.

## வாலிபத் தன்மை எது ?

வாலிப உலகம் என்னும் பொருளுரைபற்றி ஈண்டுப் பேசப் புகு முன்னர் இவ்வுலகின் தன்மை குறித்துச் சில சொல்ல வேண்டுவது என் கடமையின் உரிமை. 'வாலிப உலகம்' எனின் அறிவும் அன்பும் ஆக்கமும் இளமையும் நிரம்பப் பெற்ற மனித சக்தியின் முதற்கூறையே குறிப்பதாகும். இயற்கையில் அரும்பும் இளமையின் ஆற்றல் வாலிபத் தன்மையைப் பெருக்கும் நீர்மைய தாகும். அஞ்சாமை, ஆக்கச் செயல், வீர உணர்ச்சி, தியாகம் செய்யும் தன்மை, செயலின் திறமை இவைகளெல்லாம் இளைஞர்க்கன்றி முதுமையாளர்க்கல்லவன்றோ !

## இளமை வாழ்வே இன்ப வாழ்வு

இளமை எது? இளமையின் ஆற்றல் எத்தகையது? என்னும் கேள்விக்கு ஈண்டு விடைகூறித் தெரியவேண்டுவதில்லை. உலகில் உய்யும் புல்முதல் மக்கள் ஈருக உள்ள எல்லாவற்றிற்கும் இளமை வாழ்வே அடிப்படை. இளமையின் பெற்றி உணர்ந்தவரே இளமை வாழ்வின் அருமை அறிவர். இளமையின் எழில் எத்தகையார் நெஞ்சையும் எழிதில் கவர்ந்துவிடும். சுருக்கத்தில் சொல்கிறேன். இளமையே எல்லாவற்றிற்கும் ஊற்று; இளமையில்லையேல் உலகியல் இல்லையன்றோ?

## இளமை இழந்தால் என்னாகும்?

மக்கள் வாழ்வில் விழுமியதான இளமை இளைஞர்கட்கன்றோ இலங்குதல் வேண்டும். இளமையில் திகழும் இளைஞர்வாழ்வே இன்ப வாழ்வைப் பண்படுத்துவதாகும். இளமை இழந்த இளைஞர் வலிமை இழந்து வாடுவர் என்பது ஈண்டு கருதத்தக்கது. இயற்கை வழி பிறழ்ந்து இளமைவலி யில்லாது ஆக்கமிலை கெடும் ஒருவர்து வாழ்வு பற்றி இதுபோது கூறப்போக்தேனில்லை.

## பெண்பாலாரும் மனிதத் தன்மை பெற்றவரே!

பெண் ஆண் சேர்ந்த ஒன்றே வாழ்வாகும், இருபாதியும் சேர்ந்த ஒன்றே முழுமனிதத் தன்மை பெற்றதாகுமென அறிஞர் நவில்கிறார். பெண் ஆண் வடிவங்கள் இயற்கையில் அமைகிறன வாதலால் அவ்வியற்கை வழி மதத் தன்மையை நோக்குதலே அறிவுடையோர் கடமை. அவ்வழி நோக்கின் பெருமை மிக்க பெண்பாலாரும் மனிதத்தன்மை பெற்ற மாண்பினர் என்பதில் ஐயம் யாது? மனிதத்தன்மை கொண்ட மகளிரும் வாலிப உலகில் ஒரு பாதி உறுப்பினர் என்று கூறுதல் ஒப்பமுடிந்த உண்மை. எனவே யான் வாலிப உலகுபற்றிச் சொல்ல நினைக்கும் அனைத்தும் இளமையின் செழுமையான பெண்பாலார்க்கும் உரியது என்க.

## வாலிப உலகு மெலிந்ததேன்?

வாலிப உலகில் ஆணினத்தவர் உரிமை யொப்பப் பெண்டிர்க்கும் உரிமை உண்டென்று இனிச் சொல்லித் தெரியவேண்டுவதில்லையென நினைக்கிறேன். எனினும் இக்கால உலகு பெண்ணுரிமை கடிந்து நிற்பதால் வாலிப உலகே வலிமை இழந்து இளமை குன்றி வாளா கிடக்கின்றது. ஆண்மையும் திண்மையுமின்றி அச்சத்தின் மூழ்கி அறியாமைக் கிலக்காயுள்ளது. அறியாமையால் விழுங்கப்பெற்றுத் துன்ப இருளில் தடித்துக்கொண்டிருக்கும் வாலிப உலகு செயலுரிமை இன்றி மனிதத் தன்மையின் மாண்பையும் குன்றச் செய்து வருகிறதெனின் அதுமிகையாகா உண்மையாகும்.

ஆணுலகின் தன்னலத்தால் இன்ப அன்புத் தெய்வமான பெண்மையின் அருமை பெருமை இழந்து வாடுகின்றது. பெண்ணின் உரிமை பறிமுதல் செய்த நாள்தொட்டு வலிமை வாய்ந்த வாலிப உலகு மெலிந்த உலகாகக் காட்சி யளிக்கின்றது.

## வலிமை இழந்த வாலிப உலகு

நண்பர்களே! இற்றை வாலிப உலகு எந்நிலை உற்றிருக்கிறது? எக்காட்சி வழங்குகிறது? உற்று நோக்குங்கள். அறிவு விளக்கம் பெற்ற ஆண்மை உணர்வு எங்கே? புத்துயிரளிக்கும் மனோ உறுதி எங்கே? நடுநிலை குன்றாத நியாயத்தன்மை எங்கே? மனச்சான்று வழுவாத அறநெறிக் கொள்கை எங்கே? சாதி வேற்றுமை களைந்த சமரச வேட்கை இன்று யாண்டுற்றது? இளமையொழுகும் அழகு மணிகளான இளைஞர்கள் இப்போது யாண்டிருக்கின்றனர்? வாலிப இரத்தினங்களின் அறவொழுக்கம் இதுபோது யாண்டுற்றது? அவர்களின் வீரம் எங்கு போந்தது? இளந்தமிழர்களே! இவையெல்லாம் இப்போதைய வாலிப உலகில் நிலவப் பெற்றிருக்கின்றதா? 'வீரம் செறிந்த தமிழ்நாடு' என்று பாரதியார் கூறிப்போந்தார். அவர் கூற்று அக்காலத் தமிழகத்தவர்கட்கன்றே உரிமையாயிருந்தது.

## சிறுமை எய்தக் காரணம் என்ன?

பண்டைநாள் வாலிப உலகு பெற்றிருந்த பெருமை என்ன? இந்நாள் இளைஞருலகு உற்றிருக்கும் சிறுமை நிலையாது? சிந்தித்துப் பாருங்கள். இப்பொழுது வாலிப உலகு வலிமைகுன்றி நாளுக்கு நாள் சிறுமை எய்திக்கொண்டு போதல் கருத்துடையார் கண்ணுக்குப் புலனாகும். புன்மை நிகழ்ச்சி வாலிப உலகில் புகுந்துவிட்டது. நல்வழிப்போந்து நலமுறவேண்டிய மக்கள், அன்பு நெறிதவறி துன்பநெறியில் இடர்ப்படல் எத்துணை அறியாமை?

## மனிதரென்பவர் எவர்?

வாலிப உலகினர்க்கு ஒன்று சொல்லுகின்றேன். மனிதர் எவர்? மனிதப் பிறவி தாங்கினவரெல்லாம் மனிதராவரோ? மனிதர் என்பவர் வெறுந்தோலல்லர், எலும்பல்லர், நாடி நரம்பல்லர், பிற வுறுப்புகளுமல்லர். இவையெல்லாஞ் சேர்ந்த கூடுமல்லர். மனிதரிலும் கல்லுண்டு, மரமுண்டு, விலங்குண்டு, மனச்சான்று அற்ற வெறுங் கூடுண்டு. பின்னை மனிதர் யார்? எண்ணம் எண்ணத்தின் ஈட்டம் மனிதர். மனிதரில் வேதாராக விளங்குவோரே, பகுத்தறிவுத் தன்மை பெற்றவராக வாழ்வோரே மனிதப் பிறவி தாங்கிய பயனைப் பெற்றவராவர்.

## எண்ணத்தின் ஈட்டமே மனிதர்

அன்பர்களே! எண்ணம் எண்ணத்தின் ஈட்டம் மனிதர் என்று முன்னர் கூறியுள்ளேன். எண்ணம் எது? காண்டல் கேட்டல் உண்ணல் உணர்தல் உறுதல் முதலியவற்றான் முகிழ்ப்பது எண்ணம். எண்ணமே மனிதப் பிறவியின் விழுப்பத்திற்கு மாண்பளிக்கிறது. எண்ணத்தின் ஈட்டம் மனிதத் தன்மைக்குரிய பகுத்தறிவு உணர்ச்சியை எழுப்புகின்றது.

## உலக நிலையின் கலக நிலை

மனிதப் பிறவி தாங்கிப் பகுத்தறிவு பெற்றுள்ள வாலிபர்களே! உங்கள் ஆண்மை செறிந்த வீர உணர்வுயாண்டுற்றது? இதுபோது நீங்கள் உற்றிருக்கும் சிறுமை நோய்க்குக் காரணம் என்னை? உங்கள் உடலில் ஓடிக்கொண்டிருக்கும் செங்குருதி நாட்டின் இழிநிலை யறிந்து கொதிப்புறவில்லையா? உலகநிலையின் கலகநிலை உத்தமரை சன்மார்க்க நெறியினரை வாட்டுகின்றது. வறுமை நிலை நாட்டினிடைப் புகுந்து இரத்தச்சாறு பிழிகின்றது. இந்நிலையில் நாட்டின் நல்லாண்மையாளராகிய இளைஞர்கள் என் செய்கின்றீர்கள்? உறங்கினால் உலகநிலை சீர்ப்படுமோ?

## இளைஞர் இயக்கம் இன்றியமையாதது

இளமை மிக்க வாலிபச் சகோதரர்களே! நீங்கள் பிறந்த நாட்டை நோக்குங்கள். நாடு உரிமை பெற்றிருக்கின்றதா? உரிமையற்ற நாட்டில் அடிமையாக வாழ்தல் தன் மதிப்பாளர்க்குத் தகாது. உரிமை இழந்து வாழும் வாழ்வும் வாழ்வாகுமோ? மனச்சான்றுக்கு மாறுபாடில்லாத தியாகத் தன்மைக்கு இளைஞர்கள் இயக்கங் காணுதல் கடமையாகும். இளைஞர் இயக்கத்தின் வழி நாடு செழிக்க நல்ல தொண்டு செய்வதே சிறப்பு. அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் போக்க இதுபோழ்தே இயக்கங்கண்டு உரிமை வாழ்வு வாழ இளைஞர் முந்துதல் அறிவுடைமை மிக்க செயலாகும். வாய்ச் சொல்லில் வீராகமட்டும் வாலிபர் இருப்பின், நாட்டின் ஜீவநாடியான செழுமை, வெம்மையாகி வறுமை வாழ்விலேயே வீழ்ந்துபடும் என்பது திண்ணம்.

## வீறிட்டெழும் விடுதலை முழக்கம்

இப்பொழுது உலகில் எத்திசையிலும் விடுதலை முழக்கம் வீறிட்டு நிற்கிறது. உரிமை உணர்வு பேசப்படுகின்றது. விடுதலை வேண்டாத மன்பதைகள் எவரும் இல்லை. விடுதலை இயக்கம் பல திறத்தன. ஒவ்வொரு கொள்கையாளரும் அவர்தம் கொள்கைக் கேற்ப விடுதலை வழிக்கு அடிகோலுகின்றனர். சில இடங்களில்

நாட்டைப்பற்றிய விடுதலை முழக்கம். சிலஇடங்களில் பொருளாதாரத்தை ஒட்டிய விடுதலை முழக்கம். இவ்வாறு விடுதலை இயக்கம் பலதுறைகளில் இயங்கிவருகின்றன.

## 'யாதும் ஊரே—யாவரும் கேளிர்'

விடுதலை இயக்கம் அறத்தை—அன்பை—அருளை—சகோதர நேயத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாட்டுச் சான்றோர் மொழிகளுள் ஒன்றினை வாலிபர்கட்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 'யாதும் ஊரேயாவரும் கேளிர்' என்னும் சீரிய செம்மொழியை உற்றுநோக்குங்கள். இப்பொன்மொழியில் பதிந்திருக்கும் சீரியகருத்துகள் தமிழ்நாட்டவர்க்குத் தெரியாததன்று. பழந் தமிழ்நாட்டின் நிலைநோக்கி தற்காலத் தமிழகத்தின் சீர்குலைவை உன்னிவெட்குறவே செய்வார். யாதும் ஊரேயாவரும் கேளீர் என்னும் பழந்த தமிழ்மக்களின் இச்சீரிய கொள்கையை யாண்டும் பரப்ப வேண்டுவதின் அவசியம் குறித்தே சன்மார்க்க நெறியினர் பெருமுயற்சி செய்துவருகின்றனர்.

## வெறுங்கூச்சலில் விடுதலை இல்லை

மக்கட் பிறவியில் பெறுதற்குரிய அன்புறவிற்கு பழந் தமிழ்நாட்டின் சமாசக் கொள்கை இஞ்ஞான்று உலகில் பாவிப் பெருக வேண்டும். சகோதர நேயங்கனிந்த எதுவும் எம் ஊர் எவரும் எம் உறவினர் என்னும் பேரறிவு விளக்கம் மக்களிடத்து உதிக்கப்பெறின் இதுகால் உலகில் எழுந்துள்ள சாதிப்பூசலோ யுத்தவெறிக் கொடுமையோ, எல்லாம் வீழ்ந்து படுமன்றோ? இளந்தமிழர்களே! விடுதலை விடுதலையென்று வெறுங் கூச்சலிடுவதால் பயன் என்ன? விடுதலை முயற்சி விடுதலை தருவதாயிருத்தல் வேண்டும். விடுதலை வேட்கை எழும்புதற்கு உரிமை உணர்வு பொங்கிப் பிறங்குதல் மிக அவசியம் வேண்டுவதாகும்.

## உயிரை ஈந்தேனும் உரிமை தேடுக!

உலகவாழ்வுக்கு இன்றியமையாத உரிமை உணர்வினை மனிதப் பிறவி தாங்கினோர் பெற்றே தீரல்வேண்டும். உரிமையற்ற உலக வாழ்வு நரகவாழ்வேயாகும். உரிமை என்பது எவ்வித கட்டுக்கும் உட்பட்டதன்று. இயற்கையிலேயே மனித உள்ளத்தில் ஒளிரும் உரிமை உணர்வை வளர்த்து, உரிமையாளராய் இருத்தல் வேண்டும். உரிமையின் பெற்றியை வாலிப உலகினர் உணர்ந்து, உயிரை ஈந்தேனும் உரிமைகாக்க இளஞ்சிங்கங்களான இளைஞர்கள் பீறிட்டெழ வேண்டுவது கடமையாகும்.

## உலக வாழ்வுக்கு உரிமை வேண்டும்

உரிமை இழந்த ஒருநாடு உரிமைக்குப் போராடக் கடமைப் படுதல் வேண்டும். சுயராஜ்யம் என்பது ஒவ்வொருவரது பிறப்புரிமை உலகவாழ்வில் இன்றியமையாத பிறப்புரிமை இழந்த மனிதன் உயிரிழந்த பிணம் போன்றவன் என்று இயம்புதலே சாலப் பொருத்தம். உரிமை வாழ்வு பெறாது உலகில்வாழும் மனிதர்களையே அடிமைகள் என்று உலகினர் சாற்றுகின்றனர். ஒருவனது உடலுக்கு ஊறு நிகழாதவாறு காத்தல்வேண்டும். அருமைத்தாயின் இளஞ்சேய்களே! உரிமை இயல்பு உணர்ந்தோரே உரிமையின் மாண்பறிவர். என்பதுபோல, உரிமை உணர்வின் எழுச்சியாலன்றோ 'சுதந்திரம் எனது பிறப்புரிமை, அதை நான் அடைவேன்' என்று அன்று திலக மகரிஷி கர்ஜித்துச் சென்றார்.

## அஞ்சா நெஞ்சம்படைத்த ஆண்மையாளர் தேவை

வலிமைவாய்ந்த வாலிபச் சகோதர சகோதரிகளே! இன்று நாடு உற்றிருக்கும் சிறுமை நிலையைப்போக்க வேண்டுவது எவர் கடமை! இளைஞர் கடமையன்றோ. எனவே இப்பொழுது நாட்டுக்கு எது தேவை? அஞ்சாமை தேவை. அதாவது அஞ்சா நெஞ்சு படைத்த ஆண்மையாளர் தேவை அஞ்சாமையால் உண்மை அரும்பும். உண்மையில் உணர்வு பிறக்கும். உணர்வால் உரிமை வாழ்வு கிடைக்கும். உரிமைவாழ்வால் உலக இன்பம் நுகரலாம். உலக இன்பத்தால் அன்புநிலை எய்தலாம்.

## ஆயுதம் பிடிப்போன் அஞ்சாமையாளனா!

ஆயுதந்தாங்கிப் போர்புரிவோன் அஞ்சாமை உள்ளோன் என்று இந்நாளில் பலர் கூறுகின்றனர். ஆயுதம்பிடிப்போன் அஞ்சுகின்ற மனிதனே அன்றி அஞ்சாமையுடையவனல்லன். அஞ்சாநெஞ்சினர் என்போர் ஆத்மசக்தியால் அஞ்சாமைபெற்ற பெரியார் பலராவர். இதுபோது உண்மையும் அஞ்சாமையும் உறையப்பெற்ற உலகோத்தமர் ஒருவரைக் குறிக்கவேண்டுமெனின் அவர் காந்தியடிகளாகத் தான் இருக்கவேண்டும். அஞ்சாமை மனிதர் மாட்டமைந்த ஆண்மை உணர்வை யெழுப்புகின்றது. ஆண்மை உணர்வு முகிழ்வால் நெஞ்சழுத்தம் நேர்மையாகத்தானே அரும்பும்.

## அஞ்சாமை அரும்புதல் வேண்டும்

இப்பொழுது தேசத்தில் அஞ்சாமை நிலைபெற்றாலன்றி நாடு செழுமை கொழிக்காது. நாட்டுமக்களும் உரிமையடைய இயலாது. அஞ்சாமை உணர்வு ஒவ்வொருவரிடத்தும் உறைந்து உரம்பெறல் வேண்டும். அஞ்சுகிற மனிதன் விலங்கினும் தாழ்ந்தவன். உயிர்போக

நேரினும் உயிர்ச்சாப்பு கருதாது அஞ்சாமையில் வாழ்வதே சிறப்பு. அஞ்சாமை அரும்புதற்கு வீரஉணர்வு பீறிடுதல் வேண்டும். அஞ்சாமையே வீரவாழ்வுக்கு வழிகோலுவதாகும்.

## வீராதல் எங்ஙனம்?

இளைஞரிடை வீரம் செறிந்த ஆண்மையுணர்வு பொலிதல் வேண்டுமென்பது எனது ஆசை. வீரம் பெறவேண்டுமேல் முதலாவது உடல் நலம் பேணல்வேண்டும். உடல் உரமில்லாதார் வீராதல் இயலாது என்று முன்னரும் கூறியுள்ளேன். வீரம் பெறுதற்குப் புரட்சி மனப்பான்மை சாத்விகத் தன்மையில் எழும்புதல் வேண்டும். சாத்விகத்தில் அரும்பும் வீரம் அடிப்படையான தியாக உணர்வுக்குக் காழ் கோலுவதாகும்.

## தியாக இயல்பின் மாண்பு

தன்னலம் விடுத்துப் பொதுநலம் புரிதற்குப் போகும்போது தியாக உணர்வு அதுவாகவே அரும்பும். தியாகத்தின் இயல்பு தனக்குள்ள எல்லாவற்றையும் உவகையோடு பிறர்க்களிக்கும் மனமுடைமை வாய்ந்த பெற்றி மிக்கதாகும். உலகநேயத்தை உயிரினும் பெரிதாகக் கருதி பொதுப்பணி புரியும் உத்தமப் பெரியோர்களையே தியாக மூர்த்தியாக உலகினர் குறிப்பிடுகின்றனர். தியாக உணர்வு இல்லாதவிடத்தில் உரிமைவேட்கை எழாது. உரிமை உணர்வு—தியாக சிந்தை எழாதவரிடத்துத் தன்னல நோக்கமே ததும்பி நிற்கும்.

## உரிமைக்காக தியாகம் செய்த உத்தம வின்ஸர்

உதாரணம் ஒன்று நவில்கிறேன். ஒவ்வொன்றைப்பற்றி ஒவ்வொருவிதத் தியாகம் நிகழ்ந்து வருதல் கண்கூடு. சமீபத்தில் தோழர் எட்வர்ட் அவர்கள் தியாக உரிமையை அடிபடையாகக் கொண்டன்றோ சாம்ராஜ்யப் பதவியைத் துறந்தார். வாலிபர்களே! தோழர் வின்ஸர் கோமகனரின் தியாக மாண்பை நோக்குங்கள். உரிமையின் பொருட்டு அவர் செய்த தியாகம் உலகத்திற்கே ஓர் உதாரணமன்றோ? ஒரு பெரும் சாம்ராஜ்யப்பேற்றை உரிமைவழி நிற்பதற்காக ஒரு நொடியில் தியாகம் செய்த தோழர் வின்சரை இன்று உலகம் கொண்டாடுகிறது. அன்பர் வின்சரை இதுபோது உலகம் போற்றுதற்குக் காரணம் யாது? உரிமை உணர்வுபடைத்த வீர் வின்ஸர் தியாக மூர்த்தியானதாலன்றோ உலகம் போற்றுகின்றது; உலகினர் புகழுகின்றனர்.

## நாட்டுக்காகத் தியாகம் புரியும் தோழர் ஜவஹர்

மனிதரில் மனிதராக விளங்கும் மற்றொரு தியாக புருஷனையும் நீங்கள் அறியவேண்டும். இதுபோது பாரதநாட்டின் வீரப்புதல்வ

# அவனும் அவளும்

[மேட்டுப்பாளையம் P. கணேசன்]

அவள் ஒரு வர்ணனையின் எல்லைக்குள் அடங்காத அழகிய சிறுமி. உறவின் முறையார் வீட்டுக்கு விருந்து வந்திருந்தாள். அந்த வீட்டிற்கு எதிர்ப்புற வீடுதான் அவன் வீடு. அஸ்தமன சூரியனின் பொன் வெள்ளிக் கிரணங்கள் செய்யும் கோலாகலத்தை நோக்கியவாறே அவன் வீட்டு வாயிற்படியில் நின்றுகொண்டிருந்தான். அந்த சமயம் தற்செயலாக அவளும் அவள் வீட்டினுள்ளிருந்தவாறே சாளரத்தண்டை வந்து நின்றாள். எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்த அவன் விழிகள் திடீரென்று அவளை நோக்கின. அவளைகண்ட அவன் அந்த வர்ணனைக் கெட்டாத அவள் வனப்பில் லயித்து நின்றான். அவனுடைய சிரம் சுழன்றது, உணர்வழிந்து பொம்மைபோல் நின்றான்.

அவளும் எறக்குறைய இதே நிலையைத்தான் அடைந்தான். ஆனால் உடனே உள்ளேயோடி மறைந்துவிட்டாள். மறுபடியும் அவள் வரமாட்டாளா வென்று அவன் வெகுநேரம் காத்திருந்தான். அவள் வரவேயில்லை. ஏங்கிய மனத்துடன் உள்ளேபோய் ஈஸிசேரிலே தொப்பென்று விழுந்தான்.

அது நடந்து இரண்டு வாரங்களாயிற்று. முன்னைப்போல் அவள் ஓடி மறைகிறதில்லை. அதற்குப் பதிலாக அவள் முகம் அச்

---

ஞக,—தேசத்தின் ராஷ்ட்ரபதியாக விளங்கும் தோழர் ஜவஹர் சரித்திரத்தை வாலிப உலகினர் உற்றுநோக்குதல் வேண்டும். உடல், பொருள், ஆவி, அனைத்தையும் நாட்டின் உரிமைக்காக—தேசத்தின் விடுதலைக்காகத் தியாகம் செய்த அஞ்சாநெஞ்சமைந்த ஆண்மையான தோழர் ஜவஹர் வீரரின் தியாகத்தை உன்னும் போது உள்ளம் உருகுகிறது. உரிமைக்காகத் தியாகம் செய்த—வின்லர்கோமகனையும், நாட்டிற்காகத் தியாகம் புரியும் ஜவஹர் லால்நேருவையும், தியாக மூர்த்திகள் என்று இன்றைய உலகம் புகழ்ந்து கொண்டாடுதலில் உண்மை இருக்கிறது என்பது வெள்ளிடை மலை. வாலிப உலகினரும் இவ்விரு தியாக புருஷர்களின் வழி நின்று தியாக உணர்வு பெறுமாறு வேண்டுகிறேன்.

சாளரத்தின் கம்பிகளால் நசுக்குண்டவாறு முன் நீட்டிக்கொண்டிருக்கும். அவனும் வாயிற்படியிலேயே நின்றுகொண்டிருப்பான் அவளைப் பார்த்துக்கொண்டே. இருவருக்கும் வீட்டினுள்போய் காரியத்தை கவனிக்க வேண்டுமேயென்று தோன்றுது. இருட்டும் போது எப்படியோ பிரிந்து விடுவார்கள்.

முன் அவர்களுள்ளத்திலே சிறு அலைகள் பாய்வதுபோல் பாய்ந்து கொண்டிருந்த உணர்ச்சி இப்போது புயலால் கொந்தளிக்கும் கடலைப்போல் குமுறிக்கொண்டிருந்தது. அவளுடன் வார்த்தையாடாவிட்டாலும் அவளைப் பார்த்துக்கொண்டிருப்பதுவே அவனுக்கு பாற்கடலைக் கடைந்தெடுத்த அமிர்தத்தைக் குடிப்பதுபோலிருந்தது. அந்த அழகின் ஒளியாகிய அமிர்தத்தைக் குடிக்கக்கூட அவனுக்கு அதிகநாட்கள் கிடைக்கவில்லை. அதற்கு சத்துருவாக வந்தான் அத்தாடகை சின்னு.

'சின்னு' அவள் பெயரை உச்சரிக்கும்போதே அவனுக்கு கர்ணகடூரமாயிருக்கும். சின்னுதான் அவள் உறவின் முறையார் வீட்டு எஜமானி'

* * *

அவனுக்கு தாய்தந்தையர் இல்லை. மாமா வீட்டில் வளர்ந்து வந்தான். நல்ல அழகன். கலாசாலையில் ஆறுவது பாரம் வாசித்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள் வழக்கம்போலவே வீட்டு வாயிற்படியில் நின்றுகொண்டிருந்தான். அவளும் சாளரத்தின் கம்பிகளுக்குள் முகத்தை அழுத்திக்கொண்டிருந்தாள். அப்போது வாயிலைப் பெருக்குவதற்காக சின்னு வெளியே வந்தாள். முன்பு இரண்டு மூன்று தடவை அவன் அங்கேயே நின்றுகொண்டிருப்பதை சின்னு பார்த்திருக்கிறாள். இத்தடவையும் அவனைப் பார்க்கும்போது அவளின் துவேஷப் புத்தி ஒளியுடன் பிரகாசித்தது.

அவன் வெளியே நின்றுகொண்டிருப்பதைக் குறித்து ஜாடையாக ஏதேதோ பேசினாள். அவனுக்கு அதுமிகுந்த மனவேதனையாயிருந்தது. அவன் அந்த மாதிரி வார்த்தை அதற்கு முன்பு யாரிடமும் கேட்டதில்லை.

வரண்ட கானல்போன்ற இரு உள்ளத்திற்கு நாம் இக்கொடுமொழிகளால் பெருநெருப்பு இடுகிறோமேயென்று சின்னுவுக்குத் தோன்றவில்லை. அவளுக்கு வேண்டியதெல்லாம் சண்டையும் பூசலும். பிறர் மனத்தைப் புண்படுத்துவது அவள் தொழில். அவளுக்கு அதிலேதான் மிகுந்த ஆர்வம்.

அன்றைய தினத்திலிருந்து அவன் வாயிற்படியண்டை வருகிறதே இல்லை. அவள் அவனைப் பார்க்க வேண்டுமென்று மிகுந்த ஆசைப் பட்டாள். இரண்டு நாட்களில் அவளுக்கு வேதனை அதிகமாயிற்று.

நடராஜன் ஒரு குழந்தை. ஆம்! அத்தாடகை சின்னுவின் குழந்தை, நல்ல அழகு; உருண்டை முகம். அவன் பேசும் அம்மழலைச் சொற்களிலே ஒரு இனிமை ததும்பும். யாரையும் எளிதில் வசிகரித்து விடுவான்.

‘இந்தத் தாடகைக்குத்தானா இம்மாதிரி குழந்தை பிறக்கவேண்டுமென்று’ அக்கம்பக்கத்து வீட்டார்களெல்லோரும் சொல்லிக்கொள்வார்கள். அவர்களைக் காட்டிலும் அவனுக்குத்தான் அவ்வெண்ணம் மிகுதி. ஆனால் அவர்களைப்போல் அவன் யாரிடமும் வாய்விட்டுக் கூறியது கிடையாது. மனத்துக்குள்ளே நினைத்துக்கொள்வான்.

குழந்தையைப் பார்க்கும் போதெல்லாம் அதன் கன்னத்தை நெகிள வேண்டுமென்று அவன் கரம் துடிக்கும். இந்த மாதிரி எனக்கு ஒரு தம்பி இருக்கக்கூடாதா வென்று அவள் ஏழை மனது ஏங்கும். மாலைநேரத்தில் குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு சாளரத்தண்டையே நிற்பாள் அவள். குழந்தையுடன் சத்தமிட்டுப் பேசிக்கொண்டு விளையாடுவாள் அவள், தான் அங்கு நிற்பது அவனுக்குத் தெரியவேண்டுமென்று. ஆனால் அவன்மட்டும் அங்கு வருகிறதே யில்லை.

வாஞ்சையாக குழந்தைகூட அவனைக் காணாமல் எதிர்வீட்டு வாயிற்படியையே பார்க்கும். அவள் நினைப்பாள், நாம் அங்கு பார்க்கிறதைப் பார்த்துத்தான் குழந்தையும் அத்திக்கையே பார்க்கிறது என்று. குழந்தையின் மனத்திலுள்ளதை அவள் எவ்வாறு அறிவாள்? அக்குழந்தைக்குத்தான் அக்கருத்தை அறிவிக்க முடியுமா?

நாட்கள் சில சென்றபின் அவள் தந்தை ஊரிலிருந்து வந்திருந்தார் அவளை ஊருக்கு அழைத்துப்போக. ஊருக்குப் போவதற்குள் ஒரு முறையேனும் அவனைப் பார்க்க வேண்டுமென்று அவள் மிகுந்த பிரயாசைப்பட்டாள்.

அவன் அவளை இனிமேல் பார்ப்பதில்லை யென்று நிச்சயித்துக் கொண்டிருந்தான். ஆனாலும் அப்பேதை மனம் ஒருநிலையில் நில்லாது அவனை அங்கு தள்ளிக்கொண்டு போகும். அக்கணமே அவன்முன் அத்தாடகை பிரசன்னமாவாள். அன்று அவள் கூறியது போலவே அக்கொடு மொழிகள் அவன் காதினுள் ஒலிக்கும். திடுக்கிட்டுப்போய் சுற்றுமுற்றும் பார்ப்பான். அவன் எதிரே எப்போதும் போல் யாவும் சூனியமாய்த்தான் இருக்கும். அப்போதுதான் நினைத்துக் கொள்வான் இது மனத்தின் பிரேமையென்று. மானத்திற்கு அஞ்சிய அவன் இச்சிறு விஷயத்திற்காக இப்படியெல்லாம் பிரேமையடைவான். அக்கொடு மொழிகளை அவன் நினைக்கும்

போதெல்லாம் அப்போதுதான் சொல்வதுபோல அச்சொற்கள் ஒலிக்கும். அப்போதெல்லாம் அவன் உள்ளம் இடி இடிப்பதுபோல் குமுறும்.

அவன் வீட்டு மாடியில் ஜன்னல் இருக்கிறது. அங்கிருந்து அவன் அவளைப் பார்த்தால்கூட யாருக்கும் தெரியாது, அவன் அறிவித்துக் கொண்டாலன்றி. அவன் மனதில் அவளைப் பார்க்க வேண்டுமென்ற அவா இவ்விதம் திருட்டுத்தனமாகப் பார்த்துவிடுவது என்று கூடத் தூண்டும். மாடியில் சாளரத்தின் கதவைத் திறக்கக் கரத்தை எடுப்பான். சர்ப்பம் தீண்டினாற்போல் கையை வெடுக்கென்று இழுத்துக்கொள்வான். அதே அக்கொடுமொழி அதே செயல், அதே ஒத்திகை சினிமாப் படம்போல் தோன்றி மறையும். அப்போது தன்னையே நிந்தித்துக்கொள்வான் கேவலம் திருட்டுத்தனமாக அவளைப் பார்க்கப் போனோமேயென்று.

அவளைப் பார்க்க அவனுக்கு சுதந்திரம் இல்லாதபோது அவன் ஏன் அதற்கு இவ்வளவு துயரடைய வேண்டும்?

ரயிலுக்குப் போக அவள் தகப்பனார் துரிதமாக ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். 'அவன் ஏன் இப்போது இந்தப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கிறதில்லை?' என்று அவள் மனது அன்று லட்சம் தடவை கேட்டிருக்கும். அநேகந் தடவை முகத்தை கழுவிக்கொண்டாள். அங்கிருந்த புது பௌடர் டப்பா காலியானதே அவளால்தான். விதவிதமான செயற்கையால் இயற்கையழகை சோபிக்கும்படி செய்துகொண்டாள். ஆயினும் என்ன பயன்?

ஜட்கா வண்டியும்கூட வெளியில் காத்துக்கொண்டிருந்தது. படுக்கை பெட்டிகளையெல்லாம் ஆட்கள் வண்டியின் ஒரு பக்கத்தில் கொண்டுவந்து வைத்துவிட்டார்கள். எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டார் அவள் தகப்பனார். ஆனால் அது வரையிலும் சந்திர ஒளி போல் பிரகாசித்துக்கொண்டிருந்த அவள் மனோவானம் திடீரென இருண்டது. பெருத்த கெடுதி தனக்கு நேரிட்டுவிட்டதுபோல் அவள் தவித்தாள். வீட்டிலுள்ளோரிடம் விடைபெற்றுக் கொள்ளும்போது அவள் குழறிக் குழறிப் பேசினாள். நடராஜன் என்ன வெல்லாமோ மழலைச் சொற்களால் அவளைக் கேட்டான். சாதாரண சமயமாயிருந்தால் அவள் அம்மழலைச் சொற்களை இன்புற ரஸித்திருப்பாள். இப்போது அக்குழவியின் மழலைகள்கூட அவளுக்கு வெறுப்பளிக்கக் கூடியனவாக இருந்தது.

'வண்டிக்கு நேரமாச்சம்மா' என்று அவள் தந்தை கூறும்போது பத்ம மலர்போன்ற அவள் வதனம் மாயையால் வாடுவது போல் வாடிவிட்டது. கையைப் பிசைந்துகொண்டே எதிர்வீட்டை நோக்கினாள் அப்போதாவது அவன் அங்கு வந்திருக்கமாட்டானாவென்று. என்ன பயன்?

வண்டிக்குள்ளிருந்தவாறே அவளை ஏறிக்கொள்ளும்படி துரிதப்படுத்தினார் தந்தை. வாடியிருந்த மலர் அக்கடைசி வார்த்தையால் சருகுபோலாகி வண்டிக்குள் பறந்துபோய் விழுந்தது.

'கடகட' என்ற சப்தத்துடன் வண்டியும் ஓடுகிறது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை அவன் வீட்டையே இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டு போனாள். வண்டி அவ்வீதியைக் கடந்து வேறு ரஸ்தாவில் திரும்பும்போது தன் ஜீவியத்தின் அபூர்வ இன்பக் கனவு அந்த க்ஷணத்தோடு முடிவடைந்து விட்டதாக அவளுக்குத் தோன்றிற்று.

அதற்காக தன்னை ஊருக்கு அழைத்துப் போகவந்த தன் தந்தையை அளவற்ற துக்கத்துடன் சபித்தாள்.

* * *

அது நடந்து இப்போது இரண்டாண்டுகள் ஆய்விட்டன. அவன் மாமா அந்த வருடம் குதிரைப் பந்தயம் பார்க்கப் போவதற்காக அவனையும் நீலகிரிக்குக் கூட்டிக்கொண்டு போயிருந்தார். பந்தயம் எல்லாம் முடிந்து ஊருக்குத் திரும்புவதற்காக பஸ்ஸில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

மாலைநேரம். பள்ளிக்கூடம் விட்டு மாணவிகள் எல்லோரும் கும்பல் கும்பலாகத் தத்தம் இல்லங்களுக்குப் போய்க்கொண்டிருந்தனர். அந்தக் கும்பலில் அவளும் சில மாணவிகளோடு வந்துகொண்டிருந்தாள். அவளைக்கண்ட அவனுக்கு கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போலிருந்தது. அந்தக் கோணல் வகிடும், காதில் 'ஜிலுஜிலு'வென்று தொங்கும் டோலாக்கும், அந்தக் கபடமற்ற முகத்தையும் கண்ட அவன் மனத்தின் ஓட்டம் கடந்த காலத்தில் சென்றுலயித்தது. அந்த நாளை—தங்கத் தகட்டில் மாணிக்கக் கற்களால் பொறிக்கப்பட வேண்டிய அந்நாளை அவனுக்கு ஞாபகமூட்டியது. ஆனால் அங்கு குழுமியிருந்த ஜனத்திரளில் அவன் இருப்பது அவளுக்குத் தெரியவில்லை. அவனுடைய பிரேமை தெளிவதற்குள் அவள் தன்னுடைய சகாக்களுடன் வெகு தொலைவில் சென்றுவிட்டாள். அப்போது தான் தெரிந்தது அவனுக்கு, அவள் ஊர் ஊட்டியென்று.

பஸ்ஸும் புறப்பட்டது. அந்தகாரத்தின் சாயை அஸ்தமனப் பொழுதின் மஞ்சல் வெயிலை மறையச்செய்து பரவத் தொடங்கியது. பொன்னாலும் வெள்ளியாலும் மூலாம் பூசப்பெற்ற அந்த ஒளி கற்பூர மரங்களிலும், சவுக்கு மரங்களிலும் தாக்கிற்று. அதுவெல்லாம் அம்மலைச் சாரலில் அழகுக்கு அழகு செய்வதுபோலிருந்தது.

அவன் மனது அந்த ஓடும் மோட்டாரின் சக்கரங்கள் சுழலுவதைக் காட்டிலும் வெகு வேகமாக சுழன்றது. என், அதற்குமேல் அவன் செய்யக்கடவது ஒன்றுமில்லை.

# ஜைனர்களும் அவர்களது வாழ்க்கையும்

['குமாரன்']

## 1. சமயமும்; பிரிவும்.

இந்தியாவிலுள்ள பல்வேறு சமயங்களுள் ஜைன சமயமும் ஒன்ருகும். ஜைன சமயத்தைத் தழுவியவர் யாவரும் ஜைனர்கள் என அழைக்கப்படுவர். அவர்கள் வட இந்தியாவில் அதிகம். தென்னிந்தியாவிலுள்ள சிறுபான்மையோரும் அவ்வளவு ஆதிக்கம் பெற்றவர்களல்லர். ஏனெனில் ஸ்ரீ சங்கரர் காலத்தில் ஜைனமதத்தின் வலு குறைந்து போய்விட்டது.

ஜைனர்களில் இரு பிரிவினருண்டு. ஒரு சாரார் ஸ்வேதம்பர் என்றும், மற்ருெரு சாரார் ஸ்தானவாசி என்றும் அழைக்கப்படுவர். இவ்விரு வகுப்பினர்களின் கொள்கைகளெல்லாம் சற்றேறக்குறைய ஒன்றுதான். ஆனல் அவர்களுக்குள்ள கிரியை முறைகளில் வேற்றுமையுண்டு. ஜைனர்களின் அழகிய ஆலயங்களுக்கு நம்பாதகண்டம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. அவைகள்யாவும் ஸ்வேதம்பர்களால் கட்டப்பட்டவை. ஸ்வேதம்பர்களுக்குத்தான் விக்கிரக வழிபாடுண்டு. ஸ்தானவாசிகள் விக்கிரகங்களை வணங்குவதில்லை. ஜைனர்களில் திகம்பர் என்ற மூன்ருவது பிரிவுகூட ஒன்றுண்டு; ஆனல் இந்தப் பிரிவில் யாரும் அதிகமாய்ச் சேர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. இப்போது இந்த வகுப்பைச் சேர்ந்த ஒரு குருதான் குறிப்பிடத் தக்க நிலையிலிருக்கிருர். அவர் காசியிலுள்ள ஒரு தோட்டத்தில் வசித்து வருகிருர். திகம்பர்கள் துணிகளை உடுப்பதில்லை. ஸ்வேதம்பர்களது குருமார்கள் இடையில் ஒரு துணியும், மேல்வஸ்திரம் ஒன்றும் அணிகிருர்கள். ஸ்தானவாசிகளது குருமார்கள் இவற்ருேடு தங்கள் வாயை மூடிக்கொள்ள ஒரு துண்டு கான்வாஸ்துணி உபயோகிக்கிருர்கள். பொதுவாக ஜைன சந்நியாசிகளுக்குள் புகைப்படம் எடுக்கலாகாது என்று ஒரு கண்டிப்பான கொள்கையுண்டு. என்ருலும் சில பக்திமான்களது வேண்டுகோளை மறுக்கமாட்டாமல் அதற்கு அவர்கள் உடன்படுவதுமுண்டு. ஆனல் ஜைனப்பெரியார்

களது உருவப்படங்களை ஜைனர் அல்லாத இதர மதத்தினர் யாரும் கொண்டாடுவதில்லை.

## 2. சந்நியாசிகளும் சந்நியாசினிகளும்

ஜைனதுறவிகள் ஒருபோதும் மாதர்களைத் தொடக்கூடாது. அவர்களுக்கருகில், அவர்கள் அமர்ந்துள்ள பாயில்கூட சந்நியாசிகள் உட்காரலாகாது. ஏதோ தவறிப்போய் தன்மீது ஒரு பெண்குழந்தை பட்டுவிட்டாலும், அத்துறவி அன்று முழுதும் பட்டினிகிடக்க வேண்டும். இதனால் பெண்கள்பால் அவர்களுக்கு மரியாதை இல்லை என்று சொல்லிவிட முடியாது. அதற்குமாருக ஸ்திரீகளுக்கும், அவர்களுடைய மந்திரங்களை உச்சரிக்கவும், ஆடவர்களைப்போல் அவர்களும் துறவிகளாகவும் உரிமையுண்டு. பெண் சந்நியாசிகள் ஆடவ சந்நியாசிகளுக்கு மரியாதை செய்யக் கடமைப்பட்டவர் களாதலால், புருஷர்களைக் காட்டிலும் ஸ்திரீகள் சிறிது தாழ்ந்தவர் களாகக் கருதப்படுவார்கள். துறவிகள் ஆண்களாயினும், பெண்க ளாயினும் பாதங்களில் ஒன்றும் அணியாது நடந்து செல்வார். ஆண்பாலார் தங்கள் சிரங்களில்கூட ஒன்றும் அணிவதில்லை. நடக்கும்போது பாதைகளிலுள்ள பூச்சி புழுக்களை விலக்கும் பொருட்டு மிருதுவான ரோமங்களாகிய துடைப்பங்கொண்டு செல்லுவார்கள். புற்றரைகளில் அவர்கள் நடக்கக்கூடாதாதலால், மாரிகாலத்தில் நான்கு மாதங்களிலும் அவர்கள் ஒரே இடத்தில் தான் தங்கியிருப்பார்கள்; மற்றக்காலங்களில் அவர்கள் ஒரே விடத்தில் 10 தினங்களுக்குமேல் தங்கக்கூடாது. ஏனெனில் அதிகக் காலம் தங்குவதால் அந்த ஊர்மீதும், மக்கள்மீதும் பாசம் ஏற்பட்டு விடுமென்பது அவர்களது கருத்து. அல்லாமலும் தாங்கள் ஓரே ஊருக்குப் பாரமாயிருப்பதும் தகாது என்பது அவர்களபிப்பிராயம்.

## 3. உண்டியும், பூச்சிகளும்

சந்நியாசிகள் தினமும் மரக் கப்பறைகளில் உணவுயாசித்து வருவார்கள். ஒருவேளைக்குப் போதுமான உணவையே அவர்கள் பெற்றுத் திரும்புவார்கள். ஒருசமயம் அதிக உணவு கிடைத்துவிடு மாயின், மிகுந்த ஆகாரத்தை வெகுதூரஞ்சென்று பூமியில் குழி தோண்டிப் புதைத்து விடுவார்கள். ஏனெனில் அந்த ஆகாரத்தின் மூலம் பூச்சிபுழுக்கள் பெருகி நடைபாதையில்வந்து துறவிகளது கால்களில் மிதியுண்டு இறந்துபோக நேருமென்பது அவர்கள் எண்ணம். உண்ணும்போதும், உட்காரும்போதும், நடக்கும்போதும் அவர்கள் மேற்குறித்த காரணத்தாலேயே மிகஜாக்கிரதையுடனிருப் பார்கள். அவர்கள் ஒருபோதும் வண்டிகளிற் செல்லக்கூடாது. இக்காலங்களில் உடல் நலிவுற்ற துறவி ஆணாயினும் பெண்ணாயினும் மனிதர்களால் சுமக்கப்பட்ட பல்லக்குகளில் போகலாம என அனும

திக்கப்பட்டிருக்கிறது. அற்ப ஜந்துக்களான பூச்சிபுழுக்களுக்கும் இன்னல் விளைக்கலாகாதெனக் கருதும் இவர்கள் ஆறறிவுபடைத்த மனிதர்கள் சுமந்து செல்லும் பல்லக்குகளில் செல்லுதல் நீதியாமா என நம்மனோர் ஐயுறுவர். மனிதன் தன் சிரமத்தை எளிதில் தெரிவிக்க முடியும். அப்போது வலிவுள்ள வேறொருவனை சுமக்கச்செய்யலாம். ஆனால் வாயில்லாப் பிராணிகளாகிய மாடுகள், குதிரைகள் தங்கள் சிரமத்தை எங்ஙனம் நமக்குத் தெரிவிக்கவல்லன?

வைதிக மனப்பான்மையுள்ள ஜைனர்கள் கிழங்குகளைப் புசிக்கலாகாது. நினைப்பிலும், செய்கையிலும் ஜீவஹிம்சைகூடாது என்பது ஜைனர்களது முக்கிய கொள்கை. புருஷதுறவியோ ஸ்திரீ துறவியோ நோய்வாய்ப்பட்டால் குணமடையும் வரையில் அல்லது மரிக்கும்வரையில் ஒரே ஊரில் தங்கியிருக்கலாம். ஒரு சந்நியாசி இறந்துபோனால் பல மைல்களுக்கப்பாலிருந்தும் மக்கள் திரள் திரளாக அவரைத் தெரிசிக்க வருவது வழக்கம்.

## 4. எட்டு முக்கிய கொள்கை

ஜைன சந்நியாசிகள் க்ஷௌரம் செய்துகொள்வதில்லை; ஆனால் ஆண்டிற்கிருமுறை உரோமத்தைப் பறித்துவிடுவார்கள். இந்தக் காரணத்தால் அவர்களுடைய முகத்திலும், தலையிலும் புண்களோ, காயங்களோ ஏற்படுவதுகூடவுண்டு. அவர்களது மதத்தின் அடிப்படையான கொள்கை அஹிம்சைதான். அம்மதத்தின் முக்கியமான எட்டுக்கொள்கைகளாவன:—1. ஜீவஹிம்சை செய்யாமை, 2. இந்திரிய நிக்ரகம் செய்தல், 3. பிராணிகளை நேசித்தல், 4. பொறுமை, 5. பூர்த்தியான அறிவுபெறுதல், 6. உண்மையுடைமை, 7. தவத்தில் உறுதியுடைமை, 8. ஐயம்நீங்கிய அறிவுடைமை.

துறவிகளுக்குள் தொழில்பற்றி ஆசிரியன்மார்களென்றும், வனவாசிகளென்றும் இருபிரிவினர்களுண்டு. ஆசிரியர்களெனப்படுபவர்கள் பொதுவிடங்களில் உபந்நியாசங்கள் செய்வார்கள். என்ன முக்கியமான வேலையிருந்தாலும் ஜைனர்கள் யாரும் இந்த உபந்நியாசத்தைக் கேட்கக் கடமைப்பட்டவர்கள்.

## 5. யாத்திரைகள்

சில விசேஷகாலங்களில் ஜைனர்கள் யாத்திரை போவதுண்டு. முக்கியமாக ஸ்வேதம்பர்களில் இம்மாதிரியான யாத்திரைகள் அதிகம். யாத்திரையில் அவர்கள் பெரும்பெருங் கூட்டமாகப் புறப்பட்டுச் செல்வார்கள். அவர்களுடன் சந்நியாசிகளும், சந்நியாசினிகளும் வெகு தூரம்வரை நடந்துசெல்வார்கள். இத்தகைய யாத்திரைக் கூட்டத்திற்காகும் செலவை, அதை முன்னின்று நடத்தும் பெரிய

வியாபாரி யாரேனும் ஏற்றுக்கொள்ளுவார். ஒரு யாத்திரைக்கு அரை லட்சம் முதல் ஒருலட்ச ரூபாய்வரை செலவாவதுண்டு

## 6. ஜீவகாருண்ணியம்

வேலைசெய்து ஒடுங்கிப்போன மிருகங்களையும், நோயினால் துன்புறும் பிராணிகளையும் ஜைனர்கள் மிகப்பொறுப்புடன் பாது காக்கின்றனர். வயதுசென்ற மிருகங்களை அவற்றின் விருப்பம் போல் மேயவிட்டு விடுகின்றனர். நோயினால் அவதிப்படுபவை கட்குத் தக்க வைத்தியர்களைக்கொண்டு சிகிச்சை செய்விக்கின்றனர். உழைத்துக் களைத்த வலுவற்ற குதிரைகளை அவர்கள் விற்பதில்லை; அவற்றிற்கு உணவளித்து ஊர்வலங்களில் அழகுக்காக வாவிடு கின்றனர். ஜைனர்கள் இந்துக்களிலிருந்து மதசம்பந்தமாக மாறு பட்டிருந்தும், பிராமணர்களைக்கொண்டே தங்கள் கிரியைகளைச் செய்வித்துக் கொள்ளுகின்றனர். இதற்குப் பலகாரணங்கள் உண்டெனினும், ஜைனர்களது குருமார்கள் உலகசம்பந்தமான கிரியைகளில் ஈடுபடமுடியாதென ஒதுங்கிப்போனதே முக்கிய காரணமெனத் தெரிகிறது.

## 7. இல்லாளின் இலக்கணம்

ஜைனர்களில் செல்வவான்கள் ஜைனர்களுக்குள் பாலியவிவாகம் நடைபெறுவதுண்டு; ஜைனமாதர்கள் சமையல் வேலையில் தேர்ச்சிபெற்றவர்களே. பாலிலிருந்து வெண்ணை எடுப் பதிலும், ஊறுகாய் போடுவதிலும் நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள். ஆனால் நவீனநாகரிகப் பெருக்கில் இவற்றையெல்லாம் அவர்கள் மறந்து வருகிறார்கள்.

ஸ்வேதாம்பர்களின் வீடுகளில் நீர் அதிகம் செலவாகும். ஏனெ னில் அவர்கள் விக்கிரக ஆராதனைக்கு தினமும் ஸ்நானம் செய்தாக வேண்டும். ஆனால் அவர்கள் எதற்கும் வெந்நீரையே உபயோகிப் பார்கள். மற்ற பிரிவினராகிய ஸ்தானவாசிகள் மிகக்குறைந்த அளவி லேயே நீரைச் செலவிடுகின்றனர். ஜைனர்கள் பெரிய செல்வாளிகள் தான்; அவர்கள் மிகக்கஷ்டப்பட்டு உழைப்பவர்கள்; அவர்கள் பெரிய வியாபாரத்துறைகளில் இறங்குவார்கள். ஆனால் தங்கள் வரும் படியின் பெரும் பாகத்தைத் தானதருமங்களிலே செலவிடுவார்கள். உண்மையான ஜைனன் எவனும் தன் பரலோகவாழ்வை நிச்ச யிப்பது தன் கையால் செய்யப்பட்ட தருமமே என்றெண்ணுவான். ஜைனர்கள் கட்டுமட்டான உழைப்பாளிகள். கடும் வட்டி வாங்கு வதைமட்டும் அவர்களில் சிலர் பழக்கத்தில் கொண்டுள்ளனர். இந்த ஒரு செய்கைமட்டும் அவர்களுடைய புனிதவாழ்க்கையைக் கறைப் படுத்துவதாக விருக்கிறது.

# காலத்துக் கேற்ற கோலம்

[காரமடை S. குழந்தைசாமி.]

சுந்தரம் S. S. L. C. பாஸ் செய்து ஆண்டிரண்டாயின. பள்ளியைவிட்டு வீடுதிரும்பிய பிள்ளைக்கு அவனது பெற்றோர்கள் ஒரு பெண்ணையும் பிடித்துக் 'கட்டி விட்டார்கள்'. ஆனால் அவன் அடைந்த சுகம் பூஜ்ஜியம்தான். மனைவியைப்பெற்ற ஓரிரண்டு மாதம் ஏதோ சுகம் அனுபவிப்பதாக அவனுக்குத் தோன்றிற்று. ஆனால் அவ்வெண்ணம் நீடித்து நிற்கவில்லை. சுந்தரத்தின் தாயார் துர்க்குணங்களின் அம்சம். மகனையும் மருமகளையும் தன் புருஷனை ஆட்டிவைப்பதைப் போலவே ஆட்டிவைக்க ஆரம்பித்தாள். சுந்தரம் எதாவது குறுக்கிடுவானேயானால், 'ஆமாண்டா! கெட்டகேட்டுக்கு சிபார்சுக்கு வேறேவர்ரையோ! உனக்குக் கொட்டுவதுமல்லாமல் உன் பெண்டாட்டிக்கும் கொட்டித் தொலைக்க மூலையில் கொட்டிவைத்திருக்கிறதா என்ன? நீ கொடுப்பதை வேண்டுமானால் நிறுத்திக் கொள்; அதிகாரம் ஒன்றும் இங்குச் செய்யாதே தெரியுமா? என்பதுபோன்ற கடும்பாணம் புறப்படும். பாவம்! சுந்தரம் என்ன செய்வான். இரண்டு வருடமாய் வேலையொன்றும் கிடைக்காது கஷ்டப்படுகிறான். அவன் நுழையாத ஆபீஸில்லை. கண்டகேட்ட விளம்பரங்களுக்கெல்லாம் கைசலிக்க எழுதியும் பயனில்லை. பெரிய பெரிய பட்டாதாரிகளெல்லாம் கொட்டாவி விட்டுக் கொண்டு இருக்கும்போது இவன் எம்மாத்திரம்? தன் அன்னை தன்னைப் பார்த்து, 'நீ கொடுப்பதை வேண்டுமானால் நிறுத்திக்கொள்' என்று அடிக்கடி குத்தலாகப் பேசுவதும், மாமியின் கொடுமை சகிக்கமுடியாது தன் மனைவி எப்போதும் கண்ணீரும் கம்பலையுமாயிருப்பதும், தான் ஒரு வேலையுமின்றி 'தெண்டச்சோற்று ராமனாக' இருந்து வருவதும் எல்லாம் ஒன்று சேர்ந்து அவனை வாட்டத் தொடங்கின. 'நாம் இவ்வுலகில் ஏன் பிறந்தோம்; பிறந்ததுமன்றி ஏன் விவாகம் செய்துகொண்டோம். விவாகம் செய்துகொண்டு அவளைக் காப்பாற்ற வழியற்ற நாம் ஏன் உயிருடன் இருக்க வேண்டும்?' என்றெல்லாம் நினைப்பான். நினைத்துப் பயன் என்ன?

ஒருநாள் சுந்தரத்தின் மனைவி ஞானம் வழக்கம்போல் காலை நான்கு மணிக்குப் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லை. 5 மணிவரை அயர்ந்து தூங்கிவிட்டாள். அவள் வேண்டுமென்றே அவ்விதம் செய்யவில்லை. நித்திரா தேவியின் மயக்க மருந்து அவ்விதம் செய்துவிட்டது. ஆனால் சூர்ப்பநகையாகிய அவள் மாமியா விடுபவள். எடுத்தாள் விளக்குமாற்றை. மருமகளிடம் ஓடிவந்தாள். போட்டாள் பூஜை. பூஜை என்றால் சாதாரணமானதல்ல. ஞானத்தின் மேலுதட்டிலிருந்து ரத்தவெள்ளம் பெருக்கெடுத்து அவள் அணிந்திருந்த துய்யவெண்மையான ஜாக்கெட்டைச் சிவப்பு நிறமாக்கி விட்டதென்றால் பூஜையின் சிறப்பை நீங்களே சிந்தித்துக் கொள்ளுங்கள்.

பார்த்தான் சுந்தரம். அவனால் தாங்கமுடியவில்லை. உடனே தன் மனைவியை, ஆசைநாயகியை, காதற் களஞ்சியத்தை அழைத்துக்கொண்டு வெளியில் சென்றான். சிறவீடொன்று குடிக்கூலிக்கு அமர்த்தினான். அதில் வாழலானான். ஆனால் செலவுக்குப் பணம் ஏது? தன் மனைவியின் மீதிருந்த சொற்ப நகைகளை ஒவ்வொன்றாக விற்றான். கிடைத்த பணத்தைக்கொண்டு அரைவயிற்றுக் கஞ்சியுடன் காலம் கழிக்கலானான். ஆனால் அத்துடன் நிற்க வில்லை. ஏதாவதொரு வேலைக்காக அல்லும் பகலும் அலைந்துகொண்டு தானிருந்தான். ஆனால் வேலையில்லாத் திண்டாட்டம் மிகமலிவாக இருக்கும் இக்காலத்தில் வேலை கிடைப்பதென்றால் லேசா?

வழக்கம்போல் ஒருநாள் சுந்தரம் வேலைக்காக அலைந்துவிட்டு மிகவும் வாடியமுகத்துடனும் ஒட்டிய வயிற்றுடனும் பகல் இரண்டு மணிக்கு வீட்டுக்கு வந்தான். அப்போது அவன் மனைவி ஒரு பத்திரிகையைக் கொடுத்து 'நாதா! அடுத்த வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கே இந்தப் பேப்பர் கிடந்தது. அவர்களைச் கேட்டு எடுத்துவந்தேன். இதை வாசித்துப் பாருங்கள்' என்று பத்திரிகையிலிருந்த ஏதோ வொன்றைச் சுட்டிக்காட்டினாள். அதில் கீழ்கண்டவாறு விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

**தேவை! தேவை!! தேவை!!!**

மாலை 5 மணிமுதல் 8 மணிவரை எங்கள் கடையில் ஜவுளி வியாபாரம் செய்ய நல்ல வசீகரமும் அழகும் பொருந்திய இளம் மங்கையர் தேவை. ஆங்கிலம் தெரிந்திருப்பது நலம். மாதம் 50 ரூபாய் சம்பளம் தரப்படும். விவரத்திற்கு கீழ்காணும் விலாசத்திற்கு நேரில் வரவும்.

ராம்செல்லா & கோ.
ஜவுளி வியாபாரம்
பெரியகடை வீதி,
கோயமுத்தூர்.

இதை வாசித்து முடித்த சுந்தரம் பெருமூச்சு விட்டுக்கொண்டே தன் மனைவியைப் பார்த்து, 'கண்ணே! இதனால் நமக்கு என்ன பயன்?' என்றான்.

'நாதா! ஏன், நான் அவ்வேலைக்கு மனுச்செய்து கொண்டாலென்ன?' என்று வினயமாய்க் கேட்டாள் ஞானம்.

'கண்மணி! ஞானம்! இக்காலத்தில் முதலாளிகளா யிருப்போரில் பெரும்பாலோர் அயோக்கியர்கள். அதனால்தான் உன் யோஜனைப்படி நடக்க என் மனம் இடந்தமறுக்கிறது.'

'நாதா! நான் உங்களை எவ்வளவு நம்பியிருக்கிறேனோ அவ்வளவு நம்பிக்கை என்னிடத்திலும் நீங்கள் கொள்ளவேண்டும். நமது கஷ்டத்தை உத்தேசித்துத்தான் இதைக் கூறவந்தேனே தவிர வேறொன்றுமில்லை. இது தவறானால் என்னை மன்னியுங்கள்'

'காதலி! நீ சொல்வது வாஸ்தவமே. இருப்பினும் ஆண்பிள்ளையாகிய நான் காலணா சம்பாத்தியமின்றியிருக்க நீ வேலைக்குச்சென்று பொருளீட்டி வருவதும், அதைக்கொண்டு நம்வாழ்க்கையை நடத்துவதுமாக இருந்தால் பார்ப்பவர்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்! அதைக்காட்டிலும் நான் தற்கொலைசெய்து கொள்வதுமேல் என நினைக்கின்றேன்'

'நாதா! தற்கால நாகரிகத்தில் மூழ்கிக்கிடக்கும் நீங்களே இவ்விதம் பேசுவது சரியல்ல. ஆண்களுக்கு சம்பாத்தியம் குறைந்து பெண்களுக்கு அதிக வருவாய் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டால் அதற்குத் தக்கவாறு ஆண் பெண் இருவரும் தங்கள் மனப்பான்மையை மாற்றிக்கொள்வதுதான் புத்தி சாலித்தனம். ஏன்? இந்தக் கம்பெனியையே எடுத்துக் கொள்ளுங்களேன். தங்கள் கடையில் வியாபாரம் குறைந்துவருகிற காரணத்தால்தான் அவர்கள் பெண்களை அமர்த்தி அதன்மூலம் தங்கள் வியாபாரத்தை பெருக்க முயற்சிக் கிறார்களென்று நினைக்கின்றேன். அவர்களெல்லாம் காலத்துக் கேற்ற கோலம் கொள்ளும்போது நாம் மட்டும் ஏன் அவ்விதம் செய்யக்கூடாது!' என்றாள் ஞானம் மிக்கஞானத்துடன்.

'அன்பே! ஆ...ம்...கா...லத்...து...க்...கே...ற்...ற...கோ...ல...ம்... வாஸ்தவம்... நீ சொல்லியபடி காலத்துக் கேற்ற கோலம் எடுத்துத்தானாக வேண்டும். சரி; அவ்விதமே செய்வோம்' என்று ஆழ்ந்த யோசனையின்மீது நிதானமாகப் பேசினான் சுந்தரம். இருவரும் சிறிதுநேரம் இதுவிஷயமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு அன்னமருந்தச் சென்றனர்.

* * *

இச்சம்பவம் நடந்த அடுத்ததினம் ராம்செல்லா அண்ட் கம்பெனிக்குள் 0 அல்லது 21 வயது என மதிப்பிடத்தக்க யுவதி ஒருவள் புகுந்தாள். வள் அணிந்திருந்த பச்சைநிறக் கராச்சிப்புடவையும் புடவைக்கேற்ற ஜாக் கெட்டும் அவளுடைய அழகை பதின்மடங்கு எடுத்துக் காட்டின. அவள் ந்தலில் சொருகி இருந்த மல்லிகைச்செண்டு மிகுந்த நறுமணத்தை நாலா பக்கமும் வீசிற்று. மதிபோன்ற அவள் வதனத்தில் டால்கம் பவுடர் ஒத்தியிருப் பதும், நெற்றியில் ஜவ்வாதுப் பொட்டிட்டிருப்பதும் ஒரு தனிச் சிறப்பை ஊட்டின. இத்தகைய அழகுவாய்ந்த மங்கை தனது மின்னலிடையினின்றும் முளைத்தெழுந்த கதலித் தண்டென விளங்கும் தன்னிரு கால்களையும் அடி மேலடி எடுத்துவைத்து அன்னப்பக்ஷிபோல் நடந்து உட்பிரவேசிக்கவும், அங்கு இருந்த ஆட்களில் சிலர் பூக்களைக் கண்டோடிவரும் வண்டினங்களைப் போலோடிவந்து, 'என்ன வேண்டும்?' என்று வெகு வினயமாக விசாரித்தனர்.

மங்கை:—உங்கள் கம்பெனியின் ப்ரோப்ரைடர் எங்கே?' இக்கேள்விக்கு பதிலிருக்கும் முகத்தான் ஒருவன் ஒரு அறையைச் சுட்டிக்காட்டவும் மங்கை யர்க்கரசி அவ்வறையினுட் பிரவேசித்து ஆண்டிருந்த கோபாலசாமி செட்டி யாருக்கு வந்தனம் தெரிவித்துவிட்டு அவர் காண்பித்த ஆசனத்தமர்ந்தாள். இருவரும் கீழ்கண்டவாறு சம்பாஷிக்கத் தொடங்கினர்.

மங்கை:—(தன் கையில் வைத்திருந்த பத்திரிகை ஒன்றைக் காண் பித்து) இது தாங்கள் செய்த விளம்பரம்தானா?

கோ-செட்டியார்:—ஆம். அது எங்கள் கம்பெனியின் விளம்பரம்தான். இது விஷயமாகத்தான் நீங்கள் வந்தீர்களோ? உங்கள் பெயர் என்ன?

மங்கை:—என் பெயர் சுந்தரி. இவ்விளம்பரத்தைக் கண்டு அவ் வேலையை ஏற்றுக்கொள்ளத்தான் வந்தேன்.

கோ-செட்டியார்:—உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா?

சுந்தரி:—ஏதோ கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரியும்.

கோ:—ரொம்ப சந்தோஷம். உங்களை மாதம் 50 ரூபாய் சம்பளத்தில் என் கம்பெனியில் அமர்த்திக் கொள்கிறேன். நாளைமுதல நீங்கள் ஒழுங்காக வந்து வேலையை கவனிக்கவும்.

சுந்தரி:—'அப்படியே ஆகட்டும். போய்வருகிறேன்' என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு தன் வீடுசென்றாள்.

* * *

மறுநாள் முதல் சுந்தரி தவறாமல் மாலை 5 மணிக்கு ராம்செல்லா அண்டு கம்பெனிக்கு வருவதும் 9 மணிக்கு வீடு செல்வதுமாயிருந்தாள். இவள் வந்து சேர்ந்த நாள்முதல் ஏராளமான ஜனங்கள் கடைக்குவந்து சாக்குகள் வாங்க ஆரம்பித்தனர். ராம்செல்லா கம்பெனியின் முன்னால் கூட்டம் சொல்லமுடியாது. மோட்டார்கள் நிறுத்தக்கூட இடமில்லை. கடைக்குள்ளே போட்டிருந்த எலக்டிரிக் விளக்குகளின் பிரகாசம் கண்ணைப் பறித்தது. அங்கே கன்னிப்பருவமும் கட்டழகும் ஒருங்கே அமையப்பெற்ற நமது சுந்தரி நவநாகரிகத்துக்கேற்றவாறு தன்னை அலங்கரித்துக் கொண்டுவந்த சீமாட்டிகளையும் சீமான்களையும் புன்னகையுடன் வரவேற்று துணிகளை எடுத்துக் காண்பிப்பதும் விலைகூறுவதும் விற்பதுமாக இருக்கும் காட்சியைக்க[illegible] வியப்படையாதார் யாருமில்லை. இவ்வாறாக ராம்செல்லா கம்பெனியில் விய[illegible]பாரம் அமோகமாய் நடைபெற்றதன் காரணமாக அவ்வருடம் சகல செலவு நீங்கி முப்பதினாயிரம் ரூபாய் லாபம் நின்றதென்றால் அதற்குக் காரணம் நமது சுந்தரியைத் தவிர வேறு என்னவாயிருக்கக்கூடும்!

நிற்க, ராம்செல்லா அண்டு கம்பெனியின் ப்ரோப்ரைடர் மிஸ்டர் கோபாலசாமி செட்டியாரைப்பற்றிச் சற்று கவனிப்போம். இவருக்கு சுமார் 40 வயதிருக்கும். இயற்கையிலேயே விரும்பத்தக்க நடை உடைபாவனை உடையவர்தான். ஆனால் கொஞ்சகாலமாக இவர் சுந்தரியின் அழகில் ஈடுபட்டு விட்டார். அதற்கேற்ற தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டே வந்தார். சுந்தரி ஒரு கற்புக்கரசி என்பதை அவளுடைய நடை உடைபாவனைகளிலிருந்து செட்டியார் நன்கு தெரிந்திருந்தபோதிலும் தான் ஒரு திரண்டசெல்வந்தர் என்ற காரணத்தாலும், சுந்தரி தன் கீழ்வேலை செய்யக்கூடியவள்தானே என்ற அலக்ஷிய புத்தியினாலும் தான் எந்தவிதத்திலும் சுந்தரியின் அன்பைப்பெற முடியுமென்று திடமாக நம்பினார்.

ஒருநாள் செட்டியார் தன் காரியாலயத்திலிருக்கும்போது ஏதோ வேலையார்த்தமாக சுந்தரி அவ்வறையினுள் நுழைந்தாள். செட்டியார் தன் ஆசனத்தைவிட்டெழுந்து புன்முறுவல் செய்துகொண்டேவந்து சுந்தரியின் கரத்தைப்பற்றி மெதுவாக அழுத்தினார். அப்போது சுந்தரி செட்டியார் பிடியினின்றும் விடுவித்துக்கொண்டு, 'தாங்கள் இவ்விதம் செய்வதின் நோக்கம் என்னவோ?' என்று வினயமாகக் கேட்டாள்.

'கண்ணே! கொஞ்சநாளாக நான் படும் அவஸ்தையை……………… அறிவான். நீ அறிவிற் சிறந்த பெண்மணி. உனக்கு அதிகம் ஒன்றும் சொல்லத் தேவையில்லை. என்மீது மனம் வைப்பாய் என்று நினைக்கின்றேன். எங்கே இப்படிவா' என்றார்.

'ஐயா! வியாபாரம் செய்வதற்காக மட்டும்தான் நான் உங்கள் கம்பெனியில் சேர்ந்தேனே அல்லாது இத்தகைய அடாத காரியம் செய்யச் சேரவில்லை. மேலும் சென்ற ஒரு வருஷகாலமாக மிகவும் கண்ணியமாக நடந்து கொண்ட நீங்கள் இப்போது இத்தகைய அர்ப்பத்தனத்திலிறங்குதல் சரியல்ல' என்றான் சுந்தரி.

சுந்தரியின் வார்த்தைகள் செட்டியாருக்குக் கோபத்தை உண்டாக்கின. 'அடி அற்பப்பதரே! நீயா எனக்குப் புத்தி புகட்டுபவள்!' என்று கூறிக் கொண்டே சுந்தரியின் ஜடையைப்பற்றி இழுக்கலானார். அதேசமயம் சுந்தரியும் தன்னிடத்திலிருந்து வேகமாக அடி எடுத்துவைத்தாள். இதனால் செட்டியார் பிடித்து இழுத்த ஜடையானது கையுடன் வந்துவிட்டது. சுந்தரியின் தலை இப்பொழுது ஒரு அழகிய கிராப்புடன் விளங்கியது. இதைக் கண்டு ஆச்சரியமுற்ற செட்டியார், 'என்ன! நீ ஒரு ஆண்பிள்ளை போலல்லவா காண்கிறாய்!' என்று ஆச்சரியத்துடன் பிதற்றவாரம்பித்தார்.

சுந்தரி:—ஐயா! ஆம், நான் ஆண்பிள்ளைதான். என் பெயர் சுந்தரம். வேலையில்லாது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது உங்கள் விளம்பரத்தைக் கண்டேன், எப்படி நீங்கள் காலத்துக்கேற்ற கோலமெடுத்து உங்கள் ...பாரத்தை விருத்திசெய்ய எண்ணினீர்களோ அதேபோல் நானும் ...த்துக்கேற்ற கோலமெடுத்துப் பிழைக்க எண்ணினேன். நாம் இருவரும் ...முயற்சியிலும் வெற்றி பெற்றோம். ஆதலால் நீங்கள் என்மீது கோபிக்க ...ாது' என்றான்.

செட்டியார்:—சுந்தரம்! உன் சாமர்த்தியத்தை மெச்சினேன். சித்தப் ...ரமையால் நான் செய்த தவறுதலை யாரிடமும் தெரிவிக்க வேண்டாம். முன்போலவே வியாபாரம் நடக்கட்டும். இன்றுமுதல் உனக்கு நமது கடையில் ஒரு அணா கூட்டித்தந்திருக்கிறேன்' என்றார்.

சுந்தரம் மிக்க சந்தோஷத்துடன் பழையபடி தன் ஜடையை வைத்துக் கொண்டு வியாபாரத்தை கவனிக்கச் சென்றான்.

---


# தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில்போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5 நிமிஷத்தில் தலைவலி நீங்கும்; தவிர உடம்புவலி, கைகால்வலி, இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வைவிட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம்மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை அணா 8.

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

# கானகத்தில் மறைந்த காதலர்கள்

[சுசீலா]



அன்று இரவு எட்டுமணிக்கு ஆரம்பித்த மழை பத்து மணியாகியும் கூட ஓய்ந்த பாடில்லை. சுமார் 11 மணிக்குத்தான் சற்று நின்றது. அவ்வளவு சீக்கிரமாகவாவது ஓய்ந்ததைக் குறித்துச் சந்தோஷங்கொண்ட தனசீலன் தான் ஒண்டிக் கொண்டிருந்த இடத்தை விட்டுப் புறப்பட்டான்.

மழை ஓய்ந்துவிட்ட போதிலும் வழியெல்லாம் தண் இன்னும் ஓடியது. சிறுசிறு தூற்றலுமிருந்தது. அதுவும் அ காட்டுப் பாதையில் கத்தாளை புட்களுக்குக் குறைவில்லை, ம பெய்த சந்தோஷத்தால் தவளைகள் எல்லாம் ஒரு பெரிய சங்கீ கச்சேரிசெய்து கொண்டிருந்தன. வான வெளியில் மினுக் மினு கென்று மின்னிக்கொண்டிருந்த நட்சத்திரங்களின் வெளிச்ச தினாலும், இடையிடையே பளிச்பளிச்சென்று கண்களையும் பறித்துச் செல்லும்வண்ணம் மின்னுகின்ற மின்னலின் ஒளியாலும் தன் வழியை ஒருவாறு தெரிந்துகொண்டு தட்டுத்தடுமாறிச் சென்றான். அந்தக் காரிருளில் மரங்கள் மலிந்து நிற்கும் தனிக் காட்டின் மத்தியில் செல்லும் ஒற்றையடிப் பாதையில் தன்னந் தனியனாய்ச் செல்லும் இவனுக்குத் தன் கையிலிருக்கும் ஒரு சிறு தடிதான் துணை.

அவ்வழி சுமார் 4 மைல்தூரம் சென்றதும் அது மரங்க ளடர்ந்து இருண்டு கிடந்த ஓர் தோப்பிற்குள் சென்று முடிந்தது. அதற்குள்ளமைந்த ஓர் ஓட்டை மண்டபத்திலிருந்துவந்த வெளிச் சத்தை நோக்கிச் சென்ற வாலிபன் தரையில் படுத்திருந்த ஓர் யுவதியை 'பாலா! பாலா!' என்று இருமுறை கூப்பிட்டான். எதைப் பற்றியோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்த அவளுக்கு இவன் பின்புறமாக வந்து நின்றதும், கூப்பிட்டதும் தெரியவில்லை. நித்திரை செய்கிறா ளென நினைத்து மழையில் நனைந்து பனிக்கட்டியைப்போல் குளிர்ந்து போயிருந்த தன் கரத்தை அவள்மேல் வைத்தான்.

வாரிச்சுருட்டி எழுந்த அவள் 'ஓ! நீங்கள் தானா! கொஞ்சநேரத் தில் இப்படிப் பயப்படுத்தி விட்டீர்களே! ஏன் இவ்வளவு நேரம்?

என்று புன்னகை ததும்பிய மொழியில் கேட்டாள். 'அதெல்லாமிருக்கட்டும். இப்பொழுதே நாம் இவ்விடத்தைவிட்டுப் புறப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்துத்தான்' என்று பதட்டத்தோடு கூறினான்.

அவன் பதட்டத்தையும் கூறிய வேகத்தையும் கண்ட யுவதி திடுக்கிட்டு 'என்ன ஆபத்தா!! நமக்கா? நமக்கு யார் தீங்கிழைக்கக் கூடும்? நீங்கள் கூறுவது ஒன்றும் விளங்கவில்லையே!'

'விளங்கும்படி கூற இது நேரமல்ல. உன் தந்தையால்தான் எல்லாம் நடக்கிறது!' என்று சுருக்கக் கூறினான். அவளுக்கும் விஷயம் ஒருவாறு தெரிந்துவிட்டது.

அடுத்த நிமிடமே அப்பாழும் மண்டபத்தை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள் இருவரும். செல்லும் வழியில் நரிகள் ஊளையிடுவதும், காற்றினால் அசைந்தாடும் பனைமட்டைகளின் பயங்கர சப்தமும் பாலாவிற்கு மிகுந்த பீதியை உண்டுபண்ணவே தன் லன் கையை இறுகப் பிடித்துக்கொண்டு அவனை மிகவும் ருங்கியவண்ணம் சென்றாள். அவளின் கோழை நெஞ்சை யறிந்த வன் தைரியம் கூறிக்கொண்டே சென்றான்.

* * *

மாசிலாமணிப் பிள்ளைக்குப் பிறந்த புதல்விகள் சண்பகம், சகுந்தலை, பாலாமணி என மூவர். இம்மூவரில் மூத்த பெண்ணாகிய சண்பகத்தைத் தன் தங்கை குமாரன் தனசீலனுக்குக் கொடுப்பதாக வாக்களித்திருந்தார் பிள்ளை.

தனசீலன் நல்ல அறிவாளி. 'மாமியும் மருகியும் ஒத்து வாழ்த வரிது' என்ற வாக்கின்படி அவனுக்கு லக்ஷ்மிகடாக்ஷம் குறைந்தும், சரஸ்வதி கடாக்ஷம் மிகுந்துமிருந்தன. பொறுமையே உருவாய் வந்தோன் என்று சொல்லுவதும் மிகையாகா. அழகும் வாய்ந்தவன். மேனாட்டுக் கல்வி அதிகம் கற்றிருந்த போதிலும் மற்ற நவீன வாலிபர்களைப்போல் அவனிடம் மமதை யென்பதே கிடையாது.

சண்பகம் மணப்பருவம் அடைந்த சின்னாட்களுக்குள்ளாகவே பல பேர்கள் பல இடங்களிலிருந்தும் பெண்கேட்டு வந்தார்கள். மாசிலாமணிப் பிள்ளையும் தன் தங்கை குமாரனுக்குக் கொடுப்பதாக வாக்களித்திருந்த அவளை ஒரு பெரிய தனவந்தர் புதல்வனுக்கு மணம் முடிக்க நிச்சயம் செய்துவிட்டார். இவ்விஷயத்தில் அவர் தன் பெருக்கேற்ப நடந்துகொள்ளாமல் யாசுற்றவரானார். தனசீலனும் கலியாணத்திற்குச் சென்றான். ஆனால் மனதில் சற்று வருத்தம்தான். தனசீலனின் தாயார் (விதவை) இதை குறித்துப் பின் ஒரு ஒருமுறை தன் அண்ணனிடம் கேட்டபொழுது அவர் 'இப்பொழுது என்ன காரியம் மூழ்கிப் போய்விட்டது. சகுந்தலாவை நிச்சயமாய்

உன் மைந்தனுக்கே கொடுத்து விடுகிறேன்' என்று சமாதானப் படுத்தி யனுப்பிவிட்டார்.

தனமில்லாத தனசீலனும் அதை ஒரு பொருட்டாக நினையாமல் சகுந்தலாவையாவது மணக்கலாமென்று கருதி இருந்தான். ஆனால் அவளையும் ஒரு செல்வந்தனுக்குத் தன் மாமன் கொடுத்து விடுவாரென்று கனவிலும் கருதவில்லை. மணம்முடிந்து சகுந்தலாவும் பதி வீடு சென்றுவிட்டாள். தன் மாமன் தன்னை இவ்விதம் இருமுறை ஏமாற்றம் அடையச்செய்து அவமானப்படுத்தியது மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது அவனுக்கு.

இரண்டு மாதங்கள் சென்றன. அவனது அருமை அன்னையும் இவ்வுலக வாழ்வை நீத்தாள்.

'சிறு வயதிலேயே தந்தையை இழந்த யான் அவர் வைத்துச் சென்ற சொற்பப் பொருளையும் படிப்பில் செலவிட்டு விட்டேன். அதன்பின் மாமனின் உதவியாலும், தாயாரின் உதவியாலும் இவ்வளவு காலம் வாழ்ந்து வந்தேன். பணமில்லாப் பெருங்கு யால் என் மாமனும் என்னை இருமுறை அவமதித்துவிட்டார். இ இவ்வுலகில் எனக்கென்ன விருக்கிறது' என்று ஏதேதோ பலவா எண்ணமிட்டுக்கொண்டே நித்திரைவாராது படுக்கையில் புரண் கொண்டிருந்தான்.

இரவு சுமார் ஒரு மணியிருக்கும். நல்ல காரிருள். கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. சற்று நிதானித்து படுக்கையிலிருந்த படியே 'யார் அது' என்றான். 'நான்தான் திறங்கள் கதவை' என்ற அம்மறுமொழி அவன் கேட்டுக் கேட்டுப் பழக்கமுடைய தொனியா யிருந்தமையால் உடனே ஓடிப்போய் கதவைத் திறந்தான்.

'பாலா! இந்த நடுநிசியில் எங்கே வந்தாய்? மாமாவிற்கும் வந்தது தெரியுமோ.......' என்றான்.

'அந்த நன்றிகெட்ட மாமன்மேல் இன்னுமா உங்களுக்கு அபிமானம்? போங்க அத்தான். அவர் என்னையும்கூட வேறு ஒரு தனவந்தருக்கு மணம் முடிக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன். அப்படி கடந்தேறுமானால் உங்கள் மனம் மிகவும் நொந்துவிடுமே யென்று பயந்து ஒருவரிடமும் சொல்லாமல் வந்துவிட்டேன். வாருங்கள், நாமிருவரும் இப்பொழுதே வெளியூர் சென்றுவிடுவோம்' என்று கூறினாள்.

தனசீலன் முதலில் இதை நம்பவில்லை. முடிவில் அவள் உள்ளத்தை நன்றாய் அறிந்துகொண்டு அப்பொழுதே புறப்பட்டு வெகு தூரம் வந்து கானகத்திலுள்ள அந்த மண்டபத்தில் தங்கினார்கள். பாலாவை மண்டபத்திலேயே விட்டுவிட்டு மறுநாட்காலை தனசீலன் தன் ஊர் திரும்பி வந்து தன் மாமன் வீட்டார் பாலாவைத்

திருர்களாவென்று உளவறிந்து செல்லவே வந்தான். வந்த இடத்தில் மழை ஆரம்பித்துவிட்டபடியால் அன்று இரவு அவ்வளவு தாமத மாகச் சென்றான். அதற்குமேல்தான் பாலாவையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

* * *

இவ்வாறு தனசீலன் தன் இன்னுயிர்க் காதலிக்குத் தைரியம் கூறிக்கொண்டே அக்காரிருளில் சென்று கொண்டிருக்கையில் பாலாவின் பாதங்களில் ஏதோ தட்டுப்பட்டு உடனே துள்ளிக் குதித்தாள். அடுத்த விநாடி 'ஐயோ! என்ற பெருத்த சப்தத்தோடு குனிந்து தன் காலைத் தொட்டுப் பார்த்துவிட்டு 'அத்தான் ஏதோ பூச்சி கடித்துவிட்டது. இரத்தம் பெருகுகிறது' என்று கூறி முடிக்குமுன் தனசீலனும் துள்ளிக்குதித்தான். 'என்னையும் தான் கடித்துவிட்டது' என்று சொல்லிக்கொண்டே சட்டென்று தன் னிடமிருந்த நெருப்புப் பெட்டியில் ஒரு குச்சியை கிழித்தான். மழை யால் நனைந்துபோயிருந்தபடியால் நெருப்புப் பற்றவில்லை. அதே ...ளையில் ஒரு மின்னல் பளிச்சென்று மின்னவே அவர்களைக் கடித்த ... நெளிந்து நெளிந்து செல்வதை இன்னதென்று அவன் கண்டு ...டான். ஆனால் அவளுக்குமாத்திரம் உண்மையை உரைத்தானில்லை.

... தன்மேல் வஸ்திரத்தை கிழித்து விஷம் மேலே ஏறுவண்ணம் ...த்த இடத்திற்குமேல் இறுகக்கட்டிவிட்டு அவளையும் கைத்தாங்க ...க அழைத்துச் சென்றான். இரண்டு பர்லாங்தூரம் சென்றிருப் பார்கள். காட்டின் வழியை யெல்லாம் கடந்து இராஜபாட்டைக்கும் வந்துவிட்டார்கள். அதற்குமேல் அவர்களால் ஒரு அடியும் எடுத்து வைக்க முடியவில்லை. பாலாவிற்கும் மயக்கம் மேலிட்டது. அதற்கு மேல் தன்னால் நடக்க இயலாதென்று அருகேயிருந்த ஓர் ஆல விருக்ஷத்தினடியில் போய் பாலா உட்கார்ந்துவிட்டாள். தனசீலனும் தன் வலியை அவளிடம் கூறாமல் அவளருகே அமர்ந்து தைரியங் கூறிக்கொண்டேயிருந்தான். ஆயினும் என்ன பயன்? பாலா அப்படியே அவன் மடியில் சாய்ந்து படுத்துவிட்டாள். தனசீலனின் கண்கள் முத்துமுத்தாய் நீரை உதிர்த்தன.

அவனுக்கும் கண்கள் இருண்டன, மெய்சோர்ந்தது. மனம் தடுமாறியது. நரம்புகள் குழைந்தன. பற்கள் கட்டிவிட்டன. காது கும்மென்று செவிடுபட்டது. அப்படியே தரையில் சாய்ந்துவிட் டான். பாலா அவன் மடியில் தலைவைத்தபடியே கிடந்தாள். இக் கோரக் காட்சியைக் காண கீழ்த்திசையில் தன் செங்கதிர்களைப் பரப்பி கதிரவனும் எழுந்தான்.

• • •

பாலாவின் வீட்டில் ஒரே அல்லோலகல்லோலமாயிருந்தது. ... இரகசியத்தை வெளியிட்டால் தனக்கு அவமானமென்று

கருதிய மாசிலாமணிப்பிள்ளை ஒருவருக்கும் தெரிவிக்காமலே பல பேர்களை யனுப்பிப் பல இடங்களிலும் தேடச்செய்து காணப்பெருராய், அன்று இரவு அவரும் இன்னும் சிலரும் தனசிலன் வீட்டிற்குச் சென்றார்கள். வீடு பூட்டப்பட்டிருந்தது. பக்கத்தில் விசாரித்ததில் தனசிலன் அன்று அதிகாலையிலிருந்தே காணப்படவில்லையென்று அறிந்துகொண்டு இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு 12 மணிக்குமேல் அவரும், நண்பர்கள் சிலரும் வண்டி கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள்.

புத்தூரிலிருந்து செல்லுகின்ற ராஜபாட்டை ஒன்றுதான். அவ்வழிதான் தனசிலன் சென்றிருக்கக் கூடுமென நினைத்து வண்டியை அவ்வழியே செலுத்தினார்கள். சுமார் 10 மைல்தூரம் வந்துங்கூட வழியில் ஒருவரும் தென்படவில்லை. வண்டியும் மெதுவாகவே சென்றது.

ஓர் ஆலமரத்தடியில் இரண்டுபேர்கள் படுத்திருப்பதை தூரத்தில் வரும்பொழுதே கண்டுவிட்டார் மாசிலாமணிப் பிள்ளை. வண்டி[illegible] அந்த இடத்திலேயே நிறுத்திவிட்டு தன் கூடவந்த சி[illegible] சந்தடி செய்யாமல் மரத்துக்கு மரம் மறைந்துகொண்டே [illegible] ஆலமரத்தை யடைந்தார்.

மனத்தின்கண் மாசற்ற காதலர்கள் இருவரும் தூயநித்தி[illegible] புரிவதை யறியாத பிள்ளையவர்கள் அவர்களிருவரும் இரவெல்ல[illegible] நடந்த களைப்பால் அயர்ந்து துயில்கிறார்களெனக் கருதி 'அடே பாதகா!! இப்படி என்னை அவமானப்படுத்த எத்தனைநாள் காத்திருந்தாய்' என்று கோபாவேசத்தோடு தன் காலால் ஓங்கி தனசிலனை உதைத்தார். உதைத்த அதிர்ச்சியால் அவன் உடல் அசைந்ததே யொழிய அவன் எழுந்தானில்லை.

கூட நின்றுகொண்டிருந்த சிலர் சந்தேகித்து அவனுக்கு மூச்சு வருகிறதாவென்று சோதித்தனர். மூச்சில்லை. பாலாவைச் சோதித்தார் பிள்ளை. அவளும் அதே நிலையில் கிடந்தாள். 'ஐயோ! இரு உயிர்களுக்கும் உலைவைத்த பாவி நான்தான்!' என்று முகத்தில் அறைந்துகொண்டு 'ஹோ'வென்று கதறினார்.

மழையில் நனைந்து குளிர்ந்து போயிருந்த தரையில் தலைசாய்த்த அவர்கள் தேகமும் குளிர்ந்து போயின. நாகம் கடித்து உயிர் வாழ்ந்தோர் நாட்டில் வெகு சிலரே யன்றோ!

ஆலமரத்தினடியில் ஆருயிர்க் காதலர்களின் ஆவி பிரிந்த இடத்தில், அவ்வழியாக வரும் பாதசாரிகள் தங்கி இளைப்பாறிச் செல்லும்வண்ணம் அவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட சிறந்த மண்டபத்தை இன்றும் புத்தூரினருகில் காணலாம்.

---

# இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியை யளிக்கும்.

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தியுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை நிறுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் ... தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சாத்தையு 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப்போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதல இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வா தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணு அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும். தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

கவனிப்பு:—இன்னும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் ஒன்று மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்.
31, வைத்தியநா

# காங்க்ரீன் என்னும் இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

வஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என்
வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரி
பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள்
டயபடிக் கோமா) வந்து இனி. இக்கேச
னக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயப்
) குணம் தராத காலத்திலாவது இதை
ரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில்
யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு
தரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது
என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும்
க் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி,
பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும்
ர்களுக்கும் டாக்டர் குருசாமி முதலியாருக்கும், கிருஷ்ணசாமி
யங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம
யங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலை, அறையாப்புக் கட்டி இவைகளையும் எத்தகைய ராஜ கட்டிகளையும், புரைப் புண்களையும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் ரோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

ணக்கற்ற இரணங்களும், இராஜகட்டிகளும் குண
த்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லா
பிடவில்லை.

ம. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்